

கல்கி




KALKI
19.3.1967 40 காசு



பரவசமூட்டும்
பரிமளமுள்ள பவுடர்

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்



**இந்த ஒப்பற்ற பவுடர்
உங்களை நாள் முழுவதும்
நறுமணத்துடனும்
இன்ப உணர்ச்சி
யுடனும் வைக்கும்**

வறுத்தெடுக்கும் வேளையிலும்கூட வசந்த காலையின் இனிய புதுமையையும் மாலைத் தென்றலின் கிளுகிளுக்கும் குளுமையையும், உடலைத் தழுவி நிற்கும் நறுமணத்தையும் தரக்கூடிய அலாதி பவுடர் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்! வியர்வையின் அருவருப்பிலிருந்து அது உங்களுக்கு விடுதலையளிக்கும். அதை உடல் மீது தாராளமாகத் தூவிக் கொண்டால் பொங்கும் ஆனந்த லாகிரியில் பூரித்துப் போவீர்கள். நீங்கள் மட்டுமல்ல, உங்கள் வீட்டில் உள்ள எல்லோரும் தான்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏயில் இணைக்கப்பட்டது)

JWT P 4596(R)

கல்கி

பொருளடக்கம்

பராபவ, பங்குனி, 5 - மார்ச், 19

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


நினைவுத் திரையில்....

நாடகம் பாடசாலை மாணவிகளால் பள்ளிக்கூடக் கட்டிடத்தில் நடத்தப்பட்டது. கட்டிடம் என்றால் கட்டிப்போட்டு வைக்கும் இடம் என்று பொருள் செய்து கொள்ளலாம். நாடகம் நடந்த ஒரு மணி நேரத்துக்குள், 'அப்பாடா! நாடகம் எப்போது முடியும்? வெளியில் எப்போது புறப்படலாம்?' என்று ஆகிவிட்டது. 'ஐயோ பாவம்! ஒரு மணி நேரம் நமக்கு இங்கே உட்கார்ந்திருக்க இவ்வளவு கஷ்டமாக இருக்கிறதே. ஆயிரம் பெண் குழந்தைகள் இந்தக் கட்டடத்துக்குள் உட்கார்ந்து தினம் ஆறு மணி நேரம் எப்படித்தான் கஷ்டப்படுகிறார்களோ' என்று அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. ஆனால் நான் எதற்காக அந்த இட நெருக்கடியில் ஒரு மணி நேரமும் உட்கார்ந்திருந்தேனென்றால், முதலாவது வெளியேற வகையில்லாதபடி பெண் குழந்தைகள் வழியை அடைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்; இரண்டாவது நாடகமும் நன்றாக இருந்தது!

—ரா. கி.

(" வாதநட்சேணையில் பாதி" என்ற கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.)

கல்கி, 18-1-1948.


யாரால் நல்லாட்சி தர முடிகிறது என்பதை
நானே பார்த்துக் கொள்கிறேன்!
காங்கிரஸல்லாத மந்திரி சபைகள்
மக்கள்
காங்கிரஸ் மந்திரி சபைகள்
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 33



உண்மைச் சமஷ்டி வருக வருகவே!

(1)

காங்கிரஸ் கட்சியின் பணபலத்தையும், அதிகார பலத்தையும் கண்டு அதைத் தில்லிப் பீடத்திலிருந்து அகற்றவே முடியாது என்றுதான் சமீபகாலம் வரையில் அனைவரும் எண்ணியிருந்தனர். காங்கிரஸாட்சியில் வெறுப்படைந்து, அதை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் விரும்பிய போதிலும் அது சிரமசாத்தியம் என்பதால் அவை ஒன்று கூடி முயற்சி எடுப்பதில் முனையவில்லை. ஒவ்வொரு கட்சியும் தனது தனி உருவத்தில் மிகவும் பற்று வைத்திருந்ததும் அவை அகில இந்திய ரீதியில் விட்டுக் கொடுத்து ஒன்றுசேராததற்கு ஒரு காரணம். எனினும் இன்று தேர்தலுக்குப் பின் காங்கிரஸுக்கு மக்கள் சபையில் மிகக் குறைந்த மெஜாரிட்டியே கிடைத்திருப்பதைப் பார்த்த பிறகு, தில்லி சர்க்காரே காங்கிரஸ் கட்சியிடமிருந்து கைமாறக் கூடிய சாத்தியக் கூறும் உண்டு என்பது தெளிவாகியிருக்கிறது. இப்போது மக்கள் சபையில் உள்ள எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து எதிர்காலத்தில் காங்கிரஸுக்கு மாறாகக் கூட்டு சர்க்கார் அமைக்கக்கூடிய வாய்ப்பைப் பற்றிச் சிந்திக்க அவகாசம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சியினர் தத்தம் தனியுருவைக் காப்பதற்காகத் தனித்தே இருப்பது நல்லதா என்று தீவிரமாக எண்ணத் தொடங்கியுள்ளனர். எதிர்க்கட்சிகள் அவை நினைக்குமளவுக்கு உண்மையிலேயே பெருத்த மாறுபாடு கொண்டவையா என்பதும் ஆராய்ச்சிக்குரியது. தனி மனிதர்களைப் போலவே கட்சிகளும் சில அம்சங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்டுத்தான் இருக்கும். இந்தத் தனியம்சங்கள் யாவும் அழிவுபட்டுப் போக வேண்டும் என்று விரும்ப வேண்டியதுமில்லை. எனினும் காங்கிரஸ் கட்சி நிதி, பொருளாதாரம், ராஜரீகம் முதலியவற்றில் செய்த தவறுகளின் விளைவாக நாடு ஒரு பயங்கரமான நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள இன்று எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து உத்வேகத்துடன் ஒரு திசையில் இழுத்தால்தான் தேசம் குழியிலிருந்து விடுபட முடியும்.

சுதந்திரக்கட்சி, ஜனசங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸிலிருந்து பிரிந்து போன கோஷ்டிகள் ஆகியவை அகில இந்திய ரீதியில் ஒன்றுசேரக்கூடிய வாய்ப்பு கண்ணுக்குத் தெரிகிறது. எதிர்க்கட்சிகளின் அதிர்ஷ்டவசமாக, காங்கிரஸுக்கு மிகக் குறைந்த மெஜாரிட்டி கிடைத்திருப்பது காரணமாகவே இக்கட்சிகள் இதய ஐக்கியத்தின் அடிப்படையில் ஒன்றாகச் சேர்ந்து செயலாற்றுவதற்கு முயற்சி எடுக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தி. மு. க. ஏதோ ஒரு பிரதேசத்துக்குரிய கட்சி என்றும் அகில இந்திய அடிப்படையில் அதற்கு முக்கியத்வம் இல்லை என்றும் மேலெழுந்தவாரியாகச் சிலர் நினைத்து விடலாம். இவர்களுக்குத் தி. மு. க. வின் அடிப்படையை ராஜாஜி தெளிவு செய்திருக்கிறார். அதாவது: எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாகச் சுயாதீனம் பெற்று, அவற்றின் சமஷ்டியாகத் தில்லி சர்க்கார் அமைய வேண்டும் என்கிற அகில இந்தியப் பிரச்னையையே தி. மு. க. தனது அடிப்படையாகக் கொண்டது. ஒரே சர்க்கார் நாடு முழுவதும் ஆளுவதை 'யூனிடரி' முறை என்றும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி புரிவதை ஃபெடரல் (சமஷ்டி) முறை என்றும் சொல்வார்கள். அரசியல் சாஸனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுவது. என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்

களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகரசபையின் ஸ்தானத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இந்தியா போன்ற ஒரு பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புக்களை மத்தியில் மட்டும் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அதோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கியாளும் கொடுமையும் சேருகிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்குத் தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே தி. மு. கழகம். அது தேசப் பிரிவினைக் கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியே.

ராஜ்ய சர்க்கார்கள் அதிகமாக அதிகாரம் பெறுவது பற்றி ராஜாஜி அடிக்கடி குறிப்பிடுவதற்குக் காரணத்தையும் அவரே விளக்கியுள்ளார். பரப்பளவில் பெரிய பாரதத்தை ஒரு மத்திய பீடத்திலிருந்து ஆளுவது சிரமம். மேலும் இந்தியாவின் பல பிரதேசங் களிலுமுள்ள மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தனிப்பட்ட வாழ் முறைகளையும், இலக்கியங்களையும், மொழிகளையும் ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள். மத்தியக் கட்டுப்பாடோ, பலவந்தமோ இல்லாமல், பிரதேசப் பாங்குகளை வளர்த்துக் கொண்டவர்கள். எனவே யதேச்சாதிகார மத்தியக் கட்டுப்பாட்டின் நெரிசலுக்கு நாடு முழுவதையும் உட்படுத்துவது தகாது. எனினும் இப்போது நாடு முழுவதும் பொருளாதாரத்தின் மூலம் ஒன்றுகி யுள்ளபடியால் இதற்கு அநுகூலமாக ஒரு மத்திய அமைப்பு வேண்டியதே.

ராஜ்ய சர்க்கார்கள் உரிய சுயாதீன அதிகாரம் பெற்று, மத்திய சர்க்கார் தனக்குரிய எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்கும் காலம் அடிவானத்தில் தெரிகிறது. உண்மையான சமஷ்டி அரசாங்கமே நிர்வாகம் திறமையாக நடக்க வழி.

(2)

நாட்டை இன்ஸால்வென்ட் நிலைக்குக் கொண்டு வரும் திட்டங்களின் மூலம் முன்னேற்றமும் சுபிட்சமும் அடைய எந்தப் புத்திசாலி மக்களும் முயல மாட்டார்கள். எனினும் இதுவே காங்கிரஸின் தேசியக் கொள்கை. காங்கிரஸ் நிருமாணித்த மாயையிலிருந்து நாடு விழித்து எழ வாய்ப்பு வந்திருக்கிறது. பிரத்தியட்ச நிலைக்கு ஒவ்வியதாகவும், அடக்கமுள்ளதாகவும் திட்டமிட வேண்டும் என்பதை நாடு புரிந்துகொள்ளச் சமயம் வந்திருக்கிறது.

முன்னாள் முதல்வர் சொன்னதுபோல் விஷக் கிருமி பரவுகிறதோ, அல்லது அரசியல் ஆரோக்கியம்தான் திடீரென்று வெடித்துப் பரவுகிறதோ, 'இந்தியா முழுவதிலுமே புதிதாக ஏதோ ஒன்று பரவியிருக்கிறது' என்று 'நியூயார்க் டைம்ஸ்' கூறுகிறது. இது உண்மை. ஆனால் வெளிநாட்டுப் பத்திரிகைகள் காங்கிரஸின் பலம் வெகுவாகக் குறைந்து விட்டதால் இந்திய தேசமே பலவீனமடைந்து விட்டதாகவும், இனி இந்தியா முன்போல் உலக நாடுகளிடையே செல்வாக்குப் பெற முடியாது என்றும் கருதுகின்றன. வாஸ்தவத்தில் காங்கிரஸின் வீழ்ச்சியால் நாடு வீழ்ந்து விடவில்லை. காங்கிரஸை வீழ்த்தக் கூடிய அரசியல் ஆரோக்கியம் நாட்டில் திடீரென வெடித்துப் பரவியிருப்பது நாம் மகிழ வேண்டிய நல்ல நிலையையே குறிக்கும்.

இந்தியாவின் உலகச் செல்வாக்கு பற்றிப் பார்ப்போம்: அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கும் சமானமாக ஒரு மூன்றாவது சக்திக்கு இந்தியா முன்னணி தாங்க வேண்டும் என்பது நேரு அவர்கள் கண்ட கனவுதான். இந்த

காமகோடியின் கருணைமொழி



இகத்திலும் பரத்திலும் நமக்குச் சுகம் அளிக்கக் கூடியது தர்மம். தர்மத்துக்கு மூலம் பகவான். தர்மத்தால் மனிதன் இன்பத்தை அடைகிறான். அதர்மத்தால் துக்கத்தை அடைகிறான். எது தர்மம், எது அதர்மம் என்று எப்படிக் கண்டுபிடிப்பது? வேதங்கள்தாம் அதற்குப் பிரமாணம். அதை நிர்ணயிக்க யுக்தி போதாது. யுக்தி செல்லாத இடங்கள் உண்டு. ஒரு புஷ்பத்தின் நிறத்தை மூக்கினால் அல்லது காதினால் தீர்மானிக்க எண்ணுவது போலாகும், நமது யுக்தியால் தர்மத்தை நிர்ணயிக்க எண்ணுவது. தர்ம மார்க்கத்தில் நம்மைச் செலுத்த யுக்தி சக்தியற்றதாகும்.

அந்தஸ்தை இந்தியா எதிர்பார்க்கவுமில்லை; விரும்பவுமில்லை. தான் உலக அரங்கில் ஒரு ராட்சத சக்தியாகப் பரிணமிக்க வேண்டும் என்று இந்தியா கருதவில்லை. உள்நாட்டு நிலைமையைச் செம்மைப்படுத்திக் கொள்வதிலேயே இன்று தேசத்தின் கவனம் முழுவதும் உள்ளது. மத்திய சர்க்காரின் யதேச்சாதிகாரம் அகன்று, ராஜ்யங்கள் தமக்குரிய சுதந்திரத்துடன் முன்னேற்றம் கண்டாலே இந்திய மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டுவிடும்.

காங்கிரஸின் தோல்வியால் இந்தியாவே சிதறுண்டு போகும் என்று கொள்ள வேண்டியதில்லை. அடக்கமாகவும் விவேகமாகவும் திட்டமிட்டால் அது நல்ல முன்னேற்றம் கண்டு, தார்மிக பலத்துடன் விளங்கும். ஆயுத பலத்தைக் கொண்டு வல்லரசாகியுள்ள நாடுகளை விட இந்தத் தார்மிக பலம் அதிக சக்தி தரும். இந்த தர்ம பலத்தால் மனித குலம் ஆயுதப் போட்டியால் நாசமுறுவதைத் தடுக்கவும் உதவலாம். உலகில் மூன்றாவது சக்தியாவதை விட, இவ்வாறு மக்கள் குலம் வாழ உதவுவதே பெரும் பணி அதுவே நமது முனிவர்களுக்கு நாம் செய்கிற கடமையாகவும் இருக்கும்.

நல்ல நிருவாகத்தை அளிக்கத் தவறிய கட்சியை — தவறான கொள்கைகளைப் பின்பற்றிய கட்சியை — சுயநலமிகளின் கூட்டம் பெருகிவிட்ட கட்சியைப் பலவீனமாக்கியது குறித்து வருந்த அவசியமில்லை. கடனைத் தீர்க்கும் செலவு, பாதுகாப்புச் செலவின் உயர்வு, நிருவாகச் செலவு அதிகரித்திருப்பது, வரிச் சுமை, விலைவாசி உயர்வு — எல்லாமாகச் சேர்ந்து உண்டாக்கியுள்ள தேசிய நெருக்கடியைத் தேசத்தின் விவேகம் முழுவதையும் திரட்டிச் சமாளிப்பதே அவசரமும் அவசியமுமாகும். இதுதான் இன்றைய பிரச்னையே அன்றி, பலம் குறைந்த காங்கிரஸின் பார்லிமென்டரித் தலைவர் யார் என்பதோ, காங்கிரஸ் அக்கிராசனராக யார் இருப்பார் என்பதோ அல்ல. இத்தகைய விவேகமும் அடக்கமும் நாட்டு அரசியலில் மேவப் பிரார்த்திப்போம்.

சரியான 'சாரி'

சென்னை முதன்மந்திரியாகப் பொறுப்பேற்றவுடன் நடத்திய நிருபர் கூட்டத்தில் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் ஒரு விஷயத்தை மிகத் தெளிவாக எடுத்துரைத்ததற்கு நாம் அவரைப் பாராட்ட வேண்டும். அவர் இடதுசாரியா, வலதுசாரியா என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு எது சரியோ அந்தச் 'சாரி' என்று கூறியிருக்கிறார். உலக நடைமுறையில், சிற்சில சந்தர்ப்பங்களில் வலதுசாரிக் கொள்கையுடையவர்கள் இடதுசாரிக் கொள்கையைக் கடைப்பிடிக்க நேர்கிறது. அதே போல் இடதுசாரிக் கட்சியினர் வலதுசாரிக் கட்சியினரின் கொள்கைகளை மேற்கொள்ள வேண்டியதாகிறது.

அமெரிக்காவில் ரிபப்ளிகன் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்தப்பட்ட கோல்ட்வாட்டர் வெளியிட்டு வந்த கருத்துக்களில் சிலவற்றை டெமொகிராடிக் கட்சி அபேட்சகராகத் தேர்தலில் வெற்றி கண்ட ஜான்ஸன் பின்பற்றவேண்டியிருந்தது. அதேபோல் இடதுசாரிக் கொள்கை கொண்ட கம்யூனிஸ ருஷ்யா வலதுசாரிக் கொள்கைகள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது. முக்கியமான தொழில் நிறுவனங்களில் ''லாப நோக்கு'' புகுத்தப்பட்டிருக்கிறது. கூட்டுப் பண்ணை விவசாய நிலங்கள் தவிர ஓரளவுக்கு மக்கள் சொந்த நிலம் வைத்துக் கொள்ளும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

பெருவாரியான மக்களின் நன்மை எது என்பதைக் கருத்தில் கொண்டோமானால் இடது — வலது கொள்கைப் பிடிவாதங்கள் தளர்ந்து விடத்தான் செய்யும். இது இயற்கை நியதி.

ஆனால் ஒன்று மட்டும் உறுதி. பல இடதுசாரி நாடுகளும் இடதுசாரிக் கொள்கையுடையவர்களும் உண்மையான முன்னேற்றம் காண வேண்டுமானால், வலது பக்கம் சாய்ந்தால்தான் சாத்தியம் என்பதைக் கண்டு விட்டார்கள் !

ராஜாஜியின் கருத்துக்கள்

சுயேச்சை அங்கத்தினர்கள் இருவகைப்படுவர். உண்மையாகவே சுயேச்சையான மனப்போக்கு உள்ளவர்கள் — அல்லது திறந்த மனப்பான்மை படைத்தவர்கள் ஒருவகை. இவர்கள் ஆள்கிற கட்சி, எதிர்க் கட்சி இரண்டின் கொரடாவுக்கும் ஆட்படத் தயாரா யிருக்க மாட்டார்கள். மற்ற வகையினரோ ஒரு கட்சியில் சேர்ந்து அதை ஆட்சி பீடத்தில் அமர்த்திவிட்டு, அதன் பிறகு தங்கள் கருத்துப்படி நடக்காவிடில் மெஜாரிட்டி பலத்தைக் குறைப்போம் என்று பயமுறுத்திக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவார்கள். பொதுவாக நம் நாட்டில் உள்ள சுயேச்சை அங்கத்தினர்கள் முதலில் சொன்ன பிரிவைச் சேர்ந்தோர் என்று கொள்வதுதான் முறை. எப்படியாயினும் சுயேச்சை அங்கத்தினரின் உதவியை நாடுகிற எந்தக் கட்சியும் பிற்பாடு நேரக் கூடிய இடர்ப்பாடுகளுக்கும் தயாராக இருக்கவேண்டும்.

ஆனால் ஸ்ரீ சம்பூரணானந்தர் போலத் தமது திறமையால் ராஜ்யத்தின் நிலவரத்தை நன்கு மதிப்பிட்டு முதன் மந்திரியைத் தேர்வு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ள ஒரு கவர்னர், சுயேச்சையாளர்களைக் கணக்கிலேயே எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்று கருதி, அவர்களின் தகுதியைக் குறைத்திருப்பது மிகத் தவறாகும். இவ்வாறு அவர்கள் மீது கரியைப் பூசியிருப்பது அரசியல் சாஸனத்தையும், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தையும் மீறுவதாகும்; அவமதிப்பதுமாகும்.

என் மதிப்புக்குரிய நண்பர் ஸ்ரீ சம்பூரணானந்தரே இன்று மக்கள் சபையிலோ அல்லது ஒரு சட்டசபையிலோ அங்கம் வகித்தால் எந்தக் கட்சியிலும் இல்லாமல் சுயேச்சையாக இருக்கவே எண்ணுவார் என்று நான் நினைக்கிறேன். எக்கட்சியுடனும் சேராமல் தனித்திருக்க விரும்புபவர்களுக்கும் மற்ற அங்கத்தினர்களுக்குள்ள பூரண உரிமைகளை அளிப்பதே யுக்தம். அவர்களை அலட்சியப் படுத்தலாகாது.

ஃஃஃ

ராஜ்யங்களின் ஆட்சி புரட்சிகரமான முறையில் மாற்றி யமைக்கப் பட்டிருப்பதன் விளைவாகச் சில மகிழ்ச்சிக்குரிய ஆச்சரியங்களை வரவேற்க நாம் தயாராக வேண்டும். புதிய இந்தியாவில் வங்காளமும் கேரளமும் தலைசிறந்த நிர்வாகத்தைப் பெறும் ராஜ்யங்களாக உருப்பெறக் கூடும். முன்னாளில் ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த குர்னாம் சிங்கின் தலைமையைப் பெற்றுள்ள பஞ்சாபும், அண்ணாதுரையின் தலைமையைப் பெற்றுள்ள தமிழ் நாடும் அவ்வாறே நல்ல முறையில் நிர்வகிக்கப் பெறலாம். இது காங்கிரஸின் ஆணவத்தைக் குறைத்து அது 'அநுபவசாலிகளை'ப் பற்றிப் பேசுவதை நிறுத்தக் கூடும்.

ஃஃஃ

ஆயுதப் போலீஸையும், ராணுவ யூனிட்களையும் விரைவாக அழைத்து, பொது மக்களின் அதிருப்தியால் விளைந்த கிளர்ச்சிகளை நசுக்குவதால் ஒரு சர்க்கார் திறமையுள்ளதாகாது. பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் காரியங்களை உசிதப்படியும் விரைவாகவும் செய்து முடிக்கிற அரசாங்கம்தான் திறமையுள்ளது. மத்திய சர்க்காரைப் பொறுத்த மட்டில், அதன் கருத்துக்கு 'மாறுபட்ட ராஜ்யங்களின் சுயாதீனத்தை ஒடுக்குவதால் அது திறமையுடன் செயலாற்றி விட்டதாக ஆகாது.

இதுவரையில் தில்லியில் உள்ள அரசாங்கம் ராஜ்யங்களின் இணைப்பாக இல்லாமல், தில்லி சர்க்காரின் பல்வேறு மந்திரி இலாகாக்களின் இணைப்பாகவே இருந்து வந்திருக்கிறது. அந்நியக் கடன்களிலும், வரிப் பணத்திலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவைக் கைப்பற்றிச் செலவு செய்வதிலேயே ஒவ்வொரு மந்திரி இலாகாவும் கவனமாக இருந்தது. எப்படி ஒன்றோடொன்று இணைந்து திறமையாகச் செயலாற்றுவது என்பதிலல்ல.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஒரு புதிய அமைப்பு உருவாகி யுள்ளது. ராஜ்யங்கள் தமது ஆட்சிப் பொறுப்புகளைத் தாமே பூரணமாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கி விட்டன. முன்பு போல் ராஜ்ய சர்க்கார்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை ஊக்கி அதன் மூலம் கிளர்ச்சிகளை அடக்குவதால் இனி மத்திய சர்க்கார் 'திறமைசாலி' என்று பெயரெடுக்க முடியாது. சமயோசிதமாகவும் உறுதியுடனும் விஷயங்களைக் கையாண்டால்தான் அது திறமைக்குப் பெயரெடுக்க முடியும். நல்ல நிர்வாகம் நடத்துவதில் ராஜ்ய சர்க்கார்கள் போட்டியிடுமாறு ஓர் உணர்ச்சியை மத்திய சர்க்கார் தூண்ட வேண்டும். தருமத்தின் அடிப்படையில் வெற்றி பெறுவதைத்தான் அரசாங்கம் முக்கியமாகக் கருத வேண்டுமேயன்றி பிடிவாதத்தைக் காட்டியோ, பலாத்காரத்தின் மூலமோ தன் வழி செல்வதைக் கைவிட வேண்டும்.

ஃஃஃ

எதிர்க் கட்சிகளின் கூட்டணிக்கு உழைக்கும் நான், தில்லியில் கட்சிச் சார்பற்ற தேசிய அரசாங்கம் ஏற்பட வேண்டும் என்று சொல்வதால் நாட்டுக்குத் தெளிவான ஒரு வழியைக் காட்டவில்லை என்று டாக்டர் லோஹியா அவர்கள் கூறுகிறார். உண்மையில் இதில் முரண்பாடு ஏதும் இல்லை. ஒரே வில்லுக்கு ஒரு நாண் கயிறு பயன்படாவிடில் உதவுவதற்காக இன்னொரு நாண் கயிற்றைக் கையிருப்பு வைத்துக்கொள்வதுண்டு என்பதை டாக்டர் லோஹியா அறிவார். தேசத்தின் பொருளாதார நெருக்கடி ஒரு மறுக்க முடியாத பிரத்யட்ச உண்மையாகிவிட்டது. இதைத் தீர்ப்பதற்குக் கட்சிச் சார்பற்ற நல்ல மத்திய சர்க்கார் வேண்டும் என்று அழுத்திச் சொல்கிறேன். எனினும் மக்கள் சபையில் எப்படியோ ஒருவித மெஜாரிட்டி பெற்றுவிட்ட காங்கிரஸ் கட்சி இதற்கு இணங்காது என்றே அஞ்சுகிறேன். எனவே நம் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு பலம் வாய்ந்த எதிர்க் கட்சி இருக்க வேண்டும் என்று கருதி அதற்காகவும் முயலுகிறேன்.



மார்ச்
24
முதல்
சென்னை:
வெலிங்டன்
ராக்ஸி
மற்றும்
தென்னுடெங்கும்
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
பக்த
பிரகலாதா
பிரம்மாண்டமான
வண்ணத் தமிழ்
சித்திரம்
டைரக்ஷன்:
CH.நாராயணமூர்த்தி B.A.
வசனம்: ஆரூர்தாஸ்
இசை: ராஜேஸ்வரராவ்
ராஜகோபால் - கிருஷ்ணன்
பாடல்கள்: வாலி - V. சீதாராமன்
திருச்சி தியாகராஜன்
கு.மா.பாலசுப்பிரமணியம்
காமிரா: வின்சென்ட் - சுந்தரம்
கலை: A.K.சேகர்
AVM
PRODUCTIONS



திரு நெடுஞ்செழியன் (கல்வி)



முதன் மந்திரி திரு அண்ணாதுரை



திரு மு. கருணாநிதி (மராமத்து)

வரவேற்கிறோம்

திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மந்திரி சபையை மனமார வரவேற்கிறோம்.

மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. க. அங்கத்தினர் ஒருவர் தேர்தலில் வெற்றி பெற்றவுடனே, ராஜாஜியிடம் ஆசி பெறவந்து, ''தங்கள் கனவு பலித்து விட்டதல்லவா ?'' என்றார்.


ராஜாஜி, ''என் கனவல்ல. இறைவனிடம் நான் செய்து கொண்ட பிரார்த்தனை பலித்தது!'' என்றார். நடக்கக் கூடியதாக இருந்தால் கனவில் காணலாம். கனவிலும் நடக்க முடியாத நிலையைச் சாதிக்கக் கூடியது பிரார்த்தனை, இறைவன் அருள். இப்படி ராஜாஜி விளக்கம் தந்தார்.

இப்படிப் பெற்ற செல்வத்தை அடக்கத்துடன் அநுபவிப்பர் என்பதற்கு முன்னோடியாகவே முதன்மந்திரி திரு அண்ணாதுரை பதவி ஏற்றபின்பு மிகுந்த பணிவுடனும் கண்ணியத்துடனும் பேசி வருகிறார். தி. மு. க. மந்திரிகள் நல்லாட்சி நல்குவார்கள் என்ற நம்பிக்கை எங்கும் பரவியுள்ளது. தமிழக மந்திரிகளை இங்கு அறிமுகப் படுத்துகிறோம்.


திரு கே. ஏ. மதியழகன் (உணவு)



திரு ஏ. கோவிந்தசாமி (விவசாயம்)



திரு செ. மாதவன் (சட்டம்)



திரு எம். முத்துசாமி (ஸ்தலஸ்தாபனம்) திரு சாதிக்பாட்சா (சுகாதாரம்) திருமதி சத்தியவாணிமுத்து (ஹரிஜனநலன்)







சித்திரவதைக்கு உள்ளாகும் மோட்டார்கள்



மோட்டார் கார்களைத் தண்டிப்பதற்கென்றே 650 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பயங்கரபுரியை நிர்மாணித்திருக்கின்றனர், பிரிட்டனிலே! ஜீப்கள், லாரிகள், மோட்டார் கார்கள் ஆகிய அனைத்தையும் எத்தனை விதமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்க முடியுமோ அத்தனையையும் செய்து அவற்றைக் கொடுமைப்படுத்துவதே நோக்கம்!

குண்டும் குழியுமான, கரடுமுரடான பாதையில் புத்தம் புதிய காரைத் திரும்பத் திரும்ப நாலாயிரம் மைல்கள் வரை ஓட்டி அதனை நடுநடுங்கவும் அதிரவும் வைப்பார்கள்.

பிறகு இருநூறு அடி நீளமுள்ள புழுதிச் சாலை ஒன்று இருக்கிறது. இதில் கார் செல்லுகையில் புழுதி, பாலைவனப் புயலைப் போல் கிளம்பி அதனைச் சூழும்.

இரண்டு அடி ஆழத்துக்கு உள்ள தண்ணீர்க் குட்டையில் மோட்டார் கார் நீந்திச் செல்ல வேண்டும்.

அடுத்து, உயர்ந்தும் தாழ்ந்தும் அமைந்துள்ள சாலையில் எம்பிக் குதித்துக் கொண்டே போக வேண்டும்.

போதாக்குறைக்கு நாலரை மைல் நீளமுள்ள ஒரு சாலையில் சிறு குன்றுகள், சாக்கடைகள், பரவலாய்க் கிடக்கும் ஜல்லிக் கற்கள் ஆகியவற்றைக் கடந்து ஓட வேண்டும்.

அப்புறம் வழ வழச் சாலை ஒன்று உள்ளது. இதில் கார் மணிக்கு எழுபது மைல் வேகத்துக்குக் குறைவாக ஓடக் கூடாது! அதிக பட்சம் எத்தனை வேகமாக வேணுமானாலும் செல்லலாம்; ஆட்சேபணை இல்லை!


இதோடு விட்டார்களா என்றால் கிடையாது. ஒரு குகைக்குள்ளே புதிய காரைத் தள்ளி விடுவார்கள். அங்கே பயங்கரப் புயல் வீசுவது போல் செயற்கையாகக் காற்று அதிவேகமாகச் செலுத்தப்படுகிறது. மற்றொரு குகை. இங்கு ரத்தமே உறைந்து விடுமோ என்று பயப்படக்கூடிய அளவுக்குக் குளிர் (—60 டிகிரி சென்டிகிரேடு.) இங்கு புத்தம் புது மாடல் காரை வைத்து நாலு அண்டா நீரையும் அதன்மேல் கொட்டிவிடுவார்கள். கார் மீது பனிக்கட்டியாக உரு மாறி உறைந்து விடும், நீர், விநாடிப் போதில்.


வேறொரு குகையில் காற்றின் அழுத்தம் மலை உச்சியில் உள்ளது போல் மிக மிகக் குறைவாக இருக்கும். இது போன்ற சூழ்நிலைகளிலெல்லாம் புதிய மோட்டார் கார்கள் சரியாக இயங்குகின்றனவா என்று பரீட்சித்துப் பார்க்கிறார்கள். ஏதாவது ஒரு கட்டத்தில் இயக்கத் திறன் குறைந்தால் குறித்துக் கொண்டு காரின் அமைப்பில் தேவையான மாறுதல்களைச் செய்கிறார்கள். இவ்வளவுக்கும் பிறகு முக்கியமான விஷயத்தைக் கடைசியில் கவனிக்கிறார்கள். வேணுமென்றே காரைச் சுவரிலே கொண்டு மோதுவார்கள். இதற்கென்று ஊஞ்சல் போன்ற அமைப்பு ஒன்று உண்டு. அதில் காரை ஏற்றிவிட்டு ஸ்விட்சைப் போட்டால் அந்த ஊஞ்சல் ஊசலாடும் வேகம் படிப்படியாக அதிகரித்து, கடைசியில் அதிவேகமாகக் காரைக் கொண்டு போய் எதிரே உள்ள சுவரில் மோதும். அப்புறம் பெரிய பாறாங்கல்லைக் காரின் கூரைமீது விழச் செய்வார்கள். விபத்து ஏற்பட்டால் என்ன ஆகும் என்று ஆராயத்தான்!

—'காமன்வெல்த் டுடே'

ஃ ஃ ஃ

நூதனமான கருவிகளைக் கண்டுபிடிப்பவர்களுக்கு லண்டனில் உள்ள டெய்லிமெயில் பத்திரிகை நாற்பத்திரண்டாயிரம் ரூபாய் சன்மானம் வழங்கிக் கௌரவிக்கிறது. மிக உபயோகமான நூதனமான கண்டு பிடிப்புக்கு ஒரு தங்கப் பதக்கமும் ரூபாய் இருபத்தோராயிரமும் முதல் பரிசாகக் கிடைக்கிறது.





அமைதி நிலவ நடந்த அண்ணல்

காந்தி அடிகளின் கருணையுள்ளத்தை வெளிப் படுத்தும் கட்டுரையொன்று -- ஸ்ரீ சோமேச புரோஹித் என்பவர் சமீபத்தில் எழுதியது -- சர்வோதய வாரப் பத்திரிகை "பூதான யக்ஞ"த்தில் வெளிவந்திருக் கிறது. அதன் சாராம்சமே இந்தக் கட்டுரை. தமிழ்ப் படுத்தியவர்: ஸ்ரீமதி லக்ஷ்மி தேவதாஸ் காந்தி.

ஜனவரி மாதம். நடுக்கும் குளிர் காலம். முதலில் கிழ் வங்காளத்திலும் அதன் பிறகு வட இந்தியாவில் பீஹாரிலும் மற்றும் பல இடங்களிலும் மத வெறி பேயாட்டம் ஆடியது.

கலவரச் செய்தி கேட்டதுமே காந்தி யடிகள் அமைதியை உண்டாக்கக் கிழக்கு வங்காளத்துக்கு விரைந்தார். அட்டூழி யங்கள் நடந்த இடங்களுக்குக் கால் நடையாகவே நடந்து இன்னல்பட்ட வர்களை நேரில் சந்தித்துப் பேசினார்.

வெடவெடக்கும் குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. இருமருங்கி லும் தென்னை — மூங்கில் — பலா மரங்கள் செழிப்பாக அடர்ந்த ஒற்றை யடிப் பாதை வழியாகக் கைத்தடியை ஊன்றிக் கொண்டே காந்தியடிகள் வேகமாக நடந்து சென்றார். கால்களில் செருப்புகள் அணியாமலே நடந்தார்.

அன்று பாதல்கோட்டிலிருந்து அதாகோரா என்னும் இடத்துக்கு அற யாத்திரை தொடங்கியிருந்தது. அவரது பேத்தி முறையாகும் மனு காந்தியும் மற்றும் சிலரும் உடன் சென்றார்கள். வேறு சிலர் தாகூரின், "உன் குரலுக்கு யாரும் செவி சாய்க்காவிடினும், நீ தைரியமாகத் தனியே செல். தயங்காதே" என்னும் கவிதையைப் பாடி வழி அனுப்பினார்கள்.

வெறும் காலோடு நடந்து நடந்து பாபுஜியின் பாதங்கள் வெடித்து, தூசியாலும் குளிராலும் புண்ணாகிப் போயிருந்தன. ஆயினும் அவ்வயோதிக ரின் நடையில் தளர்ச்சி ஏற்படவில்லை. வழியில் துன்புற்றவர்களைச் சந்தித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் அவர் களிடம் மனம் உருகி ஆறுதல் சொல்லிக் கொண்டும் முகம்மதியர்களை இந்துக்களிடம் மனிதத் தன்மையோடு இருக்கப் போதித்துக் கொண்டும் நடந் தார். இந்துக்களை நெஞ்சில் பயத்தை யும் ஆத்திரத்தையும் அகற்றி ஆண்டவ னிடம் நம்பிக்கையைக் கைவிடாம லிருக்கும்படி வேண்டிக் கொண்டார்.

அதோகாரா முகாமை அடைந்த தும் மனு காந்தி வெந்நீர் காயவைத்துத் தனது பாட்டனரது பாதங்களின் காயங்களை இதம் தரும் வகையில் வெந்நீரால் கழுவலானாள்.

பாதங்களுக்கு வெதுவெதுப்பான நீர் இதமாயிருந்த போதிலும் பாபு சொன்னார்: "மனு! இந்தப் பக்கங் களில் தற்போதைய நிலைமை உனக்குத் தெரிந்ததே. ஜனங்களுக்கு உணவைச் சமைக்கக்கூட விறகு கிடைப்பது அரிதா யிருக்கும் போது எனக்காக வெந்நீர் காய்ச்ச விறகை வீணடித்திருக்கிறாய். இன்று போகட்டும். நாளையிலிருந்து என் கால்களைக் குளிர்ந்த ஜலத்தாலேயே கழுவு; போதும்!"

"பாபுஜி, உங்கள் கால்களை நீங்களே பாருங்கள். பாளம் பாளமாக வெடித் துத் தூசி அடைத்துக் கொண்டிருக் கிறதே. ரத்தம் கசிவதையும் கவனி யுங்கள்." மனு வேண்டிக் கொண்டாள்.


பாபுவின் முகத்தில் சொல்லொணாத் துக்கச் சாயல் தோன்றியது. "மனு, வழி முழுதும் நாம் மதவெறியால் சீர்குலைந்த குடும்பங்களைப் பார்த்தோ மல்லவா? எத்தனை தாய் தந்தை யர்கள் தங்கள் செல்வங்கள் ரத்தம் பெருக உயிர் நீத்ததைக் கண்டிருக் கிறார்கள். எத்தனை சிறுவர்கள் தங்கள் பெற்றோர்களை இழந்து நாதி

அற்றுப் போய் விட்டார்கள். என் கால் வெடிப்புக்களிலிருந்து சிறிது ரத்தம் கசிவதைக் கண்டு நீ உருக வேண்டியதில்லை'' என்றார்.

ஜனங்களின் பரிதாப நிலையைச் சிந்தித்துப் பேசிய பாபுவின் குரல் கம்மியது.

அன்று மாலை சிலர் பாபுவைத் தரிசிக்க வந்தார்கள். அவர்கள் ஒரு கிழவியும் கிழவனும் பாபுவைத் தரிசிக்க மிக ஆவலாக இருப்பதாகத் தெரிவித்தார்கள். பாபு அவர்களைத் தம் இருப்பிடம் அழைத்து வருமாறு கூறினார்.

''மகாத்மாஜி! அவர்கள் மிகவும் தள்ளாதவர்கள். இவ்வளவு தூரம் அவர்களால் நடக்க முடியாதே!''



''அப்படியானால் நானே அவர்களிடம் வருகிறேன்'' என்று கூறி அந்த வயதான ஏழை தம்பதியரின் தென்னந் தோப்புக் குடிசைக்குக் காந்திஜி சென்றார். தங்களைப் போலவே தோலில் சுருக்கங்கள் கொண்ட வயோதிக காந்தியடிகளைப் பார்த்ததும் கிழத் தம்பதி இருவராலும் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தாங்கவே முடியவில்லை. சில விநாடிகள் செயலற்றுப் போனார்கள். பிறகு கிழவன் நடுங்கும் கைகளால் யாரோ கொடுத்த ஒரு மாலையைப் பாபுஜியின் கழுத்தில் போட முற்பட்டான். பாபு அவனைத் தடுத்து, ''என்னைக்

நீர் வயதில் பெரியவர். உமக்கு நான் மரியாதை செய்ய வேண்டியது முறை'' என்று சொல்லி மாலையை அவன் கழுத்தில் போட்டார். அங்பொழுக, உள்ளடங்கிய அவன் தாடைகளைத் தடவிக் கொடுத்தார்.

''ஐயோ, மகாத்மா! இது தகாது. என்னைப் பாபத்துக்கு உள்ளாக்காதீர்கள்!'' கிழவனின் நாத் தழுதழுத்தது.

இதற்குள் கிழவி மாலையைப் பாபுஜியின் கழுத்தில் போட்டுக் கீழே விழுந்து பாபுஜியின் பாதங்களைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டாள். கிழவனும் பாபுவின் கைகளைத் தன் கண்களிலும் நெற்றியிலும் ஒற்றிக் கொண்டான். கூட வந்தவர்களின் கண்கள் உணர்ச்சிவசத்தால் நனைந்தன.

பாபு கேட்டார்: ''உங்களுக்கு இந்த இடத்தில் இன்னும் இருக்கப் பயமாயில்லையா? நீங்களும் மற்றவர்களைப் போல் ஏன் ஓடிப் போக முற்படவில்லை?''

''ஸ்வாமீஜி! நாங்கள் எங்கே போவோம்? எங்கள் கால்களில் வலு ஏது? எங்கள் கண்ணெதிரில் ஜனங்கள் மாண்டு மடிவதைப் பார்த்தாகிவிட்டது. நாங்கள் வாழ்ந்த மண் இது. இங்கேயே சாவோம்'' என்றான்.

''வெகுதூரம் நடந்து வந்திருக்கிறீர்கள். எங்களிடம் இருப்பது இந்தக் கிழிந்த பாய்தான். தயவுசெய்து அமருங்கள்.''—கிழவி பாயை விரித்தாள்.

மூலையில் தயாராக வைத்திருந்த ஓர் இளநீரைக் கிழவன் கொண்டு வந்து அந்த வயதிலும் இலாகவமாகச் சீவிப் பாபுவின் முன்னால் வைத்தான்.

''மகாத்மாஜி! மிகவும் இனிப்பானது. குடியுங்கள். நீங்கள் பருகினால் தேவிக்கு நைவேத்தியம் ஆனாற் போல்'' என்றான்.

பாபுஜி தமது மாலை ஆகாரத்துக்குப் பிறகு ஏதுமே உட்கொள்ளுவது கிடையாது. இவ்விஷயங்களில் அவர் கண்டிப்பு யாவரும் அறிந்ததே. ஆனாலும் அன்று மாலை கிழவன் உபசரித்துக் கொடுத்த இளநீரை ஆவலுடன் பருகி, ''நிஜமாகவே வெகு ருசியாக இருக்கிறது'' என்றார்.

கானமயிலாட....!



பிராங்க்ளின் ஸ்மித் இருபது வருஷங்கள் ஒரு துணிக் கடையில் ஓடாய் உழைத்தார். அவர் அந்தக் கம்பெனியின் சேர்மன் கிராம்வெல் மாதிரியே நடந்து கொண்டார். அவர் மாதிரியே உடை அணிந்தார். அவரை முன் மாதிரியாகக் கொண்டார்.

ஒரு நாள் மானேஜிங் டைரக்டர் காரியாலயத்திலிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. ''சேர்மன் இந்த வருஷ முடிவில் ஓய்வு பெறுகிறார். அந்த வேலையைச் செய்வதற்கு உனக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது!'' என்றார் மானேஜிங் டைரக்டர்.

இதைக் கேட்டு உச்சி குளிர்ந்த ஸ்மித், ''நான் எப்பவும் எந்த வேலையையும் ஏற்றுச் செய்யக் காத்திருக்கிறேன்'' என்று பதிலளித்தார்.

''சரி! வாருங்கள்!'' என்று கூறி மானேஜிங் டைரக்டர் சேர்மனின் அறைக்கு ஸ்மித்தை அழைத்துச் சென்றார்.

''அந்த நாற்காலியில் உட்காருங்கள்!'' என்று அந்த அழகான சேர்மனின் நாற்காலியில் ஸ்மித்தை உட்காரச் சொன்னார் மானேஜிங் டைரக்டர். ஸ்மித்துக்குத் தலைகால் புரியவில்லை.

சேர்மன் கிராம்வெல்லைப் போலவே ஸ்மித் அமர்ந்திருந்ததைக் கண்டு மானேஜிங் டைரக்டர், ''அபாரம்! பிரமாதம்! அப்படியே சேர்மனை உரித்து வைத்திருக்கிறது!'' என்று புகழ்ந்தார். பெரும் பதவி தமக்குக் கிட்டியுள்ளதைக் கண்டு ஸ்மித் பேரானந்தமடைந்தார்.

அடுத்த கணம் மானேஜிங் டைரக்டர் ஓர் உண்மையை எடுத்து இயம்பினார். ''ஸ்மித்! உம்மிடம் இரகசியமாகச் சொல்கிறேன். டைரக்டர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சேர்மன் கிராம்வெல்லின் நல்ல புகைப்படம் ஒன்றை அவருக்கு ரிடையர் ஆகும்போது பரிசாகக் கொடுக்கவிருக்கிறோம். இப்போது காமிராக்காரர் எப்படிப் படம் எடுத்தால் நன்றாக இருக்கும் என்று பார்த்துக் கொள்ள வருகிறார். சேர்மன் மாதிரியே தோற்றமளித்து நீங்கள் நடந்து கொள்வதால் முன்கூட்டியே காமிராவைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். சேர்மன் வந்தவுடனே அவரை அதே மாதிரி உட்கார வைத்து 'டக்'கென்று காலதாமதம் செய்யாமல் ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டு விடலாம். சேர்மனுக்கு அதிகச் சிரமம் கொடுக்கக் கூடாது, பாருங்கள்!'' என்றார் மானேஜிங் டைரக்டர். — ஆங்கில டைஜஸ்ட்



நெஞ்சிருக்கும் வரை

சென்னை கடற்கரையில் உழைப்பின் சின்னத்தருகே இரண்டு அன்றாடங்காய்ச்சிகள் ரகுவும் பீட்டரும் கூடினர். பசி, பட்டினியைப் பகிர்ந்து கொண்டனர். இந்த இரண்டு பேரின் வாழ்க்கையிலே புரட்சியை உண்டுபண்ண வந்தான் 'டெம்பரரி' அன்றாடங் காய்ச்சி சிவா. பீட்டரைப் பறி கொடுத்தான் ரகு. தன் உள்ளத்தரசி ராஜியைச் சிவாவுக்குத் தரும்படியாயிற்று. தன் ஒருதலைக் காதலை ரகு உணர்ந்து பெருந்தன்மையுடன் ராஜியைச் சிவாவுக்கு விட்டுக் கொடுத்தான். ஆனால் பணம் வந்ததும் சிவாவுக்குக் குணமும் மாறிப் போய்விட்டது. ரகு—ராஜியையே சந்தேகித்து ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறான் சிவா. ரகுவின் உயிர்த் தியாகம் ராஜி — சிவாவை மறுபடியும் சேர்த்து வைக்கிறது.

நெஞ்சிருக்கும்வரை நினைவில் இருக்கும் படியாகச் சிவாஜிகணேசன் ரகுவாக வந்து உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அள்ளிச் சொரிகிறார். தத்துவங்களையும், வேதாந்தங்களையும் பொழிந்து தள்ளுகிறார். அவர் நடிப்பு அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கிறது.


படம் இடைவேளை வரையில் ஒரே உணர்ச்சிப் போராட்டங்களில் சென்று கொண்டிருந்தது. அதற்கே பிடிக்கவில்லை போலும்! ஒரு பிரேக் போட்டுப் பழைய பாதையில் மது, மங்கை, கூத்தில் திரும்புகிறது! பட ஆரம்பத்தில் இருந்த இயற்கையும், டெம்போவும் பறி போய்விடுகின்றன. புதுமையை விரும்பும் டைரக்டர் ஸ்ரீதரிடம் இதை எதிர்பார்க்கவில்லையே ?

அபலை ராஜியாக வரும் கே. ஆர். விஜயா ஆடிப் பாடி அழுது சிரித்து நடிப்பதில் நல்ல பெயரைப் பெறுகிறார். பீட்டராக வரும் வி. கோபாலகிருஷ்ணன் விரைவிலேயே உயிரை விட்டாலும் படத்துக்குக் கொஞ்சம் உயிரும் தருகிறார். ராஜியின் தந்தையாக வரும் வி. எஸ். ராகவனிடம் இயற்கையான நடிப்பைக் காண முடிகிறது. முத்துராமனின் நடிப்பிலே இன்னும் மெருகேற வேண்டும். மகிழ்ச்சியும், துக்கமும் அவர் முகத்தில் ஒன்றாகத்தான் தெரிகின்றன.

பட முடிவில், ரகு கையில் துப்பாக்கி ஏந்தித் தெருவெல்லாம் ஓடிக் கடைசியில் சிவாவின் வீட்டை அடைவதாகப் படத்தில் சித்திரித்துக் காட்டியிருக்கிறார்கள். நடுத் தெருவில் இப்படி ஓடினால் மக்களும் போலீஸும் சும்மாயிருப்பார்களா? இயற்கையாயில்லையே ! கவரில் காணும் 'ரகு—ராஜி கள்ளக் காதல்' என்ற எழுத்துக்களைக் கொண்டே சிவா தன் சந்தேக விதையை மரமாக வளர்த்துக் கொள்கிறான். இன்னும் கொஞ்சம் சந்தேகத்துக்குப் பலமான விதைகளை விதைத்திருக்கலாம்.

'நெஞ்சிருக்கும் வரை' பாதி வரை பிரமாதம்! சிவாஜி கணேசனின் நடிப்புக்காகவே இந்தப் படத்தைப் பார்க்கலாம்!





"தாயும் சேயும் நலம்!"

ஒவ்வொரு நாளும் எத்தனை தந்திகள் பறக்கின்றன, மேற்கண்ட வாசகத்தை ஏந்தி! "குழந்தையும் கையுமாக விடை பெறும் தாய்மார்களை அனுப்பி வைக்கும் போது எனக்கு ஏற்படும் மகிழ்ச்சி அளவிட முடியாதது" என்கிறார் டாக்டர் ராஜம்மா சந்தானம்.

".........?"

"என் பெயர்தானே? ராஜம்மா. எங்கள் அப்பா பெயர் எஸ். வி. ராமஐயங்கார். அட்வொகேட். நாங்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்."

".........?"

"படிப்பு எஸ். எஸ். எல். சி. தான். டாக்டருக்கு எப்படிப் படித்தேன் என்று கேட்கிறீர்களா? அந்தக் காலத்தில் எல். ஐ. எம். டிப்ளமா பெறுவதற்கு இந்த யோக்யதாம்சம் இருந்தால் போதும். ஆனால் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் சிறப்பான மார்க்குகள் பெற்றுத் தேறியிருக்க வேண்டும்."

"..........?"

"நான் படித்த காலத்தில் இந்திய மருத்துவமாக இல்லாமல் இணைப்பு மருத்துவமாகி விட்டது. அதனால் எழுபத்தைந்து சத விகிதம் நவீன மருத்துவமும், இருபத்தைந்து சதவிகிதம் இந்திய மருத்துவமும் போதித்தார்கள். அதற்கு முன்பெல்லாம் இந்திய மருத்துவத்துக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறார்கள்."

".........?"

"இப்பொழுது இது ஒரு டிகிரிப் படிப்பாகவே மாறி விட்டது. எனவே, கல்லூரிக் கல்வி தேவை என்று ஆகிவிட்டது."

".........?"

"வசதியான குடும்பத்தில் பிறந்த நான் இந்தப் படிப்பை மேற்கொண்டதற்கு ஒரு காரணம் ஆர்வம். மற்றொன்று சூழ்நிலையும் என் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களும். எல்லாவற்றுக்கும் மேலாக இன்னொன்றையும் சொல்லி விடுகிறேன். எங்கள் குடும்ப நண்பர்களான ஸ்ரீ ஹரியும் டாக்டர் டி. பி. ராஜகோபாலும் என்னை ஊக்குவித்து இந்தத் துறையில் இறக்கி விட்டார்கள். இருவரிடமும் இந்திய வைத்தியம் பயிலக் கிடைத்த வாய்ப்பை நான் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். என் மனம் கோணாமல் என் படிப்புக்கு ஆதரவு தந்த என் பெற்றோரும் எனது இந்த நிலைக்கு ஒரு காரணமாவார்கள்."

".........?"

"1957ம் ஆண்டு நான் படித்துத் தேர்ந்தேன். அது முதற்கொண்டு, 'தேவராஜ் மாணிக் சந்த் மகப்பேறு மருத்துவ நிலையம்' என்று வழங்கும் இந்த நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். இது 'ஜைன் ரிலீஃப் சொஸைட்டி'யின் ஆதரவில் நடைபெறுகிறது. இதன் தலைவர் ஸ்ரீ லால் சந்த் தாதா அவர்கள் நிஜமாகவே தாதா தான்; அதாவது சிறந்த கொடையாளி."

"..........?"

"ஆமாம், ஆமாம்! டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள்தான் 1954ம் ஆண்டில் இதனைத் தொடங்கி வைத்தார். முப்பத்தைந்து படுக்கைகளுக்கும் மேலாகக் கொண்டது இந்த மகப்பேறு மருத்துவ விடுதி."

".........."

"இரவு — பகல் இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் இந்த நிலையத்தில் நாங்கள் மூன்று டாக்டர்கள் பணியாற்றி வருகிறோம். ஷிஃப்டு முறையில் யாராவது ஒருவர் மாறி மாறி இருப்போம். எங்களுக்கும் மேல் டாக்டர் மீனாட்சி நாயர் எம். பி. பி.எஸ். அவர்கள் தலைவராகப் பணியாற்றி வருகிறார். பேறினை எதிர் நோக்கியிருக்கும் பெண்கள் இங்கே பெயரைப் பதிந்து கொண்டு மாதம் ஒரு முறை இருமுறை தங்கள் உடல் நிலையைக் காட்டிச் செல்வார்கள். பேறு காலத்தில் இங்கு வந்து சேர்ந்து கொள்வார்கள். எட்டு நாட்கள் அவர்கள் இந்த விடுதியில் தங்கலாம். ஜெனரல் வார்டு, ஸ்பெஷல் வார்டு என்று

இரண்டு பகுதிகள் இங்கு இருக்கின்றன. ஜெனரல் வார்டில் உள்ளவர்களுக்குத் துணையாக அவர்களைச் சேர்ந்தவர்கள் யாரும் இருக்க முடியாது. ஸ்பெஷல் வார்டில் இருப்பவர்களுக்கு அந்த வசதி உண்டு. எல்லாருமே தங்களுக்குத் தேவையான உணவு வகைகளைத் தங்கள் வீட்டிலிருந்துதான் கொண்டு வர வேண்டும். மருந்துகள் இலவசம். ஊசி போடுவதென்றால், அதற்கு எட்டணா கட்டணம் வைத்திருக்கிறோம். உடல் நிலைக்கேற்ப எட்டு நாட்களுக்கு மேலும் தங்க வேண்டியிருந்தால் மிகக் குறைந்த செலவில் வசதி செய்து தருகிறோம்.''

''.........?''

''மகப்பேறு விடுதியானாலும், மற்ற நோயாளிகளையும் பார்த்து மருந்து கொடுப்பதுண்டு.''

''..........?''

''ஊதியமா? அப்படி ஒன்றும் அதிகம் இல்லை. நிதி வசூலைக் கொண்டு நடக்கும் நிறுவனம்தானே இது? வசதிக்கேற்பத் தானே ஊதியம் தர முடியும்? ஆனால் அநுபவத்தையும் சேவை உணர்வையும் தருகிறதே. அதுவே ஒரு நிறைவான ஊதியம் அல்லவா?''

''............''

''ஆமாம், ஆமாம். தனியாகவும் 'பிராக்டிஸ்' செய்கிறேன். எங்கள் அலுவலுக்குக் குந்தகம் இல்லாமல் நாங்கள் தொழில் புரிவதில் இங்கு யாருக்குமே ஆட்சேபணை கிடையாது. சொல்லப் போனால் நானே என் வீட்டில் மகப்பேறுக்கான வசதிகள் செய்து வைத்திருக்கிறேன். அங்கும் மருத்துவம் பார்க்கிறேன். வசதியுள்ளவர்கள் வருகிறார்கள்.''

''............?''

''சுகப் பிரசவம் மட்டுமென்ன? சிரமமான பிரசவங்களைக் கூடச் சில சமயங்களில் நாங்கள் கவனிக்கத்தான் வேண்டி வருகிறது. இதற்கு மன வலிமை வேண்டும். சமயோசித புத்தி வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னம்பிக்கை வேண்டும். அநுபவம் மிகுந்த பெரிய டாக்டர்களின் உதவியைப் பெற வேண்டிய சமயங்களில் கட்டாயம் பெறுவோம் என்றாலும், அவர்கள் வருவதற்குள்ளாக நடக்கும் எந்த நிகழ்ச்சியையும் நாங்கள்தானே கவனித்துக் கொள்ள வேண்டும்? ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு அயராமல் கவனிக்கவே செய்வோம். தாயும் பிள்ளையும் பிரியும் வரை உற்றார் உறவினருக்கு எத்தனை கவலையோ, அத்தனை கவலை டாக்டர்களாகிய எங்களுக்கும் உண்டு. பெற்றுப் பிழைக்கும் தாய்மார்களைப் போலவே, மருத்துவம் பார்க்கும் நாங்களும் பெற்றுப் பிழைக்கிறோம் என்று சொன்னால் கூடப் பொருந்தும். அகமகிழ்வோடு குழந்தையும் கையுமாக விடை பெறும் தாய்மார்களை அனுப்பி வைக்கும் போது எங்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சி இருக்கிறதே. அதைச் சொல்லி முடியாது.''

''..........?''

''நாட்டு மருந்தென்ன? நவீன மருந்தென்ன? இரண்டுமே மருந்துகள்தாமே! அவை தம் பணியைச் செய்யத் தவறுவதில்லை. தாயும் பிள்ளையும் வேறான பின், கஸ்தூரி, நாட்டு மருந்து லேகியம் போன்றவற்றை வெற்றிலையில் வைத்துத் தருகிறார்களே, எதற்காக? அதிக ரத்தப் போக்கின்றித் தடுத்து உடலைச் சமநிலைக்குக் கொண்டு வருவதற்காக! நாங்கள் தரும் 'அவில்' போன்ற மருந்துகளும் அதே பணியைத்தான் செய்கின்றன. தன் உடலை விட்டுக் குழந்தை பிரிந்த பின், தாய்க்கு உடலே இலேசாகி விட்டது போன்ற உணர்வு ஏற்படும். சிலருக்கு ஜு"ரம் வரக் கூடும். இவையெல்லாம் வராமல் தடுக்கவே இந்த மருந்துகள். நாட்டு மருந்துகள் சிறிது தாமதமாக இயங்குகின்றன. நவீன மருந்துகள் சற்று விரைவில் பலன் தருகின்றன. வித்தியாசம் இல்லையே.''

''.......?''

''எங்கள் மருந்தில் நம்பிக்கை கொள்ளாத பாட்டிமார்கள் எங்களுக்குத் தெரியாமல்

எடைக்கு எடை தேயிலை !

படத்தில் காணும் அழகிய ஜெர்மன் யுவதியைத் தராசில் வைத்து அவள் எடைக்குச் சமமாகத் தேயிலையை நிறுத்து அந்த 120 பவுண்டு தேயிலையை மேற்கு ஜெர்மனியில் முதியோர் இல்லங்களின் உபயோகத்துக்காக வழங்கினர்.

ஜெர்மன் 'தேயிலை இளவரசி' குத்ரன் அஸண்டார்ப், இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் கொண்டாடப்படவிருக்கும் தேயிலை நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வாள். -யூ. பி. எஸ்.



விட்டு மருந்தைக் கொடுத்து விடுகிறீர்களே, இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்துக்கொள் ளுமா என்றுதானே கேட்கிறீர்கள்? அவர்கள் செய்வது தவறென்றால் நாங்கள் இலேசில் விட்டுவிடுவோமா? பார்த்தும் பாராதது போல் தெரிந்தும் தெரியாதது போல் நாங்கள் நடந்து கொள்வதற்குக் காரணமே அது நாங்கள் எதிர்பார்க்கும் பலனையே தரும் என்பதுதான்.''

''.........''

''பலதரப்பட்டவர்களோடு பழகும் டாக் டர்களுக்குக் கைகண்ட மருந்து மனத் தத்து வம்தான். தங்களிடம் சிகிச்சைக்கு வருபவர் களின் மனத்தை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். சிலர், 'அந்த டாக்டரிடம் போனால் ஊசிதான் போடுவார்' என்பார்கள். ஊசி போடாவிட்டால், 'உங்களிடம் எதற் காக வந்தோம்? ஊசி போட்டுச் சட்டுப் புட்டென்று குணப்படுத்துவீர்கள் என்று தானே?' என்பார்கள் வேறு சிலர். மற்றும் சிலரோ டாக்டர்களுக்கு மேல் டாக்டர்களா கித் தமக்குத் தெரிந்த மருந்துகளைக் கூறி 'இதைச் சாப்பிட்டால் என்ன, அதைச் சாப்பிட்டால் என்ன?' என்பார்கள். இவர்க ளிடம் 'உங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று கூறிவிட முடியுமா? எல்லாப் பேச்சுக்கும் செவி சாய்த்து, அவர்கள் மனமறிந்து, சிகிச்சை செய்வதுதான் டாக்டர்களாகிய எங்கள் வேலை. குருடன் வேண்டுவது என்ன, கண் தானே? எப்படியாவது அவர்கள் நோய் தீர்ந்தால் எங்களுக்குத் திருப்தி.''

''.........''

''என் குடும்பந்தானே? எனக்கு இரு குழந்தைகள். கணவர் ஸ்ரீ சந்தானம். 'சென் டிரல் எக்ஸைஸ்'ஸில் பணியாற்றி வருகிறார். முன்பு ஃபிஷரிஸ் ஆபீசராக இருந்திருக் கிறார். நாடகக் கலையில் ஆர்வம் மிக்கவர். சிறந்த நடிகர் என்று நான் சொல்லுவானேன்? அவர் நடிக்கும் 'இளைய ராஜா' நாடகத்தை ஒரு முறை பார்த்து நீங்களே எடை போடுங் களேன்! கேட்கப்போனால், என் கணவர்தான் எனக்கு மறு வாழ்வு அளித்தவர். என் தங் கையைப் பெண் பார்க்க வந்தவர், எப்படியோ என் நிலையறிந்து — அதாவது விவரம் தெரி யாத பருவத்தில் கல்யாணமாகி, உடனே கைம்மையையும் அடைந்து விட்டவள் நான் என்பதை யறிந்து — என்னைத்தான் மணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாகக் கூறிவிட்டார். சமுதாய சம்பிரதாயங்களில் ஊறிய என் தந்தை எத்தனையோ ஆட்சே பணை சொல்லிப் பார்த்தார். அவர் உறுதி தளரவில்லை. அதன் பலன்தான் இன்று நான் ராஜம்மா சந்தானமாக இருக் கிறேன். இன்று நினைத்தாலும் அவருடைய அந்தத் தியாக புத்தி என்னை நெக்குருகச் செய்கிறது.''

பேட்டி: ரா. வீ.

நியூயார்க்கில் நீதி தூங்காது!

நீதி தூங்காது என்பார்கள். நியூயார்க் நகரத்தைப் பொறுத்த மட்டும் இது முற்றிலும் உண்மையாகவே இருக்கும். இரவு பூராவும் இயங்கும் கிரிமினல் கோர்ட்டை உலகில் முதன்முதலாக அமைத்திருக்கும் பெருமையைத் தேடிக் கொண்டிருக்கிறது நியூயார்க். 1967 ஜனவரியிலிருந்து இது இயங்குகிறது.

நியூயார்க்கில் எடுத்துப் பார்த்த ஒரு கணக்குப்படி பெரும்பாலான வழக்குகள் இரவு 8 மணியிலிருந்து விடியற்காலை 4 மணிக்குள் தான் பிடிபடுகின்றன வாம். குற்றங்கள் எப்பொழுது மிகுதி யாக நடக்கின்றனவோ, அப்பொழுது தானே நீதி உறங்காமல் விழிப்போடு இருக்க வேண்டும்? அதற்காகத்தான் இந்த இரவுக் கோர்ட்டு இயங்குகிறது.

ஆதாரம்: கார்டியன்



நியான் ஆடைகள்!

நைலான் ஆடை அல்ல, நியான் ஆடை! ஆம். பட்டுப் பூச்சிகளைப்போல வண்ண வண்ண ஆடை அணிவது பழ சாகி விட்டது, பிரிட்டனிலுள்ள பெண் களுக்கு. இப்பொழுது புழக்கத்திற்கு வரப்போவது ஒளி சிந்தும் ஆடைகள்! மின்சக்தி தரும் பேட்டரிப் பெட்டி பொருந்திய பெல்ட்டையும் இந்த ஆடை அணியும்போது தரிக்க வேண்டும். வேண்டியபோது பித்தானை அழுத்தினால் போதும், விட்டு விட்டுப் பிரகாசிக்கும் நியான் விளம்பரங்களைப்போல் இந்த ஆடைகள் மாறி மாறி அணைந்தும் ஒளிர்ந் தும் மினுமினுக்கும்.

ஆதாரம்: வீக் தகவல்: ஏ. கே. கந்தசாமி



‘என் மேனியழுக்குப் பேராதரவு: லக்ஸ்’

என்கிறார் சினிமா நட்சத்திரம் கே. ஆர். விஜயா




உங்கள் மேனியழகும் முக்கியமானதே. அதே பராமரிப்புக்கு உரியது: ஆம், லக்ஸ் டாய்லெட் சோப். "செழுமையான மென்மை நுரை. சிந்தை கவரும் நறுமணம். கேட்பானேன், என் அபிமான அழகு சோப்பாக விளங்குகிறது. தவிர, 4 வண்ண வகைகளிலும் வெண்மையிலும் வரும் சோப் அது ஒன்றே" என்று கூறும் கலைச்செல்வி கே. ஆர். விஜயாவின் அழகு ரகசியம்... உங்களுக்கும் உரித்தாகட்டும். உபயோகியுங்கள் லக்ஸ்.



லக்ஸ் டாய்லெட் சோப் சினிமா நட்சத்திரங்களின் தூய, மெல்லிய அழகுசாதன சோப்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

லின்டாஸ்-LTS. 207-140 TM



'அண்டர் செகரட்டரி' நாடகத்தில் மாமிகேலே, குமார், பாலு.

தலைநகர் அனுப்பும் கலைஞர்கள்

எஸ்.வி.சகஸ்ரநாமம்

1960ம் ஆண்டு டில்லியில் செய்தி ஒலி பரப்பு இலாகாவினரால் கோடை கால மூன்ருவது நாடக விழா நடத்தப்பட்டது. இதற்குத் தமிழகத்திலிருந்து ஒரு நாடகக் குழுவை அனுப்பி வைக்கும்படியாக மத்திய சர்க்கார் நமது தமிழக சர்க்காருக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். அப்போது இங்கு கல்வி, நிதி அமைச்சராயிருந்த திரு ஸி. சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் சேவா ஸ்டேஜ் குழுவினர் நடித்து வந்த ''வடிவேல் வாத்தியார்'' நாடகத்தை மேற்குறிப்பிட்ட விழாவில் நடத்துவதற்குத் தேர்ந்தெடுத்து எங்கள் குழுவை டில்லிக்கு அனுப்பி வைத்தார்கள். சேவா ஸ்டேஜ் குழுவினர் நமது தலைநகருக்குச் சென்றது இதுவே முதன் முறை ஆகையால் அங்கு போய்த் தங்குவதற்கு வசதிகளைச் செய்துகொள்ள முன்கூட்டியே அங்கு வசிப்பவர்கள் யாருடனுவது தொடர்பு கொள்வது நலமாயிருக்கும் என்று எண்ணினேம். இது பற்றி யோசித்துக் கொண்டிருக்கையில் வடிவேல் வாத்தியார் நாடக ஆசிரியரும், சிறந்த சிறுகதை எழுத்தாளருமான திரு தி. ஜானகிராமன் அவர்கள் வந்தார்கள். அவர், தனிப்பட்ட ஒரு நபர் ஒரு குழுவை வரவேற்று வசதிகள் செய்து தருவது என்பது தலைநகரில் மிகக் கடினம் என்று அபிப்பிராயப்பட்டார். தொடர்ந்து வேறு ஒரு யோசனையும் கூறினர். ''அமெச்சூர் நாடகக் குழு ஒன்று அங்கே உள்ளது. அதுதான் சௌத் இந்தியன் தியேட்டர்ஸ். பழகுவதற்கு இனிமையானவர்கள்; நட்பின் இலக்கணத்தை நன்கு உணர்ந்தவர்கள். அதில் நடிப்பவர்கள், தொழில் நடிகர்களை மிஞ்சிவிடும் ஆற்றல் கொண்டவர்கள். நல்ல எழுத்தாளர்களும், அக்குழுவில் உள்ளனர். அவர்கள் மூலமாக வேண்டிய வசதிகளைப் பெறலாம்'' என்று தெரிவித்தார். அவர்களுக்குத் தாமே கடிதமும் எழுதினர். இதன் பலனுக எங்களுக்கு வேண்டிய ஜாகை வசதிகள், உணவு முதலியவை கிடைத்தன என்பது மட்டுமல்ல; அத்துடன் தலைநகரில் எங்களுக்கு நிரம்பப் பேரும் புகழும் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆம், ஒரு நாடகத்தை நடத்தச் சென்ற நாங்கள் அங்கு ஸவுத் இந்தியன் தியேட்டர்ஸ் ஆதரவில் ஒரு நாடக விழாவே நடத்தினேம். எங்கள் குழுவுக்குத் தலைநகரில் பாராட்டு விழாக்களை யெல்லாம் நடத்திப் பெருமைப்படுத்திய பிறகே திருப்பி அனுப்பி வைத்தார்கள்.

சௌத் இந்தியன் தியேட்டர்ஸ் குழுவினர் எங்களுக்கு அறிமுகமானவுடனே எங்களிடம் அன்புடன் பழகிய கலைப் பண்பாட்டை எங்களால் என்றுமே மறக்க முடியாது.

பிறகு 1961ம் ஆண்டில் நான் ருஷ்ய நாட்டுக்குப் போய் வந்ததும் மீண்டும் ஒரு முறை டில்லியில் எனக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதி வெங்கடராமய்யர் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்திப் பெருமைப் படுத்தினர்கள். ருஷ்யாவிலிருந்து நான் திரும்பியதும் எனக்குக் கிடைத்த முதல் பாராட்டு இதுவே. இவ்வளவு அன்பும் பண்பும் மிக்கவர்களுடன் நம் தொடர்பு எப்போதும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில்

'மிஸ் ஜானகி' நாடகத்தில் ஸுஜாதா, கப்புடு.



❊ தில்லியிலிருந்து தமிழகம் நோக்கி ஒரு படையெடுப்பு நடைபெறப்போகிறது! இந்தக் கலைப் படையினருக்குத் தளபதியாகத் திகழ்பவர் சப்புடு என்னும் நடமாடும் சங்கீத நாடக அகாடமி!

ஆழமாகப் பதிந்திருந்தது. 1961ம் ஆண்டி லேயே மீண்டும் ஒரு முறை நான் தில்லிக்குப் போக வேண்டியிருந்தது. அப்போது, திரு பூர்ணம் விசுவநாதன் அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அவர் சௌத் இந்தியன் தியேட்டர்ஸின் வளர்ச்சியில் அக்கறை காட்டி அக்குழுவின் நாடகங்களில் முக்கிய பாத்திரங்களேற்று நடித்து வந்தவர். விசுவநாதன் அவர்களிடம் நான் குறிப்பிட்டேன்: 'தேசியப் பாதுகாப்பு நிதிக்காக எங்கள் குழுவில் சிலரும், உங்கள் குழுவில் பலருமாகச் சேர்ந்து நாடகங்கள் நடத்தினால் நம் இரு தரப்பினருக்கும் பெருமையாக இருக்குமே?'' என்றேன். அவரும் அதைப் பாராட்டி வரவேற்றார். நான் அன்றே சென்னைக்குத் திரும்பினேன். எட்டு ஒன்பது மாதங்கள் சென்றன. இது விஷயமாகத்



'மணி ஓசை' நாடகத்தில் வரும் ஒரு காட்சியில் ஜயலக்ஷ்மி பரசு ஸ்ரீனிவாசன்

❊

சென்னையில் நடைபெறவிருக்கும் நாடகங்களிலிருந்து சில காட்சிகளை இப்பக்கங்களில் காணலாம்

❊

'மூடு பனி' நாடகத்தில் லக்ஷ்மியும் மாப்பிள்ளையும் வரும் ஒரு கட்டம்

தில்லியிலிருந்து ஒரு தகவலும் இல்லை. நான் சொன்ன யோசனை நடக்குமா என்ற சந்தேகம் அதிகரிக்க அதிகரிக்க, என் மனமும் சிறிது சோர்வுடன் இதை மறந்து விடக்கூடிய நிலையை அடைந்து விட்டது.

திடீரென்று ஒரு நாள் திரு பூர்ணம் விசுவநாதன் அவர்கள் கடிதம் எழுதினார். என் எண்ணம் ஈடேறிவிட்டது என்ற மகிழ்ச்சிச் செய்தியைத் தாங்கி வந்தது கடிதம். ''உங்கள் குழுவினரின் 'பூவிலங்கு' என்ற நாடகத்தையும் 'போலீஸ்காரன் மகள்' என்ற நாடகத்தையும் நம்மிரு குழுவினரும் இணை சேர்ந்து நடிக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். அந்த இரு நாடகப் புத்தகங்களையும் அனுப்பி வைக்கவும்'' என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார். உடனே இரு நாட



கப் புத்தகங்களையும் அனுப்பிக் கொடுத்தோம். அங்கே அவர்கள், இந்தக் குழுவைப் பட்டை தீட்டி மெருகேற்றிய பெருமைக்குரியவரான சப்புடுவின் மேற்பார்வையிலும் நிர்வாகத்திலும் ஒத்திகைகள் நடத்தி வந்தார்கள். இங்கிருந்து நானும், எங்கள் குழுவின் முக்கிய நடிகர்களான, முத்துராமன், கோபாலகிருஷ்ணன், சாந்தினி, லட்சுமி ஆகியோரும், மற்றும் அரங்க நிர்வாகி, ஒப்பனைக் கலைஞர், உடைகள் நிர்வாகி என்று இந்த வகையில் ஐந்து நபர்களும் ஆக மொத்தம் பத்துப் பேர்கள்தான் புறப்பட்டுப் போனோம். 1963ம் ஆண்டு மார்ச் மாதம் 1ந் தேதியிலிருந்து 4ம் தேதி வரையில் நாடக விழா. இதில் எங்களுடன் இணைந்து இரண்டு நாடகங்கள் நடத்தினர். தவிர, அவர்களே முழுவதுமாக நடித்த 'நாலு வேலி நிலம்'

தலைப்பாகையணிந்து
காணப்படும் இந்தச் சகோதரர்கள்
யார் என்று உங்களால்
ஊகிக்க முடிகிறதா?
சிரமமான காரியம்தான்.
ஆகவே,
பேசாமல் 35ம் பக்கத்தைப்
புரட்டி விடுங்கள்.
நிம்மதியாக யார் என்று
கண்டு விடலாம்!




'அண்டர்; செக்ரட்டரி' ஆகிய இரண்டும் விழாவில் இடம் பெற்றன. நாங்கள் நாடகத் தேதிக்கு இரண்டு நாட்கள் முன்னதாகத்தான் போயிருந்தோம். சாதாரணமாக ஒரே குழுவில் உள்ளவர்களே இணைந்து செயலாற்றி ஒரு நாடகத்தை வெற்றிகரமாக அரங்கேற்றக் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு மேலாக ஒத்திகைகள் நடைபெற வேண்டும். பூர்ண வெற்றியும் கிடைக்க வேண்டுமானால், முக்கிய கதாபாத்திரங்கள் மட்டும் திறமையுடன் நடித்து விட்டால் போதாது; சக நடிகர்கள் உண்மையாக ஒத்துழைப்பதில்தான் நாடகம் வெற்றியடைய வழியுண்டு. இதற்கு நிறைய ஒத்திகைகள் தேவை. ஆனால் நாங்கள் தில்லிக்குச் சென்றது நாடகத் தேதிக்கு இரண்டு நாட்கள் முன்புதான். அவர்களுக்கு நாடகப் புத்தகங்கள் அனுப்பியதும் ஒன்றரை மாதங்களுக்கு முன்புதான். நாங்கள் போனதுமே, முதல் நாள் காலையிலேயே, ''மாலை மூன்று மணிக்குமேல் ஒத்திகை நேரம் குறித்துள்ளது'' என்ற செய்தியை எங்களுக்குச் சொன்னார்கள். குறித்த நேரத்தில் சௌத் இந்தியன் தியேட்டர்ஸ் அன்பர்களுடன் ஒத்திகையும் ஆரம்பித்தது. முதல் ஒத்திகையிலேயே அந்தக் குழுவினர்களுக்குள்ள நாடக ஆர்வம், நடிப்புத் திறன் எல்லாம் எங்களுக்குப் புரிந்தன. எங்கள் எழுத்தாள நண்பர் திரு தி. ஜானகிராமன் அவர்கள் சொன்னதைப் போலவே தொழில் நடிகர்களெல்லாம் பாராட்டும் அளவுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்பதை எங்களுக்கு உணர்த்தி விட்டார்கள். நாடகமும் மிக வெற்றிகரமாகவே நடந்தேறியது. நடிகர்களின் நடிப்புத் திறமையையும் அங்கே நிர்வாகம் செய்த கப்புடு அவர்களின் திறமையையும் எங்களால் மறக்கவும் முடியாது. பாராட்டாமல் இருக்கவும் முடியாது. சில தொழில் நடிகர்களும் பல தொழில் முறையல்லாத நடிகர்களும் சேர்ந்து நடித்த நாடகம் என்று பார்த்தால் அதுதான் முதல் தடவையாக இருக்கும் என எண்ணுகிறேன். நாடகத்தில் அவர்கள் வேறு நாங்கள் வேறு என்று தெரியாமல், பல ஆண்டுகளாகக் கலைப் பணியாற்றி வரும் ஒரே குழு என்று எண்ணுமாறு, அந்த விதத்தில் இணைந்து சிறப்பாகச் செயல் புரிந்தார்கள். நிச்சயமாக என் மனதாரச் சொல்கிறேன். இந்தப் பெருமைக்கும் முழு வெற்றிக்கும் காரணம் சௌத் இந்தியன் தியேட்டர்ஸ் அன்பர்களே. இந்தக் குழுவினர் கல்கத்தா, பம்பாய் போன்ற முக்கிய நகரங்களுக்கெல்லாம் சென்று அவர்கள் நாடகங்களைப் பெருமையோடு நடத்தி வெற்றி கண்டவர்கள் என்பதும் எனக்குத் தெரியும். இப்படிப்பட்ட திறமை வாய்ந்த குழு இன்னும் சென்னைக்கு வராமலிருக்கிறதே என்று எண்ணிக்கொண்டிருந்தேன். மார்ச்சு மாதக் கடைசியிலும் ஏப்ரல் முதல் வாரத்திலும் சென்னை தியாகராயநகர் கிருஷ்ணகான சபையில் அவர்களது நாடக விழா நடக்கவிருக்கிறது என்ற செய்தி எனக்கு எட்டியதும் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

சௌத் இந்தியன் தியேட்டர்ஸ் விஷயத்தில் ஒரு விசேஷ அம்சத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நடிகர்கள் மட்டுமல்ல, இதிலுள்ள நடிகைகள், டைரக்டர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், ஒலி, ஒளி அமைப்பாளர்கள், அரங்க நிர்மாணம் செய்பவர்கள் போன்ற அனைவருமே அமெச்சூர்கள்தான். அதாவது வேறு ஏதோ உத்தியோகத்தில் இருந்து கொண்டே கலை ஆர்வம் காரணமாக இதில் உழைப்பவர்கள். தொழில் முறையில் வேறு யார் உதவியையும் கோரிப் பெறாதவர்கள். அத்துடன் பொருளாதார உதவி தேவைப்படும் பல நல்ல காரியங்களுக்காக ஏராளமான நாடகங்களை நடத்தி நற்பெயர் பெற்றிருப்பவர்கள். தமக்கென்று ஒரு வழி வகுத்துக் கொண்டு நாடகக் கலைக்குச் சிறந்த தொண்டாற்றி வரும் அன்பர்களுக்கு நமது தமிழக மக்களின் பாராட்டும் வாழ்த்துக்களும் மிகவாகக் கிடைக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

செய்திப் படங்கள்

திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை பலம் பெற்றுத் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் தருணத்தில் திரு அண்ணாதுரை அவர்களையே தலைவராக ஏகமனதாகத் தி. மு. க புதிய எம். எல். ஏ.க்கள் தேர்ந்தெடுத்தார்கள். தலைவரும் முதல் மந்திரியுமான அண்ணாவுக்குத் திரு நெடுஞ்செழியன் மாலை அணிவிக்கிறார்.





★

புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப் பட்டதும், தமிழக கவர்னருக்கு அந்த மகிழ்ச்சி செய்தியைத் தெரிவித்தனர் திரு அண்ணாவும், திரு கருணாநிதியும், திரு நெடுஞ்செழியனும்.

★


பெரம்பூர் சங்கீத சபையின் கட்டட நிதிக்காகக் குமாரி கே. ஆர். ராஜலக்ஷ்மியின் உதவி நடனக் கச்சேரி சமீபத்தில் திரு ஏ. என். பரசுராம் அவர்கள் தலைமையில் நடந்தது. பெரம்பூர் சங்கீத சபையினர் அரியக்குடியின் நினைவாக ஓர் அரங்கம் நிர்மாணிக்கவிருக்கிறார்கள். இந்த அரங்கம் சீக்கிரம் முழுமை பெறக் கலை அன்பர்களின் உதவியைச் சபா நிர்வாகிகள் எதிர்பார்க்கிறார்கள்.





காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் நல்லாசியோடு கல்கத்தாவில் தொடங்கப்பட்டுள்ள 'வேத பவன்' கல்விக்கூடத்தை அமிர்த பஜார் பத்திரிகையின் மானேஜிங் டைரக்டர் திரு துஷார் காந்தி கோஷ் தொடங்கி வைத்தார்.

வீரம் வளர்த்த குரு



''என்ன அப்பா! ஒரேயடியாக இடிந்து போய் உட்கார்ந்திருக்கிறாயே!''

ஒன்பது வயதுப் பாலகன் தன் தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

சிந்தனையில் ஆழ்ந்து முக வாட்டத்தோடு உட்கார்ந்திருந்த அவர் ஏறிட்டுப் பார்த்தார். குறுகுறுவென்ற குழந்தை முகத்தில் கவலையைப் போக்கும் மருந்து மிளிருவதைக் கண்டார்.

''என்னத்தைச் சொல்வேன், குழந்தாய்? நாட்டில் ஜாதிமத பேதங்கள் தலைவிரித்தாடுகின்றன. அதிகாரவர்க்கம் மக்களை மக்களாகக் கருதாமல் மாக்களாகக் கருதித் தொல்லைகள் பல தருகிறது. மக்கள் படும் அவதிக்கோர் எல்லையில்லை. இதிலிருந்து விடிவு காண வேண்டுமென்றால், கடவுள் பக்தி நிறைந்த ஒருவன் தானாக விரும்பித் தியாகம் செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது!'' என்றார் தந்தை.

''அப்படியா?'' தந்தையின் பெருமை அறிந்த தனயன் - ஒன்பதே வயது நிறைந்த சிறுவன் கள்ளங்கபடமற்ற குரலில் கூறினான்: ''அப்பா! தாங்களே ஏன் தங்களை அந்தத் தியாகத்துக்கு உட்படுத்திக் கொள்ளக் கூடாது? மக்களைக் காக்கத் தியாகம் செய்வது பெருமைதானே?''

பாலகன் சொல்லும் பதிலா இது? 'நாட்டுப் பணியைக் காட்டிலும் வேறு சிறந்த பணி கிடையாது' என்று எண்ணும் இந்தப் பாலகனால் நாடு கட்டாயம் நலம் பெறும் என்று மகிழ்ந்தார் தந்தை. 'இந்தப் புதல்வனைப் பெற நாம் என்ன பாக்கியம் செய்தோமோ?' இந்த எண்ணம் அவரைக் களிப்பில் மிதக்கச் செய்தது.

சீக்கிய மதத்தின் ஒன்பதாவது குரு தேக் பஹாதூர் தான், வள்ளுவம் கூறுவது போன்ற மகனை—குரு கோவிந்த சிம்மனைப் பெற்று நாட்டுக்கு அளித்த பேறு பெற்றவர்.

ஃ ஃ ஃ

'சீக்' என்னும் சொல் சிஷ்யன் என்னும் பொருள்பட வழங்குவது. உலகத்தில் எத்தனை மதங்கள் இருந்தாலும், 'ஆண்டவன் ஒருவனே' என்னும் கொள்கை ஆதி காலம் தொட்டே இருந்து வருகிறதல்லவா? அதை மெய்ப்பித்த பெருமை சீக்கிய மத குருவான நானக்கைச் சேர்ந்தது.

ஒரு நாள் மாலை அவர் களைத்துக் கோவில் ஒன்றில் படுத்திருந்தார். அதுவும் எப்படி! ஆண்டவன் சந்நிதியிலே, ஆண்டவனை நோக்கிக் காலை நீட்டிப் படுத்திருந்தார். தரிசனத்துக்கு வந்த பக்தர்கள், ''இது என்ன அநியாயம்? ஆண்டவனை நோக்கிக் காலை நீட்டுவதா?'' என்று கடிந்து கொண்டார்கள்.

''அன்பர்களே! நான் பெருத்த அபசாரம்தான்



செய்துவிட்டேன்! ஆயினும் நடந்த களைப்பு. என்னால் எழுந்து படுக்க முடியாது போலிருக்கிறது. உங்களில் யாராவது என் காலை இழுத்து இன்னொரு திசைக்குத் திருப்பி விடுங்களேன்!'' என்றார்.

அவர் சொன்னபடியே செய்தார்கள் பக்தர்கள்! ஆனால் என்ன ஆச்சரியம்! ஆண்டவனின் சந்நிதி அவரது கால்புறமே திரும்பி விட்டது. எந்தப் புறம் அவர் காலை இழுத்துப் போட்டாலும், அந்தப்புறமே சந்நிதி திரும்புவதைக் கண்ட பக்தர்கள் பிரமித்தார்கள். 'மன்னிக்க வேண்டும், எங்கள் அபசாரத்தை!' என்றனர்.

''உங்கள் தவறு ஏதும் இல்லை. ஆண்டவன் இல்லாத இடம் என்று ஒன்றுமே கிடையாது. அருவமான ஆண்டவன் உருவமாக நின்றாலும், எங்கும் நிறைந்திருக்கிறான்! அந்த ஆண்டவனை வழிபட உருவ வழிபாடு ஒரு கருவியே ஒழிய வேறு ஒன்றும் அல்ல.''

இப்படி உபதேசித்த குருநானக்கின் பரம்பரையிலே தோன்றிய குரு கோவிந்த சிங் இன்னும் ஒரு படி மேலே போய் ஒரு காரியம் செய்தார்.


'எம்மதத்துக்கும் சம்மதமான ஆண்டவனுக்கு எப்படி ஒரு பேத பாவம் இடையாதோ, அப்படியே குருவுக்கும் சிஷ்யனுக்கும் என்ன பேத பாவம் இருக்க முடியும்? 'இன்றைய சிஷ்யன் நாளைய குரு. நேற்றைய குரு முந்திய நாளைய சிஷ்யன். இப்படித் தானே இருக்க முடியும் ?'

இந்த எண்ணத்தில் குரு சிஷ்ய பரம்பரை என்பதை நீக்கி ஒரு சங்கம் நிறுவினார். அதற்குக் 'கால்ஸா' என்று பெயர். நெஞ்சுறுதி வாய்ந்தவரைத் தேர்ந்தெடுக்க அவர் கையாண்ட முறை இதோ இதுதான்:

இறைவழிபாட்டை முடித்துக் கொண்டு உருவிய வாளும் வீரக் கோலமும் பூண்டு மக்கள் கூடியிருந்த இடத்துக்கு வந்தார். ''இன்று பலியிட நான் ஓர் ஆண் மகனை வேண்டுகிறேன். என் உண்மையான சீடர்களில் உயிரைக் கொடுக்கக் கூடியவர் முன் வரலாம்!'' என்றார். அந்தப் பயங்கரச் சூழ்நிலைக்கு அஞ்சாமல் முதலில் எழுந்து நின்றவர் தயாராம் என்னும் க்ஷத்திரியர். அவர் கரம் பற்றிப் பக்கத்தில் அமைத்திருந்த கூடாரத்துக்கு இழுத்துச் சென்றார். காற்றில் 'சர்' என்று ஒலித்த வாள் தலையைச் சீவிய சத்தம் கேட்டது வெளியே இருந்த மக்களுக்கு. சிறிது நேரத்துக்கெல்லாம் இரத்தம் தோய்ந்த வாளோடு வெளியே வந்தவர் இன்னொருவரைக் காவுக்கு அழைத்தார். இம்முறை ஜாட் இனத்தைச் சேர்ந்த தர்மதாஸ் தம்மைப் பலி கொடுக்கத் தயாரானார். இதே போல் மேலும் மூவர் — மோகம் சந்த், ஹிம்மத், ஸாஹப் சந்த் என்னும் பெயர் கொண்டவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

குரு அவர்களது உறுதியைப் பரீட்சித்தாரே ஒழிய அவர்களைப் பலிவாங்கவில்லை. வாளைத் தோய்த்த வர்ண நீரை மந்திரித்து அமிருதமாக வழங்கினார். தாமும் அருந்தி அந்தப் பீடத்தின் சீடரானார். இந்தப் பரம்பரையின் பெயருக்குப் பின்னே 'சிங்' என்னும் சொல் இன்றும் வழங்கி வருகிறது. இவர்கள் தலையிலே கேசம், சீப்பு, காப்பு, கச்சம், உடைவாள் ஆகிய ஐந்தையும் தரிக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

இப்படியாக பக்தியும் வீரமும் ஒருங்கே அமைய ஒரு சமூகத்தை அமைத்த குரு கோவிந்த சிங் இன மத வேறுபாடின்றி எல்லோரையும் ஒன்றாகக் கருதியவர். முகலாய மன்னனின் கொடுங்கோலுக்கு முடிவு தேட முயன்ற குரு கோவிந்த சிங்குக்கு இஸ்லாமைத் தழுவியவர்களுமே அருமை நண்பர்கள். கொடுமையை எதிர்த்தாரே ஒழிய எம்மதமும் சம்மதமெனவே கொண்ட இவரது வாழ்க்கையில்தான் எத்தனை பேரிடிகள்



இளம் பாண்டவர்களைப் போன்ற இவரது சிறு குழந்தைகள் நால்வர் அக்கிரமக்காரரின் கொடுமைக்கு ஆளாகித் துடிதுடித்து இவர் கண்ணெதிரிலேயே மரித்தனர். நேர்மை உணர்வையே தம் மூச்சாகக் கொண்ட குரு கோவிந்த சிங் அப்பொழுதும் நெஞ்சுறுதியையும் மன வலிமையையும் இழக்கவில்லை. தமது கடமையிலேயே கருத்தைச் செலுத்தினார்.

பக்தியிலே வீரத்தை நிறைத்த இப்பெரியவரின் மூன்றாவது நூற்றாண்டு இவ்வாண்டு நடைபெறுவதில் ஒரு விசேடம் என்னவென்றால், இங்கிலாந்தில் இருந்த சீக்கிய மத குருவின் ஆயுதங்கள் அணிகள் எல்லாம் நம் நாட்டுக்குத் திரும்பியுள்ளன. பாரத சமுதாயம் ஒன்றே, அதை என்றும் பிரிக்க முடியாது என்னும் உண்மையைப் பறைசாற்றிய வண்ணம் அப்பொருள்கள் இந்தியா முழுதும் பவனி வருகின்றன.

பக்தியிலே வீரத்தையும் வீரத்திலே பக்தியையும் ஊடவிட்ட குரு கோவிந்தசிங் ஒரு மதத் தலைவர் மட்டும் அல்ல. சிறந்த கவியும் கூட. நாற்பத்திரண்டு வருஷங்கள் வாழ்ந்து, நாட்டின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட குரு கோவிந்தசிங் அடுத்துக் கெடுத்த ஓர் அயலானது சூழ்ச்சிக்குப் பணியாமல் மாண்டார் என்றாலும் பகைவனுக்கும் அருளும் விசால உள்ளம் படைத்திருந்தார்.

'பாரதத்தின் பல புதல்வர்களுக்காக என் நான்கு புதல்வர்கள் மாண்டார்கள். அவர்களுக்காகத் துயரப்படுவதா? பல்லாயிரம் புதல்வர்கள் வாழ்வதைக் கண்டு மகிழ்வதா?' என்று ஒரு கவி மூலம் கேட்கும் குரு கோவிந்தரின் நாமம் உலகில் என்றென்றும் வாழும்.



ஸ்ரீமான் மணி



உங்களுக்கு ஸ்ரீமான் மணியை எப்படித் தெரிந்திருக்க முடியும்? ராம சுப்ரமணியம் என்ற பெயர் அவருக்கு 'ராசி'யில்லாமல் போய்விட்டது. ரத்தினச் சுருக்கமாகப் பெயரை 'மணி'யாக்கிக் கொண்டார்.

ஸ்ரீமான் மணிக்குப் பூர்வீகம் மணிமங்கலம். அவருடைய ஜாதகத்தைக் கணித்த மணி சாஸ்திரிகள் மணியான ஜாதகம் என்று பாராட்டினாராம். ஜாதகம் பொய்க்கவில்லை. மாணவ மணியாக அவர் திகழ்ந்தபோது, ஆசிரியர்கள் 'மணிப் பயல்' என்று தட்டிக் கொடுப்பார்களாம். காரணம் அவருடைய கையெழுத்து மணி மணியாக இருக்குமாம். படிப்பில் மட்டுமல்ல. சாப்பாட்டிலும் அவர் ஒரு ரசிக மணிதான். மணிப்பிரகாரம் உணவு உட்கொள்ளுவார். சாதம் மணி மணியாக இருக்க வேண்டும் அவருக்கு. இல்லாவிட்டால் சகதர்மிணி நாகமணிக்கு மணிக் கணக்கில் அர்ச்சனை விழும். 'சகுனம் ஆகவில்லை', 'ஜாதகம் பொருந்தவில்லை' எனப் பல பெண்மணிகளைத் தட்டிக் கழித்து, நாகமணியை அவர் கல்யாணம் செய்து கொண்டதே அவருடைய பெயருக்காகத்தான்!

மணிக்கு இப்பிறவியில் நான்கு பிள்ளைகள், ஒரு பெண். மணி மீது கொண்ட மையல் காரணமாகத் தம் வாரிசுகளுக்கு ராஜாமணி, மாணிக்யமணி, ரங்கமணி, ரமணி, ராதாமணி என்று பெயர் வைத்தார். கடைக்குட்டியான ராதாமணியை 'அம்மா, மணி...' என்று மணிக்கு ஒரு மெருகும், குழைவும் கொடுத்து அவர் அழைக்கும் விதமே அலாதி. பெண்ணுக்கு அவர் பொன் நகை போடவில்லை. குன்றிமணி, பாசி மணி மாலையும், கருகமணி மாலையும் போட்டிருந்தார். நாகரிகப் பெண்மணியான ராதாமணியும் அம் மாலைகளை விரும்பி அணிவாள்.


மணி, பூனைக்கு எங்ஙனம் மணி கட்டுவதென்று எலிகள் கூடி ஆலோசித்த கதையைக் குழந்தைகளுக்கு அலுக்காமல் சொல்லுவார். ரமணிப் பயல் மட்டும் 'போப்பா! எப்பப் பார்த்தாலும் இந்தக் கதைதானா?' என்று ஆட்சேபம் செய்வான். ஸ்ரீமான் மணி சளைப்பாரா? ஆராய்ச்சி மணியை அடித்து மன்னனிடம் முறையிட்ட பசுவின் கதையைச் சொல்ல ஆரம்பித்து விடுவார்!

ராமாயணத்தில் 'சூளாமணி' கொடுக்கும் கட்டம் அவருக்குப் பிடித்தமானது. மணிமேகலை, நான்மணி மாலை முதலியவற்றை விரும்பிப் படிப்பார். 'தாயின் மணிக்கொடி பாரீர்' பாடலை அடிக்கடி பாடச் சொல்லிக் கேட்பார். பாட்டு அதுவும் மணி ஐயர் பாட்டு என்றால் அவருக்கு உயிர். மணிவாச் சுருட்டு பிடிக்கும் வாயால் 'சண்முகத் தெய்வமணி' என்ற பாடலை முணு முணுப்பார். சில சமயம் 'மணிவண்ணா!' என்றும் பலமாகக் கொட்டாவி விடுவார்.

பத்திரிகைத் தொழிலில் அனுபவம் உடையவர் மணி. 'கதாமணி' என்ற சஞ்சிகையைச் சிலகாலம் நடத்தினார். அதில் வாரா வாரம் மணிக் கதைகளை வெளியிட்டு வந்தார். மணிக் கதைகளை வஜ்ர மணி, வேலுமணி, வீரமணி, பாவாமணி, குப்பாமணி, சுப்பா மணி ஆகிய எழுத்தாளர்கள் மாறி மாறி எழுதினர். அன்னாரின் இலக்கிய சேவைக்காக மணி விழாக் கொண்டாடப் போவதாக வதந்தி உலவுகிறது! —'மயார்'



நாவல் டாக்டர்





''நிர்லோக மோகனாங்கி''

''காணாமற்போன கண்மணி!''

''கோமளம் குமரியானது!''

இதெல்லாம் என்ன? புதிதாக வரவிருக்கும் தமிழ் சினிமாப் படங்களின் தலைப்புகளா? இல்லை, பத்திரிகைச் செய்திகளில் கொட்டை எழுத்துப் பகுதிகளா?

'மோகனாங்கி எந்த விமானத்தில் திரிலோகமும் சென்றாள்? கண்மணி எப்படிக் காணாமற் போனாள்? கோமளம் எந்தக் கடையில் புதிய நைலக்ஸ் புடவைகள் வாங்கிக் கட்டிக் கொண்டாள்?' என்றெல்லாம் வாசகர்கள் தங்கள் மனத்தை அலட்டிக் கொள்ளவே அவசியமில்லை.

இவற்றை யெல்லாம் பற்றிப் பிரத்தியேகமாக அலட்டிக் கொள்வதற்கென்றே, எம். ஏ. பட்டம் பெற்ற ஓர் இளைஞர் சென்னை சர்கலாசாலைக் கட்டடங்களில் வளைய வந்து கொண்டிருக்கிறார். அவரைக் கேட்டால் மேலே கண்ட தலைப்புகளெல்லாம் சுமார் அறுபது வருடங்களுக்கு முன்னால் தமிழில் வெளிவந்த நாவல்களின் பெயர்கள் என்று சொல்லிவிட்டு அத்துடன் பேச்சை நிறுத்தாமல் அவைகளின் கதைக் கருக்கங்கள், பாத்திரப் படைப்பின் தன்மை, அன்றைய சமூகத்தின் ஆசாபாசங்கள் முதலியவற்றைப் பற்றி அலச ஆரம்பித்து விடுவார்! சும்மாதானா? இந்த நாவல்களையெல்லாம் மூலைமுடுக்குகளில் தேடியலைந்து கண்டு பிடித்துப் படித்துக் குறிப்பெடுத்த சிரமம் அவருக்கல்லவா தெரியும்!

இளைஞர் இரா. தண்டாயுதம் எம். ஏ. பொழுதுபோக்குக்காக இத்தகைய நாவல்களைத் தேடி எடுத்து வாசிக்கவில்லை. தமிழ் இலக்கியத் துறையில் டாக்டர் பட்டம் பெற அவர் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டிருக்கும் விஷயம் 'தமிழ் நாவல்கள்'. இந்த ஆராய்ச்சித் துறையில் அவர் தம் முன்னோடிகளைப்போல, புறநானூற்றைச் சுற்றிவந்தோ, அகநானூற்றுக்குள் புகுந்தோ, ஐம்பெரும் காப்பியங்களை ஐயமறப் படித்தோ டாக்டர் பட்டம் வாங்கத் தயாராயில்லை. சர்வகலாசாலையின் பழைய சம்பிரதாயத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில், முதன் முதலாகத் தற்கால இலக்கியத்தில் அதிலும் குறிப்பாக நவீனங்களைத் தேர்ந்தெடுத்து ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். ஆரம்பமே பிரதாபம் நிறைந்தது! ஆம். தேவநாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய 'பிரதாப முதலியார்' சரித்திரம்தானே தமிழ் நாவல் சகாப்தத்தில் பிள்ளையார் சுழியாக விழுந்திருப்பது!

தண்டாயுதம் நாவல் பகுதியில், சமூக நாவல்களை மாத்திரம் தம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். கத்தி முனைகளும், கற்கோட்டைகளும், காஷாயச் சாமியார்களும், கடுகி ஓடும் புரவிகளும் நிறைந்த சரித்திர நாவல்கள் பக்கம் போகவில்லை.

''நான் எம். ஏ. வகுப்பில் தமிழைப் பாடமாக எடுத்துப் பச்சையப்பன் கல்லூரியில், டாக்டர் மு. வ. போன்றவர்களின் பார்வையின் கீழ் பயின்றேன். சர்வகலாசாலைப் பரீட்சையில் முதல் வகுப்பில் நிறைய மார்க்குகள் பெற்றேன். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே நவீனங்கள் மேல் எனக்குப் பற்றுதல் உண்டு. 'எனக்குப் பிடித்த கதை' என்ற தலைப்பில் டாக்டர் மு. வ.வின் 'குறட்டை ஒலி' பற்றி விமரிசனம் எழுதி ஒரு பிரபல பத்திரிகையில் பரிசுகூட வாங்கியிருக்கிறேன். எம். ஏ. பட்டம் பெற்ற பிறகு, என் தம் கவனத்தை மேலும் இந்தகைய விமரிசனப் பாதையில் திருப்பக் கூடாது என்று தோன்றியது. இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்ய அனுமதி கோரி சர்வகலாசாலைக்கு விண்ணப்பித்தேன். சர்வகலாசாலை நிர்வாகம் முதலில் கொஞ்சம் தயங்கியது. காரணம் முதன் முதலாக, பழைய இலக்கியத்தில் புகாமல் வசன



தபால்காரர்: நீங்கள் தினமும் லெட்டர் ஏதாவது வந்ததான்னு கேட்கிறீங்கள். பாவமா யிருந்தது. அதனால் நானே உங்களுக்கு லெட்டர் எழுதிப் போட்டேன். இந்தாங்க லெட்டர்.

அவர்: இப்படீன்னு தெரிஞ்சிருந்தா தினமும் மணியார்டர் வந்ததான்னு கேட்டிருப்பேனே!

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

வனத்தின் தற்காலப் பகுதியான சமூக நாவலை நான் தேர்ந்தெடுத்ததுதான். எப்படியோ ஒரு வழியாகச் சர்வகலாசாலை அனுமதி கொடுத்தது'' என்கிறார் தண்டாயுதம்.

நாணய மதிப்புக் குறைப்பினால் யார் பாதிக்கப்பட்டார்களோ இல்லையோ, நண்பர் தண்டாயுதம் நிச்சயமாகப் பாதிக்கப்பட்டார். சென்ற ஆண்டில் மலேஷியாவில் நடந்த தமிழ் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் இவரும் ஒருவர். அழைப்பு வந்ததைத் தொடர்ந்து இவர் அங்கு அரங்கேற்ற அமரர் கல்கி அவர்களின் அற்புத நவீனங்களைப் பிரத்தியேகமாக எடுத்து ஆராய்ந்து கட்டுரை தயார் செய்தார். ஆனால் அழைப்புக் கிடைத்த தினத்துக்கும் புறப்பட வேண்டிய தினத்துக்கும் இடையே 'ரூபாயின் மதிப்புக் குறைப்பு' திடீரென்று புகுந்ததால் அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை அன்றைய தமிழக அரசாங்கம் குறைத்து விட்டது. அதிருஷ்டமும் தண்டாயுதத்தை விட்டு நழுவிவிட்டது. அவர் தயாரித்த கட்டுரையை வேறு ஒருவர் மலேஷியா தமிழ் விழாவில் படித்தார்.


''ஆங்கிலத்தைப் பொறுத்தவரை இந்தத் துறையில் ஆராய்ச்சிக்கு உதவும்படியாகப் பல நூல்கள் இருக்கின்றன. நவீனங்களின் அட்டவணை ஆரம்ப காலம் முதல் கிடைக்கிறது. நாவலாசிரியர்களின் வாழ்க்கைச் சரித்திரங்கள் இருக்கின்றன. அவரவர்கள் வாழ்ந்த காலத்தின் சமூக நிலை எப்படி என்று தெரிந்துகொள்ள விவரமான சரித்திரப் புத்தகங்கள் இருக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ரிச்சர்ட்ஸன் எழுதப் படிக்கத் தெரியாத அக்கம்பக்கத்தவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதிக் கொடுப்பார். சுவையாகக் காதல் கடிதங்கள் எழுதிக் கொடுப்பவர் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. இதைக் கேள்விப்பட்ட ஒரு புத்தக நிறுவனம், அவரை ஒரு தொகுப்புக்கான காதல் கடிதங்களை எழுதித் தரும்படி வேண்டிக் கொண்டது. ரிச்சர்ட்ஸன், கடிதங்களாலான ஒரு கதையையே எழுதிவிட்டார். 'பமேலா' என்ற தலைப்புடன் ஏழு பகுதிகளாக வெளிவந்த அந்த நவீனம் தான் ஆங்கில இலக்கியத்தில் முதல் நவீனம் என்று பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. இப்படியெல்லாம் தமிழ் நவீனங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள இங்கு போதிய வசதிகள் இல்லை. வேதநாயகம் பிள்ளை அவர்களின் பேரப் பிள்ளையைச் சந்தித்தும் மாதவையாவின் புதல்வர்களைக் கண்டு பேசியும் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். ஆனால், கன்னையதாசர், கிருஷ்ண சாஸ்திரி, பு. வே. சபாபதி முதலியார் போன்ற ஆசிரியர்களைப் பற்றியும் அவர்கள் எந்தச் சூழ்நிலையில் தங்கள் நவீனங்களைக் கற்பனை செய்தார்கள் என்பது பற்றியும் அவ்வளவு சுலபமாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. சில இடங்களில் இலக்கிய மூதாதையர்களைப் பற்றி விசாரிக்கப் போனால், அந்தக் குடும்பத்தினருக்கே தங்கள் தாத்தா நாவல் எழுதிய விஷயம் தெரியாமல் இருக்கிறது. ஆனாலும் நான் மனம் தளரவில்லை'' என்று சொல்லும் தண்டபாணியின் அறையில் எங்கு பார்த்தாலும் நாவல்களும் அவர் குறிப்பெடுத்து வைத்திருக்கும்நோட்டுப் புத்தகங்களும்தான்!

மொழிபெயர்ப்பு, தழுவல், துப்பறியும் நாவல்கள் ஆகிய மூன்று பிரிவும் இவர் ஆராய்ச்சியில் அடங்காதவை. ஆகையால் இவர் அறையில், ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஜே. ஆர். ரங்கராஜு போன்றவர்களின் ஆவிகள் உலாவவில்லை!

எழும்பூரிலுள்ள சர்க்கார் புத்தகப் பாதுகாப்பு நிலையத்தில் அதிக நேரத்தைக் கழிக்கும் இவர், பல பழைய நாவல்களைத் தேடிப் பிடித்துப் படிக்கிறார். ஏன், தமிழில் முதல் நாவலுக்கும் இரண்டாவது நாவலுக்குமிடையே ஏறத்தாழ இருபது வருட இடைவெளி இருக்கிறது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் இவர், நாவல் என்ற உருவம் முதலில் வங்க மொழியில்தான் தோன்றியது என்றும் இரண்டாவதாகத்தான் தமிழில் வந்தது என்றும் சொல்லுகிறார்.

மூன்றாவது வருட ஆராய்ச்சியைச் சீக்கிரமே முடித்துத் தாம் தெரிந்து கொண்டதை எழுத்துருவில் வடித்துச் சர்வகலாசாலைக்குச் சமர்ப்பிக்கவிருக்கும் இவர், 'டாக்டர் தண்டாயுதம்' என்று சீக்கிரமே அழைக்கப்படலாம் என்று எதிர்பார்ப்போமாக. சென்னை சர்வகலாசாலையைப் பொறுத்தவரை புதுமையானதோர் ஆராய்ச்சி செய்து வெற்றி காணவிருக்கும் இவரை 'நாவல் டாக்டர்' என்று அழைப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்களல்லவா? நாவல் என்ற ஆங்கிலப் பதத்துக்குப் 'புதுமையான' என்ற பொருளும் உண்டே!


—கோமதி சுவாமிநாதன்


ஜிம்மி
வால்ட் டிஸ்னி
ஸ் ஸ் ஸ்
டிம்பி எப்போதுமே தூங்கு மூஞ்சி தான்
நான் கூட இந்த குட்டித் தூக்கம் போடலாமே
ஸ்ஸ்ஸ
அந்தச் சத்தம் டிம்பியோட குறட்டை தான்
அட, டிம்பிக்குத் தூக்கத்திலே நடக்கிற வியாதியா!
ஸ் ஸ் ஸ்
© 1966 Walt Disney Productions World Rights Reserved
ஸ் ஸ் ஸ் ஸ்
ஸ் ஸ் ஸ் ஸ்
?
ஸ் ஸ் ஸ் ஸ்
8-7
பாவம், அந்தப் பயலே எழுப்பறதுக்கு மனம் வல்லே
களக் லரக்
அடப்பாவி! ஏமாத்திட்டியே
களக் ..ளக் ஸ்லரப்..
Distributed by King Features Syndicate

பிரபல திருமணம்

நேஷனல் அட்வர்டைஸிங் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்டின் மானேஜிங் டைரக்டரும், சேர்மனுமான ஹாரீஷ் சி. ஜெயினும் ஸ்ரீமதி ஜெயினும் தங்கள் குமாரன் பிரகாஷுக்கும் ஸ்ரீமதி லக்ஷ்மிக்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றதை யொட்டி ஏற்பாடு செய்திருந்த விருந்து வைபவத்துக்கு பம்பாய் நகரத்தைச் சேர்ந்த பிரபல பிரமுகர்களும், மேயரும், ஷெரீபும் தொழிலதிபர்களும், வர்த்தகர்களும் வந்திருந்து புதுமணத் தம்பதிகளை வாழ்த்தினர்.

வாழ்க, லக்ஷ்மி – பிரகாஷ்





பத்தாம் அத்தியாயம்

கல்கத்தா காங்கிரஸ்

"டிர்ர்ரிங்...டிர்ர்ரிங் ...டிர்ர்ரிங்...டிர்ர்ரிங்... டிர்ர்ரிங்!'' —

சர்தார் சொக்கலிங்கம்பிள்ளை வீட்டில் டெலிபோன் அலறியது. திரிவேணி விரைந்து போனை எடுத்தாள்.

''ஹலோ...''

''சிவானந்தம் பேசுகிறேன். மிஸ்டர் சொக்கலிங்கம்பிள்ளை இல்லையா ?''

''ஓ.... டெபுடி சூப்பிரின்டெண்டா? வணக்கம் சார். திரிவேணி பேசுகிறேன். என்ன வேண்டும்?''

''ஓ.... வணக்கம். நீங்களா....? அப்பா இல்லையா ?''

''ஏன்? என்ன விஷயம்?''

''அவரிடம்தான் பேச வேண்டும்.''

''கள்ளுக்கடை மறியலைப் பற்றித்தானே; அப்பா உங்கள் கட்சிதான். இவ்வளவு நேரம் என்னோடு வாதாடிக் கொண்டிருந்தார்கள். பிறகு தோற்றுப் போய் அச்சாபீஸுக்குப் போய்விட்டார்கள். வேண்டுமானால் அச்சாபீஸுக்குப் போன் பண்ணுங்கள். சூப்பிரின்டெண்ட் சார், நாளை மறுநாள் கள்ளுக்கடை மறியல் கட்டாயம் நடக்கும். வந்து

விடுங்கள்'' என்றாள் திரிவேணி சிரித்துக் கொண்டே.

''நீங்கள் இப்படிப் பிடிவாதம் பிடித்தால் பிறகு நான் என் கடமையைச் செய்ய வேண்டி வரும்'' என்றான், சற்றுக் கடுமையாக.

''உங்களைக் கடமையிலிருந்து விலகும்படி யார் சொன்னது? கடமையில் தவறுபவர்களை மகாத்மாவுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காது சார். உங்கள் கடமையைப் பூரணமாகச் செய்யுங்கள். எங்கள் கடமையும் நிறைவேறும்'' என்றாள் திரிவேணி.

''கள்ளுக்கடை நடத்தித் தொழில் செய்பவர்களின் வயிற்றில் மண்ணைப் போடலாமா? தொழில் நடத்த அவர்களுக்கு உரிமை இருக்கிறது.''

''யார் வேண்டாம் என்றார்கள்? நன்றாகத் தொழில் நடத்தட்டுமே. நாங்கள் குடிக்கப் போகிறவர்களை அல்லவா மறிக்கிறோம்? இந்த உரிமை எங்களுக்கு உண்டு. எங்கள் சொல்லைக் கேட்டுக் குடிக்காமல் இருக்கக் குடிகாரர்களுக்கு உரிமை உண்டு.''

''உங்கள் செய்கையால் கள்ளுக்கடை வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படும். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிப்பது எங்கள் கடமை'' என்றான் சிவானந்தம் சற்றுக் கடுமையாக.

''கள்ளுக் கடைக்காரர்களின் நஷ்டம் பற்றிப் பரிதவிக்கிறீர்களே; அந்தக் கள்ளைக் குடித்து விட்டுச் சீரழிந்த குடும்பங்களின் மீது உங்களுக்குக் கொஞ்சம்கூடப் பரிதாபம் இருப்பதாகத் தெரியவில்லையே!''

''நான் தர்க்கம் செய்யத் தயாரில்லை. இதன் விளைவு கடுமையாக இருக்கலாம். பிறகு இதுபற்றி என்மீது குறை சொல்லிப் பயனில்லை'' என்றான் சிவானந்தம் மிகுந்த எரிச்சலுடன்.

''எந்த விளைவையும் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை...''

டக்...

''ஹலோ... ஹலோ... ஹலோ!...''

சிவானந்தம் போனைக் கீழே வைத்து விட்டான். திரிவேணி சிரித்துக் கொண்டே போனை வைத்துவிட்டுத் தலை நிமிர்ந்தாள். எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தவாறு அவள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தான், ரங்கமணி.

''என்ன சொல்லுகிறார்?'' — ரங்கமணி கேட்டான்.

''கள்ளுக்கடைக்காரர்களுக்கு நஷ்டம் ஏற்படுமாம். அதில் அவருக்கு மிகுந்த வருத்தம்''-கேலி செய்யும் பாவனையில் முகத்தைச் சுளித்துக் கொண்டு திரிவேணி சொன்னாள். ஒரு குழந்தையைப் போல் முகத்தைச் சுளித்து, உதட்டை மடக்கி நின்ற திரிவேணியைப் பார்த்து, ரங்கமணி சிரித்தான்


''அதுவும் உண்மைதான்'' என்றான் ரங்கமணி.

''பயமுறுத்துகிறார், இதன் விளைவு கடுமையாக இருக்குமென்று'' என்றாள் திரிவேணி

''இந்த முயற்சி இப்போது வீண்தான்.''

''தீமையைத் தடுப்பதா வீண்?''

''இதில் எல்லாம் தலையிடுவதற்கு இது சமயமல்ல. சுதந்திரம் கிடைத்தபிறகு இதைப் பற்றி யோசித்துக் கொள்ளலாமே. மேலும், குடிப் பழக்கத்தை மறியல் செய்தோ, சட்



டம் இயற்றியோ தடுத்து விடமுடியாது. இதற்குப் போய் இப்படி நேரத்தையும் சக்தியையும் வீணாக்க வேண்டாம்.''

''சுதந்திரம் கிடைக்கும்வரையில் மக்கள் குடித்துக் கெட்டுப் போய்க் கொண்டிருக்கட்டும் என்கிறீர்களா?''


''வெள்ளையனை விரட்டுவதை விட இது முக்கியம் அல்ல. மேலும் மறியல் செய்வதனால் குடிப் பழக்கம் நின்றுவிடப் போவதுமில்லை. கள்ளுக்கடைக்காரன், கடையை மூடப் போவதுமில்லை. சட்டம் இயற்றினால் கூடக் கள்ளத்தனமாகக் குடித்துக் கொண்டுதான் இருப்பார்கள். மதுவையும் விபசாரத்தையும் எந்த நாடும் சட்டத்தினால் மட்டும் திருத்தி விட முடியாது. மக்களாக உணர்ந்து திருந்த வேண்டிய விஷயம் இது.''

''முடிவைப் பற்றி இப்போதே ஜோசியம் சொல்லுவானேன்? முயன்று பார்ப்போம்.''

''சரி, பாருங்கள்.''

''நீங்கள் மறியலுக்கு வரப் போவதில்லையா?''

''இந்த மாதிரிப் பைத்தியக்காரத்தனமான காரியங்களுக்கெல்லாம் என்னை எதிர்பார்க்காதே. உங்கள் கூட்டத்தாரின் அர்த்தமற்ற நடவடிக்கைகளில் நான் பங்கு



கொள்ள முடியாது'' என்றான் ரங்கமணி, அலட்சியமாக.

''சத்தியாக்கிரகத்துக்குத் தனிச் சக்தி உண்டு'' என்றாள் திரிவேணி அழுத்தமாக.

''என்ன உண்டு? இதுவரை அது எதையும் சாதித்ததாகத் தெரியவில்லை. வெள்ளைக்காரன் ஓர் அங்குலம்கூட நம்மை விட்டு நகரவில்லை. கள்ளுக்கடைகளை மூட வேண்டுமென்று நாங்கள் நினைத்தால் ஒரு வாரத்துக்குள் அதைச் சாதித்து விடுவோம்.''

''அப்படியா....?''

''ஆமாம். கள்ளுக்கடையெல்லாம் தீப் பற்றி எரியும். கள்ளுப் பானைகள் சிதறி உடையும். பனையில் தொங்கும் கலயங்கள் சுக்கு நூறாகும். ஒரே வாரந்தான்; கள்ளுக்கடைகள் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும். இதை விட்டுவிட்டு சத்தியாக்கிரகமாம், அகிம்சையாம். சேச்சே... இந்தியாவை வெள்ளைக்காரன் ஆண்டாலும் ஆண்டான், இப்படியா கோழைகளாகும்படி செய்துவிடுவான்...'' என்றான் ரங்கமணி, எரிச்சலுடன்.

''ஏன் இவ்வளவு கோபம்?'' என்ற குரலைக் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். சங்கரராம தீக்ஷிதர், பெட்டி படுக்கையுடன் உள்ளே வந்து கொண்டிருந்தார். இருவரும் எழுந்து அவரை வரவேற்றனர்.

''உங்கள் சிஷ்யருக்கு அஹிம்சை என்றாலே கோபம் வருகிறது'' என்றாள் திரிவேணி.

''என்னுடைய சிஷ்யனா? அப்படியிருந்தால்தான் தேவலையே. உன் அப்பாவுடைய பிரதம சிஷ்யனாகி விட்டானே!'' என்றார், தீக்ஷிதர்.

''நாளை மறுநாள் இந்த ஊரில் கள்ளுக்கடை மறியல் நடக்கப் போகிறது தெரியுமா?'' — ரங்கமணி தீக்ஷிதரிடம் கேட்டான்.

''தெரியுமாவா? மறியலுக்குத்தானே பெட்டி படுக்கையுடன் புறப்பட்டு வந்திருக்கிறேன். ஒரு வாரத்துக்கு முன்னே திரிவேணி கடிதம் எழுதிவிட்டாளே!'' என்றார் தீக்ஷிதர்.

''சரி, திரிவேணிக்குப் பக்க பலம் சேர்ந்து விட்டது. இனி நான் இங்கிருக்கக் கூடாது'' என்று கூறிக்கொண்டு எழுந்தான் ரங்கமணி.

''நீ எதற்காக ஓடுகிறாய்? எங்களைக் கண்டால் கூடவா உனக்குப் பயம்?''

''பயம் ஒன்றும் இல்லை. வீணாகத் தர்க்கத்தில் இறங்க வேண்டியிருக்கும். இவ்வளவு நேரம் இவளோடு மோதியாகி விட்டது. இப்போது இவளுக்கு வக்காலத்து வாங்க நீங்கள் வேறு வந்துவிட்டீர்கள். உங்களோடு தர்க்கம் செய்து தொண்டையை வறள வைத்து நேரத்தைப் போக்குவதை விட, தோட்டத்தில் கொஞ்சம் தண்ணீர் இறைத்தால் உடலாவது பலம் அடையும்'' என்றான் ரங்கமணி.

''ஐயோ, நீ தண்ணீர் இறைத்தால் உன் தீவிர வாதம் தாங்காமல் செடிகளெல்லாம் செத்து விழுந்து விடும். பேசாமல் இப்படி வந்து உட்கார்'' என்று கூறி ரங்கமணியின் கையைப் பற்றி இழுத்து நாற்காலியில் இருத்தினார் தீக்ஷிதர்.

''இரண்டு நாட்களுக்கு முன் மகாத்மாவிடமிருந்து என் கடிதத்துக்குப் பதில் வந்தது. உன்னைப் பற்றி எழுதியிருந்தேன். நீ சொக்கலிங்கத்தின் வலையில் சிக்கிவிட்டதைப் பற்றித்தான் எழுதினேன். மகாத்மா மன வேதனையுடன் பதில் எழுதியிருக்கிறார்.''

''வேறு என்ன எழுதியிருக்கிறார்?''

''சொக்கலிங்கத்தின் மகள் உன்னைத் திருத்திவிடுவாள் என்று நம்புகிறாராம்.''

''என்னது? இவரை நான் திருத்தவா?'' என்று வியப்புடன் கேட்டாள் திரிவேணி.

''உன்மீது தனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு என்றல்லவா எழுதியிருக்கிறார். நீ எழுதிய கடிதம் கிடைத்ததாம். இரண்டு நாட்களில் உனக்குப் பதில் எழுதுவதாகவும் எழுதியிருக்கிறார்'' என்றார் தீக்ஷிதர்.

''பெரிய வம்பாகி விட்டதே. இந்த மனிதரைத் திருத்தும் வேலையை என்னிடம் ஒப்படைக்கிறாரா மகாத்மா!'' என்றாள் திரிவேணி சிறிது கலவரத்துடன்.

ரங்கமணி உரக்கச் சிரித்தான்.

''தீக்ஷிதர்வாள், தெனாலிராமன் கதை தெரியுமா?'' என்றாள் திரிவேணி.

''கழுதையைக் குதிரையாக்க நினைத்த கதைதானே? நேரடியாகவே என்னைக் கழுதை என்று சொல்லி விடேன். இதற்குத் தெனாலிராமனைச் சாட்சிக்குக் கூப்பிடுவானேன்?'' என்றான் ரங்கமணி சிரித்துக் கொண்டே.

''ஒரு முறை மகாத்மாவிடம் இவரை அழைத்துச் செல்லுங்கள்'' என்றாள் திரிவேணி.

''வார்தாவரை வந்துவிட்டு மகாத்மாவைப் பார்க்காமலே ஓடி வந்துவிட்டான்.''

''ஏன்?''

''அவரைப் பார்த்துவிட்டால் இவனுடைய லட்சியம் எல்லாம் சிதைந்து விடுமாம். தன்மீதே இவனுக்கு நம்பிக்கை இல்லை. ரங்கா, நான் இன்னும் சிறிது நாளில் வார்தாவுக்குப் போவேன். நீயும் வாயேன்.''

''நீங்களே போய் வாருங்கள்'' என்றான் ரங்கமணி கைகளைக் கூப்பி வணங்கிக் கொண்டே.

''மதுரை ஸ்டேஷனில் நான் கொடி கட்டியதுகூட இந்தத் தீவிரவாதிக்குப் பிடிக்கவில்லையாம்'' என்றாள் திரிவேணி.

''ரயில் வண்டியில் கொடி கட்டுவதைவிட, ரயிலைக் கவிழ்க்க வெடி வைப்பது மேல் என்று எண்ணும் கூட்டத்தைச் சேர்ந்தவனுக்கு இதெல்லாம் புரியக்கூடச் செய்யாது. அம்மா, வேணி, நீ அன்று தண்டவாளத்தில் உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்தபோது எனக்குப் பழைய சம்பவம் ஒன்று ஞாபகம் வந்தது. இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னால், கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்கு நாங்கள் சென்றபோது, இப்படித்தான் சிதம்பரம் பிள்ளை, கரக்பூர் ஸ்டேஷனில் சத்தியாக்கிரகம் செய்துவிட்டார்'' என்றார் தீக்ஷிதர்.

சிதம்பரம் பிள்ளை என்றதும் ரங்கமணி சிரத்தையோடு கேட்கத் தொடங்கினான்.

''சிதம்பரம் பிள்ளையும் பயங்கரவாதிதானே?'' என்றாள் திரிவேணி, சலிப்புடன்.



''சிதம்பரம் பிள்ளை பயங்கரவாதி இல்லை, தீவிரவாதி. அசாதாரணமான துணிவுள்ளவர். ஆனால், வெடி வைக்கவும், கொலை செய்யவும் அவர் மனம் இடம் கொடுத்ததேயில்லை.

''கல்கத்தாவில்காங்கிரஸ் மகாசபை நடந்தது. அது ஒரு முக்கியமான கூட்டம். மகாத்மாவின் சாத்வீக சத்தியாக்கிரகத்தைப் பரிசீலிப்பதற்காகக் கூடிய கூட்டம் அது. காங்கிரஸ், இனி எந்தமுறையில் செயல்பட வேண்டும் என்பதை அந்தக்கூட்டம்தான் தீர்மானித்தது. காங்கிரஸின் பாதையில் ஒரு புதுத் திருப்பத்தை ஏற்படுத்தி விட்டதால்தான், அந்தக் கல்கத்தா மகாநாடு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகி விட்டது. தமிழ் நாட்டிலிருந்து பல தலைவர்கள் விசேஷ ரயில் வண்டியில் 'சென்னையிலிருந்து புறப்பட்டார்கள். இவனுடைய அப்பா, சாமிநாதனும் எங்களோடுதான் வந்தான்...''

''ஓ... சுதந்திர இயக்க வீரரின் பரம்பரையைச் சேர்ந்தவர்களா நீங்கள்?'' என்று கூறிவிட்டுக் கடைக்கண்ணால் ரங்கமணியைப் பார்த்தான் திரிவேணி.

''குறுக்கே பேசாதே. தீக்ஷிதர் சொல்லட்டும். இல்லையென்றால், மறந்து விடுவார். இப்பொதெல்லாம் தீக்ஷிதருக்கு மறதி அதிகம்'' என்றான் ரங்கமணி.

தீக்ஷிதர் சொன்னார்:

''சென்னையிலிருந்து கல்கத்தா போகும் வரை சிதம்பரம் பிள்ளை ஓயவேயில்லை. ரயில் நிற்கும் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி, ஒவ்வொரு கம்பார்ட்மெண்டாக ஏறி, மகாத்மா காந்திக்கு எதிராகப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். மகாத்மாவின் திட்டமான சாத்வீக சத்தியாக்கிரகம்தான் அந்தக் கூட்டத்தின் முக்கிய தீர்மானம். அதை முறியடித்து விட வேண்டும் என்ற வெறியில் இருந்தார்...''

''சபாஷ். காந்தியின் உருப்படாத தத்துவத்தை எதிர்த்துப் போராட அப்போதே ஒரு வீரர் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறாரே. அந்த அளவுக்குத் தமிழ் நாடு பாக்கியம் செய்ததுதான்'' என்றான் ரங்கமணி உற்சாகத்துடன். ''நீங்கள் மட்டும் குறுக்கே பேசலாமா?'' என்றாள் திரிவேணி. குறும்பாகச் சிரித்தாள். ரங்கமணி, வாயைக் கையால் பொத்திக் கொண்டு தீக்ஷிதர் சொல்வதைக் கேட்க ஆயத்தமானான். ரங்கமணியின் குறும்பைக் கண்டு உள்ளுக்குள்ளேயே ரசித்துச் சிரித்தாள், திரிவேணி.

தீக்ஷிதர் தொடர்ந்து சொன்னார்:

''சிதம்பரம் பிள்ளை தீவிரமாகப் பிரசாரம் செய்தார். அப்போது, திலகர் இல்லை; இறந்து விட்டார். 'திலகர் மட்டும் உயிரோடு இருந்தால், இந்தப் பேடித்தனமான தீர்மானத்தைக் காங்கிரஸ் கூட்டத்தில் கொண்டுவர விட்டிருப்பாரா?' என்று சிதம்பரம் பிள்ளை சீறினார். அதே ரயிலில் சேலம் விஜயராகவாச்சாரியாரும் வந்தார். கரக்பூர் ஸ்டேஷன் வந்ததும் எங்கள் ரயில் வண்டி நின்றது. வெகு நேரமாகியும் கிளம்பவில்லை. சிதம்பரம் பிள்ளை ஸ்டேஷன் மாஸ்டரிடம் காரணம் கேட்டார். ஏதோ ஒரு மெயில் வண்டி பின்னால் வருவதாகவும் அதை முதலில் விட்டு விட்டுத்தான் இந்த வண்டியை விட வேண்டும் என்று உத்தரவு வந்திருப்பதாகவும் கூறினார் ஸ்டேஷன் மாஸ்டர். சிதம்பரம் பிள்ளைக்குக் கோபம் வந்து விட்டது. முந்தி வந்த எங்கள் வண்டியை இங்கே காக்க வைத்துவிட்டு, பிந்தி வரும் ஒரு சாதாரண வண்டியை முந்தி விடுவது தங்களை அவமதிப்பதாகும் என்று நினைத்து விட்டார். அதற்கு ஏற்ற மாதிரி, இவன் அப்பா சாமிநாதனும் சிதம்பரம் பிள்ளைக்குப் பக்க பலமாக இருந்து தூண்டினான். இதற்குள் பின்னால் வந்த வண்டியும் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தது. எங்கள் வண்டியைத்தான் முதலில் விட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார் சிதம்பரம் பிள்ளை. ஸ்டேஷன் மாஸ்டர் மறுத்தார். உடனே சிதம்பரம் பிள்ளை 'பின்னால் வந்த வண்டியை முதலில் போக விடமாட்டேன்' என்று அந்த வண்டிக்கு முன்னால் போய்த் தண்டவாளத்தில் உட்கார்ந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து சாமிநாதனும் இன்னும் பல தொண்டர்களும் தண்டவாளத்தில் உட்கார்ந்து விட்டார்கள். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஏற்கனவே எங்கள் வண்டி நாமதமாக ஓடிக் கொண்டிருந்தது. இப்போது இது வேறு கணக்கம். கல்கத்தா காங்கிரஸுக்குப் போய்ச் சேர மாட்டோமோ என்றுகூடப் பயந்தோம். எங்கள் பயணமே காங்கிரஸ் கூட்டத்துக்குத்தான். கூட்டம் முடிந்த பிறகு கல்கத்தா போய் என்ன செய்ய? ஆனால் ரயில் நகருவதாகவும் இல்லை. இதற்குள் ரயிலிலிருந்த காங்கிரஸ் கூட்டம் இரண்டாகப் பிரிந்து விட்டது. சிதம்பரம் பிள்ளையை ஆதரித்த கூட்டம், தண்டவாளம் முழுதும் உட்கார்ந்து விட்டது. சிதம்பரம் பிள்ளையிடம் பேசவே எங்களுக்குப் பயம். அவருடைய தியாகமும், அறிவுத் திறனும், துணிவும் எங்களை ஏற்கனவே பிரமிக்க வைத்திருந்தன. அவர்மீது மிகுந்த பக்தியும் மரியாதையும் எங்களுக்கு இருந்ததால், அவரை நெருங்கி இதுபற்றி விவாதிக்க எங்களுக்குத் துணிவில்லை. அந்தச் சமயத்தில் ஒருவர் சொல்லிச் சிதம்பரம் பிள்ளை கேட்க வேண்டுமானால், அவர், சேலம் விஜயராகவாச்சாரியார்தான். அவர் சிதம்பரம் பிள்ளையிடம் மிகவும் அபிமானம் உள்ளவர். கடையில், சிதம்பரம் பிள்ளையின் பிடிவாதம் தளர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் வெற்றி பெற்றதில் சிதம்பரம் பிள்ளைக்குச் சற்றுக் கோபம்தான் என்றாலும் விஜயராகவாச்சாரியாருக்காக விட்டுக் கொடுத்து விட்டார். திரிவேணி, மதுரை ஸ்டேஷனில் தண்டவாளத்தில் உட்கார்ந்ததும் எனக்கு அந்தப் பழைய நினைவுதான் வந்தது....''

''கல்கத்தா காங்கிரஸில் அந்தத் தீர்மானம் வெற்றி பெற்றபிறகு, சிதம்பரம் பிள்ளை மனம் உடைந்துவிட்டார் இல்லையா?'' என்று கேட்டான் ரங்கமணி.

''சிதம்பரம் பிள்ளையின் எதிர்ப்புத்தான் படுதோல்வி அடைந்து விட்டதே. அதன் பிறகு அவர் காங்கிரஸிலிருந்தே விலகி

வாழத் தொடங்கி விட்டாரே. நாங்கள் கல்கத்தாவில் இருந்த போதுதான் நீ பிறந்திருக்கிறாய் என்று தந்தி வந்தது'' என்றார் தீக்ஷிதர்.

''தந்தி வந்தது காந்தியின் தீர்மானம் நிறைவேறிய பிறகா அல்லது முந்தியா?''— பரபரப்புடன் கேட்டான் ரங்கமணி.

''முந்தித்தான். காங்கிரஸ் கூட்டத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது, தந்தி வந்தது. உடனே சாமிநாதன், மிட்டாய் வாங்கி எல்லோருக்கும் கொடுத்தான். சிதம்பரம் பிள்ளை, 'தம்பி, எனக்கு மிட்டாய் ஒன்றிரண்டெல்லாம் காணாது. ஒரு குத்து அள்ளிப் போடு' என்று கூறி வாயைத் திறந்தார். அவர் வாயில் ஒரு குத்து மிட்டாயை அள்ளித் திணித்தான், சாமிநாதன். 'கூட்டத்துக்குப் போகு முன்பே சாமிநாதன், வாய் நிறைய இனிப்புக் கொடுத்து விட்டான். கூட்டம் இதே மாதிரி இனிப்பைத் தருமோ? அல்லது கசப்பைக் கொடுத்து விடுமோ' என்று முனகிக் கொண்டே வந்தார் சிதம்பரம் பிள்ளை. எல்லாரும் மிட்டாயை அசை போட்டுக் கொண்டுதான் காங்கிரஸ் கூட்டத்துக்குச் சென்றோம்.''

''நல்ல வேளை, காந்தியின் தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்னமேயே பிறந்து விட்டேன். உருப்படாத உளுத்துப் போன அந்தத் தீர்மானம் நிறைவேறிய பிறகு பிறந்த பாவத்துக்கு ஆளாகவில்லை'' என்றான், ரங்கமணி. திரிவேணி சிரித்தாள்.

''அதனால்தான் இப்படி இருக்கிறீர்கள். தீர்மானம் நிறைவேறிய பிறகு பிறந்திருந்தீர்களானால், உங்கள் பாதை, எங்கள் திசை நோக்கி அமைந்திருக்கும்'' என்றாள்.

''தீர்மானம் நிறைவேறியதும் சாமிநாதன் என்ன சொன்னான் தெரியுமா? 'சங்கரராமா! ஊருக்குப் போனதும், அம்பாசமுத்திரம் நேசவாளர்களிடம் சொல்லி உன்னுடைய கூட்டத்தாருக்குச் சேலை அனுப்பச் சொல்கிறேன், அதைக் கட்டிக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்யுங்கள்' என்றான். பக்கத்தில் இருந்த சிதம்பரம் பிள்ளை என்ன சொன்னார் தெரியுமோ? 'தம்பி, கொஞ்சம் பெரிய சேலைகளாக அனுப்பச் சொல்லு. அப்போதுதான் முக்காடு போட முடியும்' என்றார். கூட்டம் முடிந்து எல்லோரும் வெளியேறிக் கொண்டிருந்தபோது சிலர், சிதம்பரம் பிள்ளையைக் கேலி செய்யும் பாவனையாகப் பேசி வந்தார்கள். உடனே பிள்ளை இடி முழக்கம் போல் ஒரு பாட்டைப் பாடினார்!

சொந்த அரசும் புவிச்
　　சுகங்களும் மாண்புகளும்
அந்நகர்க்குண்டாமோ !-- கிளியே!
　　அலிகளுக் கின்பமுண்டோ ?
கண்கள் இரண் டிருந்தும்
　　காணுந் திறமையற்ற
பெண்களின் கூட்டமடி! -- கிளியே!
　　பேசிப் பயனென்னடி!''

'''வாடா தம்பி, போகலாம்' என்று சாமிநாதனை இழுத்துக் கொண்டு வேகமாக வெளியே நடந்தார். ஊர் திரும்பும்போது நீ பிறந்த விஷயத்தைக் கூட சாமிநாதன் மறந்து விட்டான். மகாத்மாவையும், அவரைப் பின்பற்றியவர்களையும் ஏசிக்கொண்டே வந்தான்'' என்றார் தீக்ஷிதர்.

தீக்ஷிதர் கூறியதை ஆவலோடு ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த ரங்கமணி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். அவனுடைய நினைவில் அவன் தந்தையின் உருவம் நிழலாடியது. மறுகணம் சென்னை நகரத்து வீதியில் நடந்த சம்பவம், பளிரென்று அவன் மனத் திரையில் மின்னியது. திடீரென்று

யார் இந்தச் சகோதரர்கள்?

இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மா காந்தி அவர்களும் அவரது மூத்த சகோதரர் லக்ஷ்மிதாஸும் 1886ம் வருஷத்தில் அளித்த இளமைத் தோற்றத்தைச் சித்திரிக்கும் படம் அது.



கரம்சந்த் காந்தி இருபத்தைந்தாவது வயதில் போர்பந்தர் திவானாக ஆனார். அப்பொழுது அங்குள்ள அரசியல் ஏஜண்டான ஆங்கிலேயர் இவரைக் கைப் பொம்மையாக்கி விளையாட நினைத்தான். மகாராஜாவையும் கரம்சந்தையும் அவன் இழிவாகப் பேசினான். கரம்சந்த் அவரோடு சண்டைக்குப் போய் விட்டார். அந்த ஆங்கிலேய ரீஜண்ட் கரம்சந்தை ஒரு மரத்தடியில் கைது செய்து பல மணி நேரம் காவல் வைத்து மிரட்டிப் பார்த்தான். கரம்சந்த் அதற்கெல்லாம் மசியவில்லை. கரம்சந்துக்குப் பணத்திலே ஆசை கிடையாது. ஆனால் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் கடைப்பிடிப்பவர். கரம்சந்த் காந்தி மூன்று தடவை மனைவியை இழந்து, கடைசியில் புட்லிபாயை மணந்து கொண்டார். முதல் இரண்டு மனைவியருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருந்தார்கள். புட்லிபாய் ஒரு பெண் மகளையும் மூன்று புதல்வர்களையும் பெற்றெடுத்தாள். மகள் ராலியாத்பென், புதல்வர்கள் லக்ஷ்மிதாஸ், கர்ஸன்தாஸ், மோகன்தாஸ் ஆகியோர்.

அவன் கண்கள் சிவந்தன, கைகள் துடித்தன, பல்லைக் கடித்தான். தன்னை மறந்து வெறி கொண்டு பக்கத்து மேஜையின் மீது ஓங்கிக் குத்தினான். திரிவேணி, திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

''என்ன ரங்கமணி....?'' — திகைப்புடன் கேட்டார் தீக்ஷிதர். ரங்கமணி சுய உணர்வை அடைந்தான்.

''ஒன்றுமில்லை. எதையோ நினைத்துக் கொண்டேன். கோபம் வந்து விட்டது'' என்றான். ஒன்றும் புரியாமல் அவனையே வெறிக்கப் பார்த்தாள் திரிவேணி.

''உன் அப்பா சாமிநாதனைப் போலத்தான் நீயும் இருக்கிறாய்! அவனுடைய வெறி, கோபம், துணிச்சல் எல்லாம் அப்படியே பரம்பரைச் சொத்து மாதிரி உனக்குக் கிடைத்து விட்டது'' என்றார் தீக்ஷிதர்.

''யாருக்குப் பரம்பரைச் சொத்து கிடைத்திருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு பெரிய பாத்திரத்தில் காப்பியுடன் உள்ளே நுழைந்தாள் அத்தை.

''இதென்ன இவ்வளவு பெரிய பாத்திரத்தில் காப்பி?'' என்று ரங்கமணி வியப்புடன் கேட்டான்.

''தீக்ஷிதரின் குரல் கேட்டது. இவர் காப்பியிலேயே நீச்சல் அடிப்பவர். அதனால் பெரிய பாத்திரத்திலேயே கொண்டு வந்து விட்டேன்'' என்று கூறிக் கொண்டே எல்லாருக்கும் காப்பியை ஊற்றிக் கொடுத்தாள் அத்தை.

''காந்திக்கு இந்தக் காப்பி மீது கண் விழவில்லை போலிருக்கிறது. இதற்கும் ஒரு மறியல் நடத்துவதுதானே?'' என்றான் ரங்கமணி.

''காப்பிக் குடியர்களுக்கு மறியல் என்றால் தீக்ஷிதர் காந்திக்கே மறியல் நடத்தி விடுவார்'' என்றாள் அத்தை சிரித்துக் கொண்டே. காப்பியை ரசித்து உறிஞ்சிக் கொண்டிருந்தார் தீக்ஷிதர்.

''அத்தை, மறியலுக்கு இவர் வரப் போவதில்லையாம்!'' என்றாள் திரிவேணி.

''தெரிந்ததுதானே! சொக்கலிங்க அண்ணாவின் வலையில் விழுந்து விட்டானே. தம்பி, குடிப்பது நல்லது என்கிறாயா?'' என்று ரங்கமணியைப் பார்த்துக் கேட்டாள் அத்தை.

''நான் அப்படிச் சொல்லவில்லை. சத்தியாக்கிரகம் பயனற்றது என்கிறேன்'' என்றான் ரங்கமணி.

''நல்ல வேளை! இப்படியாவது சொல்லுகிறாயே. அண்ணா என்ன சொல்லுகிறார் தெரியுமா? குடித்தால்தான் வெறி வருமாம்; வெறி வந்தால்தான் வெள்ளையன் பயந்து ஓடுவானாம். வெள்ளையன் ஓடும் வரையாவது இந்தக் கள்ளுக்கடைகள் திறந்திருக்க வேண்டுமாம். இல்லையென்றால், பாமர மக்கள் கள் இல்லாமல் மூலையில் முடங்கி விடுவார்களாம். இப்படிப் போகிறது அண்ணாவின் தர்க்கம்'' என்றாள் அத்தை.

''அதுவும் சரிதான்'' என்றான் ரங்கமணி.

''என்ன? சரிதானா....?'' என்று தன்னை மறந்து கத்தினாள் அத்தை. ரங்கமணி திகைத்து விட்டான். அத்தை கோபம் கொண்டு அவன் கண்டதேயில்லை. ''எத்தனை குடும்பங்கள் குடியால் சீரழிந்து விட்டன, தெரியுமா? எத்தனை குழந்தைகள், எத்தனை பெண்கள் அநாதையானார்கள் தெரியுமா? குடி ஒரு பேய்....பேய்.... பேய் நுழைந்த வீட்டில் மனிதன் வாழ முடியாதப்பா....'' அத்தை ஆவேசத்தோடு பேசினாள். தொடர்ந்து பேச முடியவில்லை. கண்கள் கலங்கின. உதடுகள் துடித்தன. தொண்டை அடைத்துக் கொண்டது. ஒன்றும் பேசாமல் அந்த அறையை விட்டு வேகமாக வெளியேறி விட்டாள்.

அந்த அறை முழுதும் நிசப்தம் நிலவியது. திரிவேணி தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தீக்ஷிதர் அத்தை சென்ற வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார். ரங்கமணி பரக்கப் பரக்க விழித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்குப் பிறகுதான் ரங்கமணிக்குப் பேசும் சக்தி வந்தது. ''நான் ஏதாவது தவறாகப் பேசிவிட்டேனா, திரிவேணி?'' — பயந்து கொண்டே கேட்டான்.

''அத்தை மனம் புண்பட்டிருக்கிறாள். அந்தக் காலத்தில் மாமா குடிப் பழக்கத்தினால் சொத்தை இழந்தார். கடைசியில் இந்த வெறியால் எங்கோ தொலைந்து போனார். அந்த வேதனைதான். உங்கள் மீது அத்தைக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு. நீங்களே அப்படிச் சொல்லியதுதான் அத்தைக்கு அதிர்ச்சியைக் கொடுத்து விட்டது!'' என்றாள் திரிவேணி.

ரங்கமணியின் மனம் தவித்தது. அத்தையின் கலங்கிய கண்கள் அவன் நினைவில் வந்து வந்து உறுத்தியது. அவள் மனம் புண்படும்படியாகப் பேசி விட்டோமே என்று பரிதவித்தான். தன் மீதே கோபம் வந்தது. ஒன்றும் செய்யத் தோன்றாமல் பிரமித்து உட்கார்ந்திருந்தான்.

''என்னடா சங்கரா! மறியலுக்கு வந்து விட்டாயா? ஆமாம், கொல்லன் உலையில் இந்த ஈ என்ன செய்கிறது?'' என்று ரங்கமணியைச் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டே வீட்டினுள்ளே நுழைந்தார் சர்தார்.

''டெபுடி சூப்பிரண்டெண்டெண்ட் போன் செய்தாரே!'' என்றாள் திரிவேணி.

''அச்சாபீஸுக்கும் போன் பண்ணினான். மறியலைப் பற்றித்தான் விசாரித்தான். உங்கள்பாடு காங்கிரஸ் பாடு. இந்த விஷயத்தில், எனக்கும் என் மகளுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது; முழுக்க முழுக்க இது திரிவேணியின் சொந்த விஷயம் என்று கூறிவிட்டேன். சரிதானே நான் சொன்னது?'' என்றார் சர்தார்.

''கரெக்ட்!'' என்றாள் திரிவேணி சிரித்துக் கொண்டே.

''ரங்கா! நீ உடனே அச்சாபீஸுக்குப் போ. உனக்கு வேலை இருக்கிறது!'' என்றார் சர்தார். ரங்கமணி எழுந்தான்.

''சாப்பிடச் சீக்கிரம் வந்து விடுங்கள். தீக்ஷிதருக்குச் சீக்கிரம் பசித்து விடும். நீங்கள் வந்த பிறகுதான் நாங்கள் சாப்பிட வேண்டும்'' என்றாள் திரிவேணி.

ரங்கமணி தலையை ஆட்டிக் கொண்டே வெளியேறினான். (தொடரும்)



ஹகோபா
எம்ப்ராய்டரி
வேலைப் -
பாடமைந்த
துணிகள்
பாங்கானவை,
பலதிறப் -
பயனுள்ளவை,
நீடித்துழைப்பவை
ஹகோபா
RB/FC/TAM/172



அத்தியாயம் 10

உள்ளம் வெந்தது!

இதயத்தைக் கொள்ளை கொள்ளும் நேர்த்தியான நறுமணம் அது! உடம்பிலே நோவு எடுத்தால் ஒத்தடம் கொடுப்பதுபோல, உள்ளத்தின் வலிக்கு உகப்புத் தருகிற சுகத்தோடு வந்தது அந்த நறுமணம்!

மணியோசையும் புத்தனுடைய அடியார்களின் வழிபாட்டுக் குரலும் பள்ளியின் உள்ளேயிருந்து காற்றிலே மிதந்து வந்தன! அந்த ஓசை பொன்மணியின் உள்ளத்திலே புகுந்து எதிரொலி



செய்தது. துறவி ஒருவருடைய குரல் தலைமையாக எழுந்து ஒலித்தது: அதைக் கூர்ந்து கேட்டாள் பொன்மணி:

"மனிதனுடைய எண்ணங்களே வினைகளாக வடிவம் எடுக்கின்றன. சிந்தனைகளே அந்த வடிவத்தை உருவாக்குகின்றன. மனிதர்கள் தீய எண்ணங்களோடு பேசினாலும் அல்லது செயல் புரிந்தாலும், வண்டிச் சக்கரம் மாட்டைத் தொடர்ந்து செல்வது போல், துயரம் அவர்களைப் பின்தொடர்ந்து செல்கிறது!

மெய்யை மெய்யாகவும், பொய்யைப் பொய்யாகவும் காணுகிற மனத் தெளிவு உடையவர்களே மெய்ப்பொருளை அடைவார்கள். அவர்களே மெய்யான வேட்கை உடையவர்கள்!

கூரை நன்றாக வேயப்படாத வீட்டினுள் மழைத் தண்ணீர் பாய்வது போல, நன்னெறி பயிற்சியில்லாத மனத்தினுள் ஆசைகள் புகுந்து விடுகின்றன!

நீங்கள் புத்ததேவனையும், அவனுடைய தருமத்தையும், அவனுடைய அடியார்களின் சங்கத்தையும் சார்பாகக் கொண்டு உங்களுடைய மெய்யான உழைப்பினால் உங்கள் துன்பங்களையும் பிறர் துன்பங்களையும் அழிக்கக் கடவீர்கள். உலகத்தின் துன்பத்தை நீக்கக் கடவீர்களாக!"

இவ்வாறு எழுந்து ஒலித்தது அந்தத் துறவியின் குரல். அமைதியும் தவ வலிமையிலிருந்து தோன்றுகிற விந்தையாற்றலும் இணைந்து ஒலித்த அந்தக் குரலானது பொன்மணியின் உள்ளத்திலே புகுந்து என்னவோ செய்தது. அவள் திண்ணையிலிருந்து எழுந்தாள். அடி மேல் அடி வைத்துப் பள்ளியின் உள்ளே புகுந்தாள்.

புத்தப் பள்ளியின் பொய்கையிலே இறங்கி, குழப்பமும் துயரமும் மண்டி மூடியிருந்த முகத்தைக் குளிர்ந்த தண்ணீரிலே கழுவினாள் பொன்மணி. போர்வையினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு வழிபாட்டுக் கூடத்துக்குள்ளே புகுந்தாள் அவள். உள்ளத்தின் ஆழத்திலிருந்து அடியார்கள் அனைவரும், பல குரல் ஒரு குரலாக இணைந்து ஒலித்த அந்த வழிபாட்டிலே, பொன்மணி தனது உள்ளத்தையும் அதன் ஆன்ம ஒலியையும் இணைத்தாள். அவர்களோடு சேர்ந்து அவளும் ஓதினாள்:



அறவா போற்றி!
அருளா போற்றி!
துறவா போற்றி!
தூயா போற்றி!
புத்தன் அடிபோற்றி!
புனிதன் அடிபோற்றி!
அத்தன் அடிபோற்றி!
அமலன் அடிபோற்றி!

ஃ ஃ ஃ

"பெண்ணே! இந்த வகையான துயரங்கள் எல்லாம் மனித வாழ்விலே யாருக்கும் ஏற்படக்கூடிய இன்னல்கள் தாம் அம்மா! இவற்றினால் இப்படி மனம் நொந்து மனித குலத்தையே

வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு



வெறுத்து விடக் கூடாது!'' என்றார் ஆதிரையம்மையார்!

அந்தப் பௌத்தப் பள்ளியிலே இருந்த துறவிகளில் வயது முதிர்ந்த ஓர் அம்மையார் அவர்.

''தாயே! கணவனே கைவிட்டான். தகப்பனே சிறை புகுந்தான்! இதற்கு மேல் ஒரு பெண்ணுக்கு, வேறு என்ன துயரம் வேண்டும்? ஒன்று உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். அல்லது உங்களைப் போலத் துவர் உடையணிந்து இந்த உலக வாழ்வைத் துறந்து—''

''பொன்மணி, வாழ்க்கையில் ஏற்படுகிற ஏமாற்றங்களினாலும், துயரச் சீற்றங்களினாலும் மனம் பேதுற்றுத் துறவு மேற்கொள்வது என்பது தவறான செயல் அம்மா! அந்தகைய துறவு நீடித்து நிலைக்காது! உள்ளத்தில் மெய்யாகவே ஒரு நாட்டம் ஏற்பட்டு, பேருண்மையைக் காண வேண்டும் என்ற ஆவலினால் ஒருவன் அல்லது ஒருத்தி துறவு பூண்டால் அந்தகைய துறவு அவர்களுக்கும் நல்லது. துறவுக்கும் நல்லது! அதனால்தான் நான் சொல்லுகிறேன், உன் உள்ளத்தின் கடைரைத் தூண்டி நிறுத்தி ஒளியோடு உனது நிலையை எண்ணிப் பார் என்று!''

பொன்மணி மறுமொழி பேசவில்லை. பள்ளியின் விடுதியிலே நிலவி நின்ற மோனமும் இரவின் சாந்தமயமான அமைதியும் சேர்ந்து, கால வேகமே ஒரு விநாடி நின்று அவளுடைய மறுமொழிக்குக் காத்திருப்பது போலப் பொன்மணிக்குச் செவி சாய்த்தன!

''தாயே! உண்மையை ஒளிக்காமல் சொல்லுகிறேன்: துறவு மேற்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை தோன்றும் போதே, அதைத் தொடர்ந்து ஒரு மறுப்பும் என் உள்ளத்தில் வன்மையாக முனைந்து எழுகிறது அம்மா! வேறு எந்த முடிவுக்கும் நான் வருவதற்கு முன்பு இந்த நிலையற்ற வாழ்விலே நான் நிலையாகச் செய்து முடிக்க வேண்டிய ஒரு மாபெரும் கடமை எனக்கு இருக்கிறது. அதைச் செய்யத் தவறி விட்டால், கோசர் குலம் என்னை மன்னிக்காது. என் ஆன்மாவுமே அமைதி பெறாது. இந்தப் பிறவியில் அந்தக் கடமையைச் செய்யத் தவறி விட்டேன் என்றால், அதைச் செய்வதற்கு என்றே இன்னும் நூறு நூறு பிறவிகள் எடுத்து இந்த உலகிலே மீண்டும் மீண்டும் வந்து பிறந்து உழன்று கொண்டிருப்பேன் நான். நூறு நூறு பிறவி எடுக்கும் இந்த உயிர்! அத்தகைய துன்பச் சூழலைத் தடுத்து நிறுத்துவதற்காகவாகிலும் நான் என் கடமையைச் செய்து முடித்தாக வேண்டும்!'' இவ்வாறு சொல்லிக் கண் கலங்கினாள் பொன்மணி.

''பெண்ணே, உன்னுடைய உள்ளத் ஏக்கமும் உனது உயிர்த் துடிப்பையும் இத்தனை வேகத்தோடு அல்லல்படுத்துகிறதே. அந்தக் கடமை என்னவென்று எனக்குச் சொல்லம்மா! புத்த தேவனுடைய திருவருள் உனக்குக் கிடைக்கும்படி நானும் அவனுடைய கருணையை நாடி உனக்காக வழிபாடு செய்கிறேன் அம்மா! சற்று நேரத்துக்கு முன்பு, இத்தனை பெரிய திருக்கூட்டத்தில் உள்ளமும் உடம்பும் வெம்பிய நிலையிலே எங்கோ ஒரு மூலையில் ஒய்ந்து ஒடுங்கி நீ நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததுமே எனக்கு உன் மீது ஏதோ ஒரு நாட்டம் உண்டாயிற்று அம்மா! எங்கிருந்தோ புறப்பட்டு ஏதோ ஒரு குழம்பிய நிலையிலே இந்தத் துயரம் சூழ்ந்த மனித உலகுக்குள்ளே அடியெடுத்து வைத்து நடந்து விட்டாய் என்று உன் முகக் குறிப்பிலேயே உணர்ந்து கொண்டேன். உன்னை அழைத்து வந்து, உன்னோடு தனியாகப் பேசி, உனது நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து ஏற்பட்டுத்தான், இத்தனை முனைப்போடு உன்னை இந்த விடுதிக்கு அழைத்து வந்தேன் அம்மா! எத்தகைய தயக்கமும் இல்லாமல் நீ என்னிடம் பேசலாம். எத்தகைய அந்தரங்கச் செய்தியானாலும் இந்தத் துறவியிடம் நம்பிக்கை கொண்டு நீ சொல்லலாம். புத்த தேவனுடைய அருள் நிலவுகிற இந்தப் புனிதமான சூழலிலே உனக்கு ஒரு கேடும் நேராது. மனங் கலங்காமல் பேசம்மா நீ!''

இவ்வாறு ஆதிரையம்மை பொன்மணிக்கு நம்பிக்கையும் ஊக்கமும் தந்து அன்போடு அவளுடைய வரலாற்றைக் கேட்டாள். அதன் பேரில், பொன்மணி பேசத் தொடங்கினாள். ஆதிரை அடிகள் என்று அழைக்கப் பெற்ற அந்தத் துறவிக்கு நன்னர்களைப் பற்றிச் சொன்னாள் பொன்மணி. ஆதிநன்னன், நேரிழை என்ற கோசர் குலத்துப் பெண்ணழகிக்கு இழைத்த அநீதியைச் சொன்னாள். மாங்கனியினால் நேர்ந்த மாபெரும் துயரக் கதையை எடுத்துரைத்தாள். கோசர் குலமானது பெண் கொலை புரிந்த நன்னனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று முனைந்து நின்றதையும், ஆனால் அந்த வஞ்சினம் பயனற்றுப் போனதையும், நேரிழையின் தந்தை அறிவு தடுமாறி

அந்தக் தடுமாற்ற நிலையிலேயே மாண்டு மடிந்ததையும் கூறி, தனது தந்தையின் துயரத்தையும் தன் கணவன் தனக்கு இழைத்துவிட்ட மாபெரும் வஞ்சகத்தையும் ஆதிரைக்குக் கூறிக் கண்ணீர் வடித்தாள் பொன்மணி! பௌத்தப் பள்ளியின் சுற்றுச் சுவர்கள் எல்லாம் அந்தத் துயரத்திலே மோனமாக நின்றன!

ஆம்; அந்த மோனத்திலே ஒரு விநாடி தவங்கூடி நின்றார் ஆதிரையம்மை! உள்ளத்தை உள்முகமாக நிறுத்தி, ஒரு கணம் எண்ணங்கள் எல்லாம் ஆன்ம ஒருமைப்பாட்டிலேகுவிந்து கண்களை மூடினாள் ஆதிரை. பிறகு உள்ளொளியோடு பேசத் தொடங்கினாள் அந்த முதிர்ந்த துறவியம்மை:

"பொன்மணி! புத்த பெருமானுடைய கருணையை என்னென்று சொல்வது! எத்தகைய ஒரு பொற்காலத்தை நோக்கி இந்தப் பள்ளியின் துறவிகள் அனைவரும் பொறுமையோடு காத்திருக்கிறோமோ, அந்தப் பொற்காலத்தையே நீயும் எதிர்நோக்கி நிற்க வேண்டியவளாக இருக்கிறாய்! நாங்கள் அனைவரும் எந்த ஒரு நன்னாளை எதிர்பார்த்து நிற்கிறோமோ அதே நன்னாள் தான் உன்னுடைய பொன்னாளாகவும் இருக்கிறது அம்மா! அதை எண்ணிப் பார்க்கவே மெய்சிலிர்க்கிறது. புத்த பெருமான் உன்னை இந்தச் சூழ்நிலையிலே கொண்டு சேர்த்திருப்பதில் எத்தனை கருத்து இருக்கிறது என்பதை உள்ளத்துக்குள்ளேயே எண்ணி எண்ணி அந்தத் திருவருளிலே ஈடுபட்டு மெய் ஒடுங்கி நின்றேன் ஒரு விநாடி! எனக்கே அந்த வியப்பைத் தாங்க முடியவில்லை!" என்றார் துறவியார்!

பொன்மணிக்கு உடம்பெல்லாம் ஒரு சிலிர்ப்பு உண்டாயிற்று.

"தாயே! எத்தகைய தெய்விகமான சொற்களைச் சொல்லுகிறீர்கள் நீங்கள். என்னுடைய நோக்கமும், எனது கனவும், என்னுடைய கடமையும் இந்தப் புனிதமான தவப் பள்ளியிலே உள்ள துறவிகளுடைய எண்ணங்களோடு தொடர்புள்ளனவாக இருக்கின்றனவா? அப்படியா?"


"தொடர்பு என்று சொல்லாதே. நாம் அனைவருமே ஒரே எண்ணம், ஒரே நோக்கம், ஒரே குறிக்கோள் கொண்டு அந்த நன்னாளுக்குக் காத்திருக்கிறோம் என்று சொல். அதுவே உண்மை! நன்னர்களுடைய வீழ்ச்சியும், வெள்ளைத் தீவுக் கடம்பர்களின் அழிவும் என்று ஏற்படுகின்றனவோ அன்றுதான் இந்தப் பௌத்தப்பள்ளியின் மறு வாழ்வும், இந்தத் துறவிகளின் வழிபாடும் கைகூடுகிற நன்னாளாகும்! நான் சொல்வது உனக்கு வியப்பைத் தரலாம். ஆனாலும் நம்முடைய வரலாறு அப்படி ஓர் இணைப்போடு பூட்டிக் கொண்டிருக்கிறது. இந்தப் பள்ளியின் அடியார்கள் மட்டுமில்லை, இன்று தமிழகத்திலே எங்கெங்கோ சிதறிப் போய் வாழ்கிற பற்பல அடியார்களும் ஒரு காலத்தில் வெள்ளைத் தீவிலிருந்து வெளியேறியவர்கள். அதாவது வெள்ளைத் தீவிலிருந்து வெளியேற்றப் பட்டவர்கள். எங்களுடைய முதன்மையான தவச்சாலையும், ஒப்பற்ற சுவடிகளோடு வீற்றிருக்கும் பிரிவேனை என்ற கலைக் கழகங்களும், பள்ளிகளும், வெள்ளைத் தீவிலே வானமண்டலக் கடம்பனுடைய சீற்றத்துக்கு உள்ளாகிச் சீர்கேடு அடைந்த வரலாறு ஒரு துயரக் கதை! வெள்ளைத் தீவிலிருந்து மீகாமனுடைய மரக்கலத்திலே நூற்றுக்கணக்கான துறவிகள் ஒரு துன்ப நாளிலே வெளியேற நேர்ந்த துயர நிகழ்ச்சி இருக்கிறதே அது. நன்னர்களுடைய முடிவுக்கும் கடம்பர்களின் அழிவுக்கும் காரணமாக அமைந்த ஒரு பெரிய தீவினை. அந்தத் தீய வித்து நன்றாக முளைத்து வளர்ந்து கொண்டிருக்கிறது. பலன் தருகிற காலம் நெருங்குகிறது. நீ கவலைப்படாதே. பெருந்துருத்தி என்ற தீவிலே உள்ள எங்கள் பெரியவர் செவ்வந்தி அடிகளை நீ சந்திக்கும்போது, அதன் முக்கியமும் நுட்பமும் உனக்குப் புலனாகும். உள்ளத்தினால் நாம் செய்கிற தவத்தைப் போலவே அரசியல் வாழ்விலே செய்கைத் தவங்களைப் புரிகிற வேந்தர்களையும், புன்னாட்டு மன்னர்களையும், அவர்களோடு இணையப் போகிற சேரர்களின் தானைத் தலைவர்களையும் நீ சந்திக்க வேண்டிய நல்ல நாள் அதிகத் தொலைவில் இல்லை. நிம்மதியோடு நீ இந்த விடுதியிலே தங்கியிருந்து பொறுமையாகக் காத்திருப்பாயானால் கோசர் குலத்துக்கு நேர்ந்த பழி தீர்வதோடு வெள்ளைத் தீவுக்கும் புனிதமானதொரு நல்வாழ்வு பிறக்கும்."

ஆதிரையம்மை இவ்வாறு சொல்லிப் புத்தபெருமானை எண்ணி அவனுடைய தாமரைத் திருவடிகளைத் துதித்தாள்.

அறவன் அடிபோற்றி! அந்தன் அடிபோற்றி!
துறவன் அடிபோற்றி! தூயன் அடிபோற்றி!

என்று ஆதிரையம்மை ஒலித்தபோது பொன்மணியும் அந்தப் புனிதமயமான வழிபாட்டிலே உள்ளம் ஒன்றினாள்! பிறவியின் பயனைப் பெற்றுவிட்டது போன்ற ஒரு மன நிறைவிலேகூடினாள்.


பின்லே



மிகக் குளுமைக்கு
சிறந்த
G.E.C. எவரெஸ்ட்
ஜி. இ. ஸி. எவரெஸ்ட் - நீங்கள் வாங்கக்கூடிய அழகான ஸீலிங் ஃபான்
G.E.C.
உங்கள்
உத்திரவாதம்
GEC/G/133

விம்மியது. தன் ஆசிரியர் தன்னிடம் எத்தகைய நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதை எண்ணி அவனுக்கு ஒரு பூரிப்பு ஏற்பட்டது.

கொங்குவஞ்சி அரண்மனையிலிருந்து ஆதனார் புறப்பட்ட போது நிலவறையிலே இளவரசி கண் துயின்று கொண்டிருந்தாள். மருந்தின் விளைவாக அவள் கண் துயில்வதற்கும், இதற்கு முன்பு மயக்கத்திலே அவள் நினைவழிந்து கிடந்ததற்கும் உள்ள வேறுபாடு நாடியிலே தெரிந்தது. இளவரசியின் அங்கை விரல்களைப் பற்றிப் பக்குவமாக நாடி பார்த்த ஆதனார், முழு நிம்மதியோடு அழலாடிக்குச் சொன்னார்:

"தம்பி, இதுவரை உனக்குக் கற்பித்திராத ஒரு புதிய கல்வியை இப்போது உனக்குச் சொல்லித் தரப் போகிறேன். மனிதர்களின் கைகளிலே துடிக்கிற நாடியின் தன்மையிலிருந்து, உடம்புக்குள்ளே இயங்குகிற உறுப்புக்களின் தன்மையைக் கண்டு உணரக் கூடிய அரிய கல்வி இது. தமிழ்நாட்டு சித்தர்கள், இந்த உடம்புக்கு ஏற்படக் கூடிய நோய் நொடிகள் அனைத்தையும் ஒன்று விடாமல் ஆராய்ந்து தெளிந்து, இத்தனைக்கும் அடிப்படை மூன்று வகையான நாடித் துடிப்புக்களை என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்! எந்த உடம்பில் எத்தகைய நோய் வந்தாலும் அது இந்த மூன்று வகையான துடிப்புக்களிலே அடங்கும்! எல்லா நோயும் இந்த மூன்று வகைக்குள் வந்து விடும்! இந்த அடிப்படையான நாடித் துடிப்புக் கலை நம்முடைய முனிவர்கள் நமக்கு வழங்கியுள்ள அரிய பெரிய ஞானம்! அதன் நுட்பம் முழுவதையும் உனக்கு இந்நேரத்தில் விளக்கிவிட முடியாது. என்றாலும் இளவரசியின் உடல்நிலை எப்படித் திருந்துகிறது என்பதை அவ்வப்போது சரிபார்த்துக் கொள்ளக் கூடிய முறையில், இந்த நாடித் துடிப்பின் இரண்டொரு நுட்பங்களை மட்டும் உனக்கு விளக்கிக் காட்டுகிறேன்."

இப்படிச் சொல்லி விட்டு அழலாடியையும் இரண்டொரு வைத்தியர்களையும் தனியாக அழைத்துப் போய் ஒரு சிறு விளக்கவுரை நிகழ்த்தினார், ஆதனார். கையின் விரல்களைப் பிடிக்கும் தன்மை, நாடிகளுக்கு மேல் விரல்களை எப்படி அழுத்த வேண்டும், துடிப்பை எப்படித் தொட்டுணர வேண்டும், மூன்று வகையான துடிப்புக்களும் எப்படி இயங்குகின்றன என்பதையெல்லாம் அங்கிருந்த இரண்டொரு கைகளை



"இதென்ன! ராமுவின் நோட்டுப் புத்தகங்களின் பக்கங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கிறீர்கள்?"
"பாங்க் காஷியர் வேலை கிடைக்கும் போலிருக்கு. பழகிக்கிறேன்."

வைத்தே அழலாடிக்கு ஒரு பாடம் நடத்தினார் ஆதனார்.

"நான் சென்று வருகிறேன் அழலாடி! இளவரசியை நன்றாகப் பார்த்துக் கொள். அதோடு அடுத்த முறை நான் இங்கே வருவதற்குள் என்னுடைய மாணவனை ஒரு மாபெரும் யானை வீரனாகக் காண ஆசைப்படுகிறேன்!" என்று சொல்லி அழலாடியை வாழ்த்தி விட்டு அரண்மனையிலிருந்து புறப்பட்டார் ஆதனார்.

ஆசிரியருக்கு வணக்கம் செலுத்தி விட்டு நிலவறைக்குள்ளே வந்தான் அழலாடி. இளவரசி இன்னும் உறங்கிக் கொண்டுதான் இருந்தாள். நினைவிழந்த மயக்கம் இல்லை அது. உயிர்ப்போடு கூடிய உறக்கம்தான் அது. அந்த வித்தியாசத்தை உணர்ந்து பார்க்க எண்ணினான் அழலாடி. தான் புதிதாகக் கற்ற நாடித் துடிப்புக் கல்வியை உடனே சோதித்துப் பார்க்க முனைந்தான் அவன். இளவரசியின் கையை மெதுவாக எடுத்து, விரல்களைத் தனது இடக்கை விரல்களால் பற்றி வலக்கை விரல்களை நாடியிலே பதித்து அழுத்தினான். துடிப்பு நன்றாகத் தெரிந்தது. ஆனால் அதோடு சேர்ந்து இது என்ன புதிதாக இருக்கிறதே! ஏதோ ஒரு மின் ஆற்றல் தனது உடம்பிலே பாய்கிறதே! மயங்கிய உடம்பைத் தூக்கி வந்த போது இல்லாத ஒரு புதிய மின்னல், இப்போது மயக்கம் தெளிந்த அந்த உடம்பிலிருந்து வந்து பாய்கிறதே! அது என்ன? **(தொடரும்)**

கொத்தனார் தலைமையில் கல்லூரி விழா!

சரவணன்

ஒரு விழாவுக்குத் தலைமை வகிக்கவோ ஒரு புதிய நிறுவனம், கலைக்கூடம் அல்லது சங்கம் இவற்றைத் தொடங்கி வைக்கவோ சாதாரணமாய் அழைப்பது யாரை? ஒரு ஜனாதிபதியையோ, அமைச்சர்களையோ நீதிபதிகளையோ அல்லது வேறு ஏதாவது வகையிலே பிரபலமடைந்த பிரமுகர்களையோ அல்லவா?

இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்குப் பிரபலஸ்தர்கள்தான் தலைமை வகிக்கவோ — தொடங்கி வைக்கவோ அழைக்கப்பட வேண்டும் என்பது என்ன நியதி?

இதுவோ ஜனநாயக யுகம். எனவே, இம்மாதிரி நிகழ்ச்சிகளில் பங்குபற்றக் கூடிய வாய்ப்பும் கௌரவமும் சாதாரண மனிதர்களுக்கு ஏன் அளிக்கப்படக் கூடாது? உதாரணத்துக்கு: ஒரு கல்லூரிக்கு அடிக்கல் நாட்ட ஒரு கொத்தனாரை ஏன் அழைக்கக் கூடாது?

இம்மாதிரி வாய்ப்பும் கௌரவமும் சாதாரண மக்களுக்கு அளிக்கப்பட்டால், அவர்களுடைய தலைமையுரைகளும் தொடக்க உரைகளும் எப்படி அமைந்திருக்கும்? சற்று என்னுடன் வாருங்கள், அவற்றை அநுபவிக்க!

ஃ ஃ ஃ

வி. க. கோ. கல்லூரி ஆண்டு விழாவில் தலைமை வகிக்கும் கொத்தனார் கந்தசாமியின் உரை:

''மாணவங்களே! நீங்க எல்லோரும் சின்னப் புள்ளைங்க. உங்களுக்குத் தெரியாது. இதோ இந்தப் பெரியவங்களைக் கேட்டுப் பாருங்க, கொத்தனார் கந்தசாமி எப்படிப்பட்டவன் என்று! இந்தக் கட்டடத்தின் ஒவ்வொரு செங்கல்லும் என் கைபட்டதுதான். இந்த விழாவுக்குத் தலைமைதாங்களத் தலையோ பேர் இருக்க, என்னை அழைச்சதுக்காக நான் ரொம்ப சந்தோசப் படறேன். நீங்க போட்ட இந்த ரோஜா மாலையை இன்னும் ஏன் கழற்றவில்லை என்கிறீங்களா? அதோ அந்தப் போட்டோக்காரர் இன்னும் போட்டோ எடுத்தபாடில்லையே! அதனால்தான்!''



ஃ ஃ ஃ

ராணி பொய்யம்மை பெண்கள் உயர் நிலைப்பள்ளியின் புதிய பிரார்த்தனைக்கூடம், வேர்க்கடலைக்காரி வெம்புளியம்மாளால் திறந்து வைக்கப்பட்ட காலை, அவ்வம்மையார் கூறினர்:

''இங்கு கூடியிருக்கும் அம்மாமாருங்க எல்லாருக்கும் என்னை நல்லாத் தெரியும். இதே இடத்தில் சுமார் இருபது வருசமாய் வேர்க்கடலைக் கடை போட்டுக்கிட்டு வந்தவள் நான். என்கிட்டே கடலை வாங்கித் துன்னாத குழந்தைங்களோ வாத்தியாரம்மாரோ இல்லையா துங்க. இதோ நம்ம தலைமை ஆசிரியை அம்மா குந்திக்கிட்டு இருக்காங்களே! இவங்ககூட சின்னப் புள்ளையா இருந்தப்போ என்கிட்ட வேர்க்கடலை வாங்கிக் கொறிச்சவங்கதான் (கரகோஷம்) என்னம்மா, நான் சொல்வது நிசந்தானே? (மீண்டும் பலத்த கரகோஷம்!) இனிமேல் நான் வேறு இடம் பார்த்துக்கிட வேண்டியதுதான். போகட்டும்! எனக்கும் வயது ஆயிடுச்சு. நானும் ஓய்வு எடுத்துக்கிட வேண்டியதுதான். என் பேத்தியைத் தயார் செய்துட்டேன்!''



ஃ ஃ ஃ

தேனாற்றின் குறுக்கே கட்டப்பட்ட புதுப் பாலத்தைத் திறந்து வைத்துச் சலவைத் தொழிலாளி செல்வமுத்து உரை நிகழ்த்துகையில்: ''இந்தப் புதுப் பாலம் இந்த ஊருக்கு அவசியமா என்று எனக்குத் தெரியல்லேங்க. ஏன்னு, நாங்க, பாலம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், குறுக்கே இறங்கி நடந்தே போயிடுவது வழக்கம். இதுக்கு மூனு லட்சம் செலவாச்சுன்னு படிச்சாங்க. அவ்வளவு ஆகியிருக்குமான்னு நான் கேட்கல்லே. நீங்களும் கேட்காதீங்க. பாலம் நல்லா இருக்கு! அது சரி! இந்தப் பாலத்தை இன்னார் திறந்து வைச்சார்னு கல்லிலே செதுக்கக் காணுமே! தயவுசெய்து என் பெயரைச் செதுக்க ஏற்பாடு செய்யணும். இன்னொரு விசயம். என் பேர் பேப்பர்லே ரெண்டு வரி வரணுமுங்க! அதை எல்லாம் நீங்க கவனிச்சுக் கொள்வீங்க என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு.''



ஃ ஃ ஃ

அம்பிகாவிலாஸ் முன்னாள் சர்வர் சங்கரன், ஒரு புது ஹோட்டலைத் திறந்து வைத்துப் பேசுகிறார்:

''பெரியோர்களே! ஹோட்டல் தொழில் மிகவும் கஷ்டமானது என்பது என் கருத்து. ஏனெனில், அங்கு தொழில் புரியும் ஆட்கள் தின்றது போக மிச்சத்தில்தான் முதலாளி லாபம் காண வேண்டும். ஆரம்பத்தில் நான் ஒரு முதலாளியாக இருந்தவன்தான்.



இப்போது சர்வராய் இருக்கிறேன். முதலாளியாக இருந்தபோது கட்டி வராத என் குடும்பம், இப்போது நான் சர்வராய் மாறி வதும் ரொம்ப நன்றாய்க் கட்டி வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் புதிய ஹோட்டலின் முதலாளிக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். என் போன்ற நல்ல சர்வர்களைப் பார்த்து வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும். மாலை இன்னும் வரவில்லை. அதனால்தான் என்னுடைய உரை நீள்கிறது. காப்பியா? அட! சரி, கொண்டாங்க! மீடியமா? ஸ்ட்ராங்க? லேட்டா? ஒருத்தர் இருபது பைசா!''

ஃ ஃ ஃ

பேபி பாமினியின் நடன அரங்கேற்றத்துக்குத் தலைமை வகிக்கும் மேக் அப் மேன் மாணிக்கம்பிள்ளை :

''இங்கு கூடியிருக்கும் எல்லோருக்கும் என் வணக்கம். இப்போது அரங்கேற்றப் போகும் இந்தக் குழந்தையைப் பேபி என்று அழைத்தால், இதோ என் அருகில் உட்கார்ந்திருக்கும் என் பெண் முனியம்மாவை என்னென்று அழைப்பது? நான் பெருமைக்குச் சொல்லவில்லை. என் பெண் எப்படித்தான் ஆடுவாள் தெரியுமா? கொஞ்சம் இவளை ஆடச் சொல்லட்டுமா? ஏ, குழந்தை. பேபி பாமினி! நீ கொஞ்சம் இரு! என் பெண் சற்று ஆடட்டும்! ஏ, முனி! ஆடு. உம்! (கரகோஷம்) ஏன்? என் பெண் இன்னும் ஆட ஆரம்பிக்கவே இல்லை. இதற்குள் கைதட்டலா?''



ஃ ஃ ஃ

கோவிந்தா பாங்கின் உள்ளூர்க் கிளையைத் திறந்து வைத்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர் அப்பாசாமி தமது உரையில்...

''நீங்கள் அன்புடன் போட்ட மாலைக்கு என் புகழ் மாலை! ஒரு காலத்திலே இதே பாங்கில் பணம் போட்டவர்கள் எப்படிப் பயந்து பரபரப்புடன் பணத்தை வாங்கிக் கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் ஒருவன்தான் நிதானம் இழக்காமல் தைரியமாய் இருந்தவன். யாரையா அங்கு முணுமுணுப்பது? நான் இந்தப் பாங்கில் போட்ட பணம் ஐந்து ரூபாய் தான் என்று உமக்கு எப்படித் தெரியும்? ஓ! நீயா? களிமண் கங்காதரனா? டேய்! உன் குறும்புப் பேச்சு இன்னும் உன்னை விட்டபாடில்லையா? யாரடா அது என்னைப் 'பொடி மட்டை' என்று பரிகாசம் செய்வது? அடே! நான் பொடியை விட்டுப் பத்து வருஷங்கள் ஆகிறதடா! இந்த நல்ல சமயத்திலே திட்ட வேண்டாம் என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால்......''



ஃ ஃ ஃ

'துயரமே நட' என்ற படத்தின் நூறாவது நாள் வெற்றிவிழாவில் தலைமை தாங்கிப் பேசிய காய்கறி விற்கும் கறுப்பண்ணன் :

''இந்த விழாவுக்குத் தலைமை தாங்க என்னைப் போட்டவங்களை நான் நமஸ்கரித்துப் பாராட்டி ஆசீர்வதிக்கிறேன். என்று கேட்டீங்க! கத்திரிக்காய் விசை அரையணாவுக்கு விற்ற காலம் முதல்..... கறிவேப்பிலை கொத்துக் கொத்தாய் இனமாக் கொடுத்து வந்த காலம் முதல், இன்று வரை நான் ஒரு பயாஸ்கோப் படம் பார்த்தது இடையாதுங்க. இது சத்தியம்! ஒரு விசயத்தைப் பத்திப் பேசணும் என்றால், அதைப் பத்தித் துளியும் அறியாதவங்க பேசறதுதான் அளகு, முறை எல்லாம். அதனால் சினிமாவே பார்க்காத என்னைப் பிடிச்சு இந்த விழாவிலே தலைமை வகிக்க, 'ரெண்டு வார்த்தை நீ பேசணும்'னு சொன்ன நம்ம தியேட்டர் முதலாளி தாமோதரம் அவர்களை நான் மிகவும் நமஸ்காரம் செய்து ஆசீர்வதிக்கிறேன். இல்லே. ஆசீர்வதித்து நமஸ்கரிக்கிறேன். சே! பாராட்டுகிறேன்! அது மட்டுமல்ல. நம்ம வீட்டிலே நமக்கு நேர் எதிர்! அவ பார்க்காத படம் இனிமேல் வந்தாதான் உண்டு! இந்தக் கூட்டத்திலும் அவள் வந்திருக்கா. இருக்கட்டுமே! பயமா? வீட்டிலேதான் அவளுக்குப் பயந்து பயந்து சாவணும். இங்கு கூடவா?'' (கரகோஷம்)



ஃ ஃ ஃ

புரோகிதர் தலைமை வகிக்கும் புதுமனை புகுவிழாவிலே :

''மனுஷ்யாளாய்ப் பிறந்த ஒவ்வொருத்தருக்கும் ஆறடி நிலம் எப்படி நிச்சயமோ, அப்படி இந்த நூதன கிருகத்தில் சகல க்ஷேமங்களும் உண்டாகப் போவது சர்வ நிச்சயம்! நீங்கள் வேணுமானால்



பாருங்கள். இந்த வீட்டில் எத்தனை கல்யாணங்கள், எத்தனை கருமா.... சே! சே! வாய்தவறி வந்துவிட்டது, சுவாமி! காரணம் வேறொன்றுமில்லே. இப்போது நேராய் அங்கிருந்துதான் வருகிறேன். அதனால்தான்.''

ஃ ஃ ஃ

கோகுலகான சபாவில் இசை விழாவைத் தொடங்கி வைத்துப் பேசும் ஏட்டு ஏகாம்பரம் அவர்கள் :

''ஏட்டு ஏகாம்பரம் என்றால் மட்டமாய் எண்ணிய ஒரு காலம் உண்டு. 'இவனுக்கு என்ன தெரியும்? கேடி குமாரசாமி, ரௌடி ரங்கப்பன், ஜேப்படி ஜகந்நாதன், நியூசென்ஸ் நடராஜன், பிக்பாக்கெட் பார்த்தசாரதி, இவர்களை புக் பண்ணத்தான் தெரியும்'



என்று எண்ணிக்கிட்டு இருந்தாங்க. இவனுக்குச் சங்கீதமும் வரும் என்பது ஒரு சிலருக்குத்தான் தெரியும். பொய் இல்லீங்க. என் சம்சாரம் சம்பகம் இருக்கா இல்லே! அவ என்னைக் கண்ணாலம் கட்டிக்கிட்டதற்குக் காரணமே என் பாட்டிலே மயங்கித்தான். நீங்க வேணும்னு கேட்டுப் பாருங்க! அதோ உட்கார்ந்துகிட்டு இருக்கா பாரு குஷியா (கரகோஷம்). குஷி ஏன் தெரியுங்களா? தன் புருசன் கழுத்திலே, கல்யாணத்துக்குப் பிறகு இப்பத்தான் மாலையைப் பார்க்கிறா! (மீண்டும் கரகோஷம்) ஆமாம்! சரி! விசயத்துக்கு வர்றேன். போலீசு நாய் எங்கெங்கோ வலிச்சுக்கிட்டுப் போகிறப்பலே நான் எங்கெங்கோ போறேன்னு நினைக்காதீங்க! அந்த நாளில் பாரதக் கூத்திலே நான் துரியோதனன் வேசம் கட்டிக்கிட்டு ஆடுவேன், ஆடுவேன். அப்படி ஆடுவேன்! கம்மா, பாட்டை எடுத்து உட்டேன்னு, அப்படியே அலண்டு விடுவாங்க. ஆகையினால் இந்த ஏகாம்பரம் வெறும் ஏட்டு ஏகாம்பரம் மட்டுமல்ல, பாட்டு ஏகாம்பரமுங்கூட. (கரகோஷம்) இல்லாட்டி இந்த விழாவுக்கு என்னைக் கூப்பிட்டிருப்பாங்களா?''

ஃ ஃ ஃ

தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் சலூன் தொழிலாளியின் சொற்பொழிவு :

''நான் தேர்தல் கூட்டங்களிலே தலைமை வகிக்கிறதிலே ஒரு அர்த்தமிருக்கு. ஏராளமா பணத்தைச் செலவழிச்சுத் தோற்றுப் போனப்புறம் மொட்டை அடிச்சுக்கணும்னுட்டுத்தானே வரணும், போட்டி போடறவங்க! இந்தக் காலத்திலே தேர்தலிலே நிற்கிறவங்க அதைச் செய்யறேன், இதைச் செய்யறேன் என்று கம்மா டுப் அடிப்பாங்க. ஜெயிச்ச பிறகு பேட்டைப் பக்கம் திரும்பியே பார்க்க மாட்டாங்க.



பணங்கூடத் தருவதாய் ஆசை காட்டுவாங்க. நமக்கு நேர்மையும் ஒழுக்கமும்தான் முக்கியம். பணம் கொடுத்தால் வேண்டாம்னு சொல்லாதீங்க. என்ன காலம் கஷ்டம் பாருங்க! பாவம்! நம்முடைய வறுமை தெரிஞ்சுதானே பணம் கொடுக்க முன் வராங்க. எல்லாக் கட்சிக்காரனுங்களும் பணம் கொடுத்தால் ரொம்ப நல்லது. நம் வறுமை நீங்கும் அல்லவா, கொஞ்ச காலத்துக்கு. ஆமாம், சோடா எங்கே ஐயா?''

தலையிடாக் கொள்கை!



ஒரு தேசத்து ஜனாதிபதியும் மற்றொரு தேசத்துப் பிரதம மந்திரியும் ஒரு விருந்தில் சந்தித்து அளவளாவினார்கள்.

''உங்கள் நாட்டுப் பிரஜையின் சராசரி வருமானம் எவ்வளவு? செலவு எவ்வளவு?'' என்று ஒருவர் கேட்டார்.

''மாத வருமானம் இருநூறு ரூபாய். செலவு நூற்று எழுபத்தைந்து ரூபாய்'' என்றார் மற்றவர்.

''மிஞ்சும் தொகையை என்ன செய்கிறார்கள்?''

''எங்கள் நாடு சுதந்திரமான நாடு. அவர்கள் என்ன செய்தாலும் அரசாங்கம் கவலைப்படுவதில்லை. அது சரி, உங்கள் நாட்டுப் பிரஜையின் சராசரி வருமானம் என்ன? செலவு என்ன?''

''மாதம் 250 ரூபாய் வருமானம்; 350 ரூபாய் செலவு.''

''துண்டு விழும் தொகைக்கு என்ன செய்கிறார்கள்?''

''எங்கள் நாடும் சுதந்திர நாடுதான். அவர்கள் என்ன செய்தாலும் அரசாங்கம் கவலைப்படுவதில்லை!'' - அ. கி. மூர்த்தி



சிவனருட் செல்வர்

திருமுருக கிருபானந்த வாரியார்

45. நஞ்சு இறங்கியது!

அப்பர் பெருமானுடன் சேர்ந்தும், பின்னர் தனியாகவும் பல தலங்களில் வழிபட்டு, மொழிகொண்டு துதிசெய்தார் ஆளுடைப் பிள்ளை.

காவிரி பாயும் மழநாட்டில் விளங்கும் திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லி மழவன் என்ற அன்பன் ஒருவன் வாழ்ந்தான். அவனுடைய செல்வப் புதல்வி அழகிய திருமேனியும் இனிய சொற்களும் உடையவள். கொடிய நோயாகிய முயலகன் என்ற பெரும் பிணியினால் அவள் பெரிதும் துன்புற்றாள். எதனாலும் தீராத அந்நோய் அவளைப் பெரிதும் வாட்டியது. மணி மந்திர மருந்துகளால் அந்நோய் தீராததைக் கண்ட கொல்லி மழவன், மான் ஏந்திய பெருமானை வழி வழியே வணங்கும் மரபில் வந்தவன். ஆதலினால், மகளைக் கொண்டு போய்த் திருக்கோயிலிலேயே புரமெரித்த அரனார் முன் கிடத்தி வைத்தான்.

அந்தச் சமயத்தில் திருஞான சம்பந்தர் அங்கு எழுந்தருளினார். "பாலறு வாயர் வந்தார்", "முத்தமிழ் முதல்வர் வந்தார்", "கவுணியர் பெருமானார் வந்தார்" என்று முழங்கும் திருக்காளத்தின் ஒலியைக் கேட்டு, புதல்வியைப் பற்றிய கவலையை மறந்து நகரை அலங்கரித்தான் மழவன். திரு விளக்கும் பூரண கும்பமும் வைத்தான். ஏனைய சிறப்புக்கள் பலவும் செய்து, சம்பந்தர் திருமுன் வந்தான். ஆனந்தக் கண்ணீர் பொழிந்தான். முத்துச் சிவிகை முன் மண்ணில் வீழ்ந்து தொழுதான். ஞான போனகர் கருணை பூத்து, "எழுக" என்று அருள் புரிந்தார். திருக்கோயிலுக்கு அருகில் சென்று சிவிகையினின்றும் இறங்கி ஆலயத்துட் சென்றார். அங்கே உணர்வின்றிக் கிடக்கும் பெண் மகளைக் கண்டார். "இது என்ன?" என்று வினவியருளினார்.

கொல்லி மழவன் விஷயத்தைக் கூறினான். உடனே திருஞான சம்பந்தர் அளவிறந்த கருணையுடன் எம்பெருமானைத் தொழுதார். "மணிவளர் கண்டரே! மங்கையை வாடச் செய்வதோ மாண்பு?" என்று பிணி தீரும் பதிகம் பாடியருளினார்.

> துணிவளர்திங்க ளொங்கிவிளங்கச்
> சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
> பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
> வாரிடமும் பலிதேர்வர்
> அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
> லாச்சிரா மத்துறைகின்ற
> மணிவளர்கண்டரோ மங்கையை வாட
> மயல்செய்வதோ விவர்மாண்பே.

சம்பந்தப் பெருமான் பிணி தீரும் பதிகம் பாடியவுடனே கொல்லி மழ

வன் பெற்ற குலமகள் நோய் தீர்ந்தது. அவள் எழுந்து பொற்கொடி எனத் தந்தை யருகே வந்தாள். கொல்லி மழவன் மகளுடன் சம்பந்தப் பெருமான் பெருங் கருணைத் தாள்மீது வீழ்ந்தான். பிள்ளையார் வள்ளலார் பதம் பணிந்தார். அடியவர்கள் ஆர்த்தார்கள்.

ஆளுடைய பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டு வேறு பல தலங்களை வழிபட்டுக் கொண்டு கொங்கு நாட்டை அடைந்தார். மேல் திசையில் உள்ள திருத்தலங்களை வணங்கிக் கொண்டு திருநணா (பவானி) சென்றார். அங்கு ஆலமுண்ட நீலகண்டப் பெருமானை வணங்கி மீண்டும் திருச்செங்கோட்டை யடைந்தார். அப்பொழுது மழை பொழியும் பருவம் மாறிப் பனிக் காலம் எய்தியது. எங்கும் பனி பொழிந்தது. குன்றுகள் வெள்ளைப் போர்வை போர்த்தது போலவும், முத்துக்களைப் பச்சைக் கொடியில் கோத்ததுபோலவும் அருகம் புற்களில் பனித் துளி, கோவைப்பட்டுக் காட்சி யளித்தது. இரும்புச் சட்டியில் நெருப்பை யிட்டு மக்கள் குளிர் காய்ந்த வண்ணமிருந்தனர். அகிற்புகையை எங்கும் பரப்பினார்கள். இவ்வாறாக மக்கள் குளிரினால் பெரிதும் வருந்தினார்கள்.

திருஞான சம்பந்தருடன் வந்த பரிசனங்கள் பல நாட்கள் அங்கு தங்கிய படியால் கொடிய குளிர்க் காய்ச்சல் வந்து துன்புற்றார்கள். இதனைச் சம்பந்தப் பெருமானிடம் அறிவித்தனர். ''இது இந்நிலத்துக்கு இயல்பு எனினும் நமக்கு இத்தக் கொடுமை எய்தலாமோ?'' என்று சம்பந்தர் இறைவர் மீது திருப்பதிகம் பாடியருளினார்.

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.

திருப்பதிகம் பாடியவுடனேயே அந்நகர மாந்தரே யன்றி, அந்நாட்டு மக்கள் அனைவரும் தீய குளிர்க் காய்ச்சல் நீங்கிச் சுகம் பெற்றனர்.

உலகம் உய்ய வந்த அலகில் புகழுடைய பிள்ளையார் அங்கிருந்து புறப்



பட்டுக் காவிரிக்குத் தென்பால் உள்ள பதிகளைத் தரிசித்தார். அங்கிருந்து, அராப்பணி பூண்ட சிராப்பள்ளி நாதரை வணங்கி, திருவானைக்கா மேவிய செழுநீர்த் திரளைத் தொழுதார். திருவலஞ்சுழி வாழும் அடியார்கள் அவரை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று வணங்கினார்கள். சில நாட்கள் அங்கு தங்கி வலஞ்சுழி நாதரை வழிபட்டார்.

என்ன புண்ணியஞ் செய்தனை
    நெஞ்சமே இருங்கடல் வையத்து,
முன்னம் நீபுரி நல்வினைப்
    பயனிடை முழுமணித் தரளங்கள்,
மன்னு காவிரி சூழ்திரு
    வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
    பாடியும் வழிபடும் அதனாலே.

கோடை பிறந்தது. திருப்பட்டீச்சுரத்தை நோக்கிச் சென்றார் சம்பந்தர் பெருமான்.

எங்கும் மிகுந்த வெப்பம். வெயில் அனற் குழம்பாக வெதும்பியது. அவ் வெப்பத்தைத் தணிப்பதற்காகச் சிவ பூதம் ஒன்று முத்தமிழ் விரகராம் ஞான சம்பந்தர் முடிமீது முத்துப் பந்தர் பிடித்தது. பிறர் தம்மைக் காணாத வண்ணம் நின்ற அந்தச் சிவபூதம், ''முத்துப் பந்தர் பிடிக்குமாறு பட்டீசப் பெருமான் எம்மை ஏவியருளினார்'' என்று கூறியது. அதனைக் கேட்டருளிய ஞானசம்பந்தர், ''எம்பிரான் திருவருள் இதுவோ?'' என்று உடல் புளகமுற்றார். புத்தேளிர் பொழியும் பூம்பந்தர் போன்று பொலியும் அப் பந்தரின் அழகிய காம்புகளை அடியார்கள் தாங்கினார்கள். அம்பலத்தில் ஆடுகின்ற அடிமலரின் நிழலில் அமர்ந்திருப்பவரைப் போல ஆளுடைய பிள்ளையார் அமர்ந்தருளினார். தொண்டர்களும் அண்டர்களும் எண்டிசையும் கேட்க ஆரவாரம் செய்தார்கள். வள்ளலார் வருவதைக் கேட்டறிந்த திருப்பட்டீச்சரத்தில் உள்ள அன்பர்கள் அவரை எதிர் கொண்டு ஏத்தினார்கள். திருஞான சம்பந்தர் திருக்கோயிலுட் சென்று ஆராக் காதலுடன் அரனாரைப் பணிந்து, அருந்தமிழ் மாலை புனைந்தார்.

திருவாவடுதுறையில் திருத் தொண்டர்களுடன் சம்பந்தமூர்த்தி தங்கியிருந்தபோது அவருடைய தந்தையார் சிவபாத இருதயர், தாம் நியதியாக வேள்வி புரியும் காலம் வந்ததனால் சீகாழி செல்ல விரும்பினார். ஞான போனகர், ''முடிவில்லாத பொருளாகவுள்ள ஆவடுதுறை மேவிய எந்தையார் திருவடிகளன்றோ?'' என்று கூறி எழுந்தருளினார். நேரே திருக்கோயிலுக்குச் சென்று,

''இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக்
கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை யரனே''


என்று பாடினார். பாடியவுடனேயே ஒரு சிவபூதம் ஆயிரம் பசும் பொன் அடங்கிய முடிப்பைப் பலி பீடத்தில் வைத்து, 'இந்த உலவாக்கிழி உமக்கு அமலனார் அருளியது'' என்று கூறியது. ஞானசம்பந்தர் நிலமிசை நெடிது வீழ்ந்து வணங்கினார். அக்கிழியை எடுத்துத் தலைமிசை வைத்து, துணிந்த பொருளைத் தணிந்த சிந்தையுடைத் தந்தையாருக்கு உரைத்தருளினார்

''ஆதிமாமறை விதியினால் ஆறுசூழ் வேணி
நாதருரை முன்னுகவே புரிபுநல் வேள்வி
தீது நீங்க நீர் செய்யவும் இருக்கவு மலர்ந்து
வேத வேதியர் அனைவரும் செய்யவும் மிகுமால்''

''ஐய! உலகத்தின் இடர் நீங்கச் சிவ பெருமானையே முதல்வராகக் கொண்டு சிவ வேள்வி புரிவீர். சீகாழியில் உள்ள ஏனைய அந்தணர்கள் அனைவரும் அவ் வண்ணமே செய்க. இக் கிழி எடுக்க எடுக்க உலவாது மிகுதியடையும்'' என்று திருவாய் மலர்ந்து தந்தருளினார். தந்தையார் சீகாழி சென்றார்.


மேலும் பல பதிகளை வணங்கிப் பாமாலை புனைந்த புண்ணியர் காரைக்காலுக்கு அருகில் உள்ள தருமபுரம் என்ற திருத்தலத்தை அடைந்தார். அது திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய தாயார் பிறந்த ஊர். பாணருடைய சுற்றத்தார்கள் ஞானசம்பந்தரை எதிர் கொண்டு அவரது திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கி வாழ்த்தினார்கள். அச்சுற்றத்தாரை நோக்கிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் ''உமையம்மையார் தந்த சிவஞானப் பாலுண்ட பிள்ளையார் அருளிச் செய்கின்ற திருப்பதிகங்களை யாழில் பயிற்றி வாசிக்கும் பெரும் பேற்றினை அடியேன் பெற்றுள்ளேன்'' என்று கூறினார். அதனைக் கேட்ட அவர்கள், ''திருப்பதிகத்திற் கிளர்ந்த ஓசையானது அளவு பெறும்படி யாழில் வைத்து வாசிப்பதானால், பதிகத்தின் இசை உலகமெல்லாம் வளர்கின்றது'' என்று கூறினார்கள்.

ஆளுடைப் பிள்ளைகளை விடத் தம்மையே தமது தாய் ஊர் மக்கள் புகழ்வது கேட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணரின் உள்ளம் நடுங்கிற்று. சிவ



Bensons 738A, Tam.

அழகோடு இழையும் அழகு... கனிவான மெலிவழகு, கம்பீரம்... கட்டழகு வடிவம் —ராலி:பேன். எக் கோணத்திலிருந்து பார்த்தாலும் எழில் கவினக் கோலம். லாகவமாக இயங்கி உங்கள் அறை முழுதும் குளுமை பரப்புவது. காற்றுப் போல் இலேசாக... திசைதிருப்ப வசதியாக... தனி ரகக் கைப்பிடி அமைந்த... கச்சிதமான நாகரீகப் பாங்குடன் உருப்பெற்றது ராலி:பேன். நீலம், பச்சை, தந்தநிறம், பழுப்புச் சாம்பல் ஆகிய கண்குளிரும் நாலுவித வண்ணங்களில் வருகிறது உங்களை நாடி.



குளுமையான தென்றல் தவழவே

ராலி:பேன்

ராலி குரூப்பின் தயாரிப்பு

ராலி:பேன் வரிசையில் அடங்குபவை உத்தர, மேஜை, சுவர்ப் பதிவான, மற்றும் எக்ஸாஸ்ட் மின் விசிறிகள்.

ராலி:பேன் பற்றிய முழுவர்ணப் பிரசுரத்தினை இலவசமாகப் பெற, இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பவும்: ராலீஸ் இந்தியா லிமிட்டட், 21, ரேவலின் ஸ்ட்ரீட், பம்பாய் 1.

பெயர் ____________________

விலாசம் ____________________

____

மறவாதீர்கள், ஒவ்வொரு ராலி:பேனும் உற்பத்திப் பழுதின்மைக்கு 2 வருட உத்தரவாதமுடன் வருகின்றது.

ஆந்திரப் பிரதேசத்துக்கு டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

பேல்டி என்டர்பிரைஸஸ், 141, துர்கா பவன், ராஷ்டிரபதி ரோடு, செகந்திராபாத்

ஞானப் பிள்ளையார் திருவடியை வணங்கினார். "எந்தையே! அளவினுள் உட்படாத திருப்பதிக இசை கருவியில் அடங்காத வகையினை இவர்களும் உலக மாந்தரும் அறிந்துகொண்டு உய்யும்படி பலரும் புகழும் பதிகம் ஒன்று பாடியருள வேண்டும். அதுபோல் அது யாழில் அடங்காததைக் காட்ட வேண்டும்" என்று விண்ணப்பம் செய்து கொண்டார். ஞானசம்பந்தர் இறைவரைத் தொழுது, திருப்பதிக இசை, நாதம் முதலியவைகளுக்கு அடங்காத தன்மையைக் காட்டும் பொருட்டு, அரும் பதிகத்தைப் பாடியருளினார்.

"மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்
நடை யுடை மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடை நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவராழ்கடல் வெண்டிரை
இரைந்நுரை கரைபொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் குமலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே"

திருநீலகண்ட யாழ்ப்பாணர் முன்பு போல் யாழினைக் கரத்தில் தாங்கி வாசிக்கத் தொடங்கினார். அதன் ஓசை நரம்பில் அடங்கவில்லை. அச்சமும் அன்பும் கொண்ட பாணனார், சம்பந்தரது சரணத்தில் வீழ்ந்து வணங்கினார். "இப் பெரியோர் அருளிச் செய்த திருப்பதிகத்தின் இசையை யாழில் இயற்றுவேன் என்று கூறியது, இக் கருவியைத் தொடுவதனால் தானே?" என்று தெளிந்த அவர், யாழினை எடுத்து முறிக்கத் தொடங்கினார்.

"ஐயரே! இந்த யாழைக் கொடும்" என்று வாங்கிக் கொண்டார் சம்பந்தர். "ஐயரே! நீர் யாழை முறிக்கும் செயல் யாது? அரனார் திருவருளின் பெருமை யெல்லாம் இந்தக் கருவியின் அளவில் அடங்கிவிடுமோ? ஒரு போதும் அடங்காது. நமது இயல்புக்குத் தக்கவாறு உலகத்தில் உள்ளோர் அறியும்படி இக்கருவியில் அமைய வாசித்தலே வழக்காகும். சிந்தையிலும் அடங்காத இசையின் பெருமை செயலுள் அடங்குமோ? ஆதலால், இந்த யாழினைக் கொண்டு திருப்பதிகங்களை இதனுள் பொருந்திய அளவில் வாசிப்பீர்" என்று யாழைப் பாணனார் கையில் தந்தருளினார். செந்தமிழ் விரகர் தந்தருளிய யாழைத் தொழுது பெற்றுக் கொண்ட பாணனார் அதனைத் தலைமேல் வைத்து ஏற்றுக் கொண்டார். மக்களும் உண்மையை உணர்ந்தனர்.

திருஞான சம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டுத் திருநள்ளாறு சென்றார். அங்கே, "போகமார்த்த பூண்முலை" யென்ற திருப்பதிகம் பாடியருளினார். அப்பதிகத்தை யாழில் வாசிக்குமாறு திருஞானசம்பந்தர் கட்டளை யிட்டார். அதன்படி திருநீலகண்ட யாழ்ப் பாணர் யாழ் மீட்டி இனிது வாசித்து உலகை மகிழ்வித்தார். பின்னர் திருஞானசம்பந்தர் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு அருகில் உள்ள தலங்களைச் சேவித்துக் கொண்டு திருச்சாத்தமங்கைக்கு வந்தார். அப்பதியில் வாழும் திருநீலநக்க நாயனார் சம்பந்தர் வருவதை யறிந்தார். எங்கும் வாழை கமுகுகள் நாட்டினார். தோரணங்கள் கட்டினார். பூமாலைகள் தொங்க விட்டார். நிறைகுடம் வைத்து, தூபதீபம் அமைத்துச் சம்பந்தரை எதிர் கொண்டார். சம்பந்தரை வணங்கி அயவந்தி என்ற திருக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். உலகம் உய்ய வந்த சம்பந்தப் பெருமான், சிவபெருமானை வணங்கித் தமிழ் மாலை புனைந்தார். திருநீலநக்க நாயனார் வேண்டுகோளுக்கு இணங்கி அவருடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார். அவர் அமைத்த அரிய திருவமுதை யுண்டு, அந்த இரவு பாணருக்கும் தங்க இடம் தரச் செய்து தங்கினார். திருப்பதிகத்தில் திருநீலநக்கருடைய அன்பின் திறத்தைப் பாராட்டி யருளினார்.

"மறையினார் மல்குகாழித் தமிழ்ஞான
சம்பந்தன் மன்னும்
நிறையினார் நீலநக்கன் நெடுமாநக
ரென்று தொண்டர்
அறையுமூர் சாத்த மங்கை
அயவந்தி மேலமைந்த பத்தும்
முறைமையா லேத்தவல்லார் இமை
யோரிலும் முந்துவரே."

ரூ. 0.00க்கு ரசீது!



அவர் வீட்டுக்கு மின்சார பில் வந்தது. அது அவர் வெளியூர் சென்றிருந்த மாதத்துக்கான பில். கட்டணம் 0.00 ரூபாய் என்றிருந்ததைக் கண்டு மகிழ்ச்சியுடன் அதைக் குப்பைக் கூடையில் எறிந்தார். ஒரு வாரம் கழித்து பணத்தை உடனே கட்டிவிடும்படியும் கட்டணம் ரூ. 0.00 என்றும் ஒரு நோட்டீஸ் வந்தது மின்சார இலாகாவிலிருந்து! அதையும் அவர் கூடையில் எறிந்தார். மறுவாரம் கடைசி நோட்டீஸ் என்று ஒன்று வந்தது. உடனே பணம் கட்டாவிடில் மின்சார விநியோகம் நிறுத்தப்படும் என்றும் கட்ட வேண்டிய தொகை ரூ. 0.00 என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மூளையைக் குழப்பிக்கொண்டவர் ஏதோ முடிவுடன் ரூ. 0.00க்கு ஒரு செக் அனுப்பினார். அதற்கு ரசீதும் வந்தது!

இவ்வளவுக்கும் காரணம் அந்த பில் தயார் செய்தது ஒரு கம்ப்யூட்டர் இயந்திரம் என்பதே!

- வி. ஸ்ரீதரன்

திருச்செங்காட்டங்குடியில் வாழ்ந்த சிறுத்தொண்ட நாயனாரின் வேண்டுகோளுக்கிணங்கி, அங்கு சென்றார் ஆளுடை பிள்ளைகள். சிறுத்தொண்ட நாயனாரது திருத் தொண்டினைத் திருப் பதிகத்துள் சிறப்பித்துப் பாடினார்.

"பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டம் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெண்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே"

திருமருகலில் சம்பந்தர் எழுந்தருளி யிருந்தபோது வணிகன் ஒருவன் ஒரு கன்னிகையை அழைத்துக் கொண்டு வந்தான். அவன் அங்கு வந்தபோது பொழுது சாய்ந்து விட்டதால் திருக் கோயிலின் புறத்தே ஒரு மடத்தில் படுத்துத் தூங்கினான். அவ்வாறு அவன் தூங்கிக் கொண்டிருந்தபோது கொடிய அரவம் அவனைத் தீண்டியது. விஷம் தலைக்கேறிய வணிகன் இறந்தான். வணிகன் மாண்டதைக் கண்ட கன்னி அளவிலாத் துயரம் கொண்டாள். அக் கன்னி மணமாகாதவளாதலினால் அர வம் தீண்டி மாண்ட வணிகனைத் தீண்டாமல் நின்றாள். அவளுக்கு ஆறு தல் கூற யாரும் இல்லாததால், தளர்ந்து தனித்துப் புலம்பினாள். அவள் அழுகுரலைக் கேட்டு அங்கிருந்த இடியும் கருடனும் போன்ற மந்திர வாதிகள் பலர் வந்து தத்தம் மந்திர சக்தியைக் கொண்டு விஷத்தை இறக்க முயன்றனர். அவர்கள் முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை.

விடியற்காலை வந்தது. கன்னி புலம்பி அழுதாள். திருக்கோயில் வாயிலில் நின்று, எம்பிரான் எழுந் தருளியுள்ள திசை நோக்கிக் கை கூப்பித் தொழுது துதித்தாள்.

"அடியாராம் இமையவர்தம் கூட்டம் உய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே! செங்கண்
நெடியானும் நான்முகனும் காணக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச் சோலை மருங்கு சூழும்
கவின்மருகற் பெருமானே! காவாய்" என்றும்

திருஞான சம்பந்தர் இறைவழிபாட் டின் பொருட்டு வந்து கொண்டிருந் தார். வணிகப் பெண்ணின் அழுகுரல் அவரது செவியில் விழுந்தது. திருவுள் ளத்தில் கருணை மிகவும் கொண்ட அவர், அடியவர்கள் சூழ, அக் கன்னிகையின் அருகில் சென்றருளி னார். சிந்தை நொந்து வருந்திச் சிவ னருளை நாடி நின்ற அவளை நோக்கி, "அம்மா! நீ அஞ்ச வேண்டாம். உன் துன்பத்தை உரைப்பாய்" என்று கேட் டருளினார்.

வணிகப் பெண் கரமலர்களைச் சிர மீது கூப்பினாள். கண்களினின்றும் அருவி போல் நீர் பொழிந்தது. சம் பந்தப் பெருமான் சரணங்களில் வீழ்ந் தாள். "பெருமானே! வளமை யுடைய வைப்பூர் என்ற ஊரின் தலைவனான தாமன் என்பவர் எனக் குத் தந்தை. இவர் எனது தந்தையின் மருகர். எனது பிதாவுக்கு ஏழு பெண்கள். என் தந்தை ஒவ்வொரு பெண்ணையும் இவருக்குத் தருவதாக வாக்களித்தார். அதனை இவர் நம்பி னார். தம் வாக்கினால் இவரை நம்ப வைத்தபின், இவரிடமிருந்து நிரம்பப் பொன்னைப் பெற்றுக் கொண்டார். ஆயின், இவருக்கு வாக்களித்தபடி பெண் தராமல் அயலார்க்கே அளித் தார். என்னைத் தவிர ஆறு பெண்களை யும் இவ்வாறே இவரை ஏமாற்றிப் பிறருக்கே மணம் செய்து கொடுத் தார். அதனால் மனம் வருந்தி நின்ற இவரிடம் இரக்கமும் அன்பும் பூண்டு, தாய் தந்தையரை விடுத்து, அவர்கள் அறியாவண்ணம் இவரைச் சார்பாகக் கொண்டு புறப்பட்டு வந்தேன். எம் பிரானே! இவருடன் இன்று இம்மடத் தில் தங்கினேன்; பாம்பு தீண்டி இவர் மாண்டு விட்டார். அதனால் நடுக் கடலில் கப்பல் கவிழப் பெற்றாற்போல் கலங்கி நிற்கிறேன். எனது சுற்றத்தார் போல வந்து என் துயரமெல்லாந் தீர அருள் செய்தீர்கள்" என்று கூறினாள்.

கற்றவர்கள் தொழுது ஏத்துங் காழிவேந்தர், கருணையினால் அரவின் விடந்தீருமாறு அழகிய மருகற்பெரு மானைப் பாடினார்:

சடையானை எவ்வுயிர்க்குந் தாயை ஞானச்
சங்கரனைச் சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவி னானும்
பாம்பணையில் துயின்றானும் பரவுங் கோலம்
உடையானை "உடையானே தகுமோ இந்த
ஒள்ளிழையாள் உண்மெலிவ(து)" என் றெடுத்துப்பாட

திருஞானசம்பந்தர் இப்பதிகம் பாடி யருளியவுடனே விடந் தீர்ந்து வணிகன் எழுந்தான். கன்னி, பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள். அந்நங்கையை நம்பி மணந்து இன்புறு மாறு திருமணம் செய்து வைக்கும் படி அன்பர்களைப் பணித்தருளினார் சம்பந்தர். வணிகனுக்கும் அக் கன்னிகைக்கும் இனிதே திருமணம் நிகழ்ந்தது. (தொடரும்)


* நடைபெற்ற தேர்தல் பற்றிய
* சில சுவையான தகவல்களைச் சேகரித்துத்
* தருகிறார் கட்டுரை ஆசிரியர்.

ஓட்டுப் பெட்டிக்கு ஒரு கும்பிடு!



குத்தாலம் செ. சம்பந்தன்

பேசின்பிரிட்ஜ் தொகுதியில் போட்டியிட்ட நால்வரில் இருவர் 'கண்ணன்'. ரிஷிவந்தியம் தொகுதி வேட்பாளர் இருவரும் 'ஆனந்தன்'. அரூர் தொகுதி அபேட்சகர் நால்வரில் இரண்டு 'தீர்த்தகிரி'கள். பொன்னேரியில் போட்டியிட்ட மூவரில் இரு 'ஏழுமலை'கள். மங்களூர்த் தொகுதி வேட்பாளர் எழுவரில் இருவர் கிருஷ்ணன். ஆடுதுறை தொகுதி அபேட்சகர் ஐவரில் இரண்டு கோவிந்தராஜன். ஸ்ரீவைகுண்டம் தொகுதி வேட்பாளர்களில் இரு பெருமாள்கள். அரக்கோணம் தொகுதி அபேட்சகர் மூவரில் இருவர் பக்தவத்ஸலம். கரூரில் போட்டியிட்ட நால்வரும் சாமிகளே. இருவர் நல்லசாமி. ஒருவர் ராமசாமி. மற்றவர் வேல்சாமி.



நாலாயிர வெற்றி

சட்டமன்ற வேட்பாளர்களே இந்தத் தேர்தலில் பதினாயிரத்துக்கு மேற்பட்டு வோட்டு வாங்கி வெற்றியடைந்திருக்கும்போது பாராளுமன்றத்துக்கு 4151 வோட்டுகளே பெற்று வெற்றியடைந்திருக்கிறார் என்றால் அதிசயமாயிருக்கிறதல்லவா? ஆம், லட்சத் தீவுகளில் உள்ள மொத்த வோட்டுக்களே 14505தான். எனவே, அங்கு போட்டியிட்ட ஐவரில் 4151 வோட்டு வாங்கி வெற்றி பெற்றார் ஒருவர்.

ஒன்றே ஒன்று!

இத்தேர்தலில் ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரக்கணக்கான செல்லுபடியாகாத வோட்டுக்கள் இருந்தன. ஆனால் அந்தமான் நிக்கோபாரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்ட 36788 வோட்டுக்களில் செல்லாத வோட்டு ஒன்றே ஒன்றுதான். இத்தனைக்கும் அங்கு நடைபெற்ற முதல் தேர்தலே இதுதானாம்.



அதிகமான வோட்டு

தமிழக சட்டமன்றத் தேர்தலிலேயே அதிகமான வோட்டுப் பெற்றவர் நடிகர் திரு எம். ஜி. ராமச்சந்திரன்தான். அவர் பெற்ற வோட்டுக்கள் 54106. சட்டமன்றத் தேர்தலிலேயே தம்மோடு போட்டியிட்ட மற்ற வேட்பாளரைவிட அதிகமாக வோட்டுக்கள் பெற்றவர் உசிலம்பட்டித் தொகுதி பார்வர்டுபிளாக் வேட்பாளர் திரு மூக்கையாத்தேவர், காங்கிரஸ் வேட்பாளரை விட அவர் பெற்ற அதிக வோட்டுக்கள் 28489.



இந்த வரிசையில் இரண்டாவதாக உள்ளவர் திரு எம். ஜி. ஆர். அவர் பெற்ற அதிக வோட்டுக்கள் 27,674.

குறைவான வோட்டு

தமிழக சட்டமன்றத் தேர்தலில் மிகக் குறைவான வோட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது வானூர்த் தொகுதி. தி.மு.க. வேட்பாளர் எழுபது வோட்டுவித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டி யிட்ட ஸ்ரீவைகுண்டம் தொகுதி சுயேச்சை வேட்பாளர்தான் மிகக் குறைவான வோட்டுகளைப் பெற்றுள்ளார். அவர் பெற்ற வோட்டு 143. இதைவிடக் குறைவாகச் சண்டிகார் பாராளுமன்றத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளர் பெற்ற வோட்டு 87.

மூன்றிலும் பெரிது

தமிழகத்தில் உள்ள பாராளுமன்றத் தொகுதிகள் முப்பத்தொன்பதில், பெரிய தொகுதி ஸ்ரீபெரும்புதூர்தான். இத்தொகுதி வாக்காளர்கள் 595159. அதிகமாக வாக்களித்தவர்களும் இங்கேதான். வாக்களித்தவர்கள் 448018. 39 பாராளுமன்றத் தொகுதிகளில் அதிக வோட்டு பெற்றவர் இத்தொகுதி தி. மு. க. வேட்பாளர் திரு பி. சிவசங்கரன். அவர் பெற்ற வோட்டு: 271528.


இரண்டில் பெரிது

தமிழக சட்டமன்றத் தொகுதிகள் 234ல் சென்னை சைதாப்பேட்டை தொகுதிதான் பெரிது. வாக்காளர்கள் 121979. 234 தொகுதிகளில் அதிகமாக வாக்களித்தவர்களும் இங்கேதான். வாக்களித்தவர்கள் 88961. ஆனால் இங்கு வெற்றி பெற்ற திரு மு. கருணாநிதி அதிக வோட்டுகள் பெற்ற வரிசையிலே திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அடுத்து இரண்டாவது வரிசையில் உள்ளார். இவர் பெற்ற வோட்டுகள்: 53401.

பல்டிகளின் பல்டி

வடநாட்டுப் பாராளுமன்ற வேட்பாளர்

பண்டிகர் என்பவர் தம் பெயருக்கேற்பத் தேர்தலில் பல்டி அடித்தார்.



மாதமல்ல-ஊர்

ஜூன் ஜூஹு என்பது மாதமல்ல. வட நாட்டுப் பாராளுமன்றத் தொகுதிகளில் ஒன்று.

தேர்தல் பகிஷ்காரம்

பிக்சோலா வோட்டுச்சாவடியில் ஒருவர் கூட வோட்டுப் போடவில்லையாம். காரணம் தங்கள் கிராமத்துக்கு ரோடு போட எந்த அபேட்சகரும் உறுதியளிக்காதது தானாம்.



தாங்கள் விரும்பியவரைக் காங்கிரஸ் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கவில்லை என்ற கோபத்தால் ஆந்திராவில் துனிக்பாடு என்ற கிராமத்தைச் சேர்ந்த 1087 வாக்காளர்களும் வோட்டுப் போடவில்லையாம்.

வோட்டு வேட்டையா? புலிவேட்டையா?

திருவனந்தபுரம் நகருக்குப் பதிமூன்று மைலில் வெம்பாயம் கிராமத்தில் உள்ள வோட்டுச் சாவடியைப் பார்வையிட வந்ததாம் புலி. ஒரு மாதகாலமாகக் கோழிகளையும் ஆடுமாடுகளையும் வேட்டையாடி வந்த அப்புலியை — போலீஸ் புலிகளால் பிடிக்க முடியாத அப்புலியை — வோட்டுச் சாவடியைச் சுற்றி வந்த அப்புலியைக் கூச்சலிட்டு விரட்டி விட்டனராம் மக்கள்.

மயிரிழையில் உயிர் தப்பினர்

பஞ்சாப் சட்டமன்றத் தொகுதியான தில்தார் நகரில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் கிருஷ்ண நந்தாராஜ் ஒரே ஒரு வோட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றாராம்.

இருபத்தாறில் ஒன்று

தமிழ்நாடு முழுவதும் 76.56 சதவீதம் வாக்களித்துள்ளனர். மொத்தம் பதிவான வோட்டுகள்: 1,58,53,241. இதில் செல்லாத வோட்டுக்கள் 6,11,060. மொத்த வோட்டில் இருபத்தாறில் ஒரு பங்கு செல்லாத வோட்டுகள்.

தேர்தல் குடும்பம்

பீஹாரில் ராம்கர் ராஜா, அவர் மனைவி, தாயார், மகன், சகோதரன், சகோதரன் மனைவி ஆகிய ஆறு பேர்களும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனராம்.

வோட்டுப் பெட்டிக்கு ஒரு கும்பிடு



கோவை டாட்டாபாத் வாக்குச் சாவடியில் தமது வோட்டைப் போட்டுவிட்டுத் தமது கட்சி வெற்றி பெற வேண்டுமென்று வேண்டி வோட்டுப் பெட்டி முன்பு விழுந்து கும்பிட்டாராம் ஒருவர்.

இப்போதே தயார்!



ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல் : 'எறும்பு'

நல்ல கருத்தோடுகூடிய பேச்சென்றால் அதற்கு நன்கு சிந்தனை புரிந்து பேச வேண்டும் என்பதை விளக்கும் நிகழ்ச்சி இது :

உட்ரோ வில்சன் அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கியபோது அவரை ஒருவர் கேட்டார்.

''பத்து நிமிட நேரம் பேசுவதற்கான பேச்சைத் தயாரிக்கத் தங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் ?''

''இரண்டு வாரம்.''

ஒரு மணி நேரப் பேச்சுக்கு?''

''ஒரு வாரம்.''

''இரண்டு மணி நேரப் பேச்சிற்கு?''

''நான் இப்போதே தயார்'' என்றாராம் உட்ரோ வில்சன்.

பல்சுவைப் பக்கம் - 1



பிளாட்பாரத்தைப் பெருக்கிய பிரதம மந்திரி!

வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தைப் பெருக்கும் வேலையைச் செய்துவந்த ஒருவர் இன்று ஆசியாவில் ஒரு நாட்டின் பிரதம மந்திரியாக இருக்கிறார் என்றால் வியப்பாக இருக்கிறது, இல்லையா?

அவர்தான் தற்போதைய ஜப்பானியப் பிரதம மந்திரி ஐசாகு சாட்டோ.

ஆதாரம்: 'டைம்ஸ் ஆப் இந்தியா'. தகவல்: எறும்பு.



இரு டாக்டர்கள் — பிளாண்டர்ஸ்; அவரது சகோதரர் ஃப்ரான்ஸிஸ் — வைத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது ஆராய்ச்சி வயதில் சதம் போடுபவர்களைப் பற்றியது. அவர்கள் கண்ட முடிவு ஒழுக்கமும் மனத் தூய்மையுமே ஒருவரது நீண்ட வாழ்வுக்குப் பெரிதும் துணை புரிகின்றன என்பதாகும்.

நூறு ஆண்டுகள் வாழ்வதுடன் அந்த நூறு ஆண்டுகளை ஆனந்தமாகவும் கழிக்க அவர்கள் பின்வரும் நிபந்தனைகளை விதிக்கிறார்கள். (1) ஆரோக்கியமான தேகம் (2) சுதந்திரமான எண்ணங்கள் (3) அச்சமின்மை (4) செய்யும் வேலையில் பற்றுதல் (5) நட்புணர்ச்சியுடனும் அன்புடனும் பிறருடன் பழகுதல்.

அவர்கள் ஆராய்ச்சிப்படி சதம் அடைவதென்பது ஏதோ யதேச்சையாக நேருவதல்ல. அதற்காக உழைக்க வேண்டும்! அதாவது தீர்க்காயுளுடன் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று உறுதி பூண்டு அதற்காக நியமப்படி இருந்து வரவேண்டும். நூறாண்டுகள் வாழ்ந்தவர்கள் பலரை இவர்கள் பேட்டி கண்டு பார்த்ததில் அவர்களில் யாருக்குமே மரண பயம் இருந்ததில்லை எனக் கண்டனர். — டாரதி கார்னீஷ்

ஒரு தொழிலதிபரின் யோசனை:



ஒருவர் வெற்றியுடன் திகழ வேண்டுமென்றால் அவருக்குத் தேவையான குணங்களில் முக்கியமானது, பிறர் கூறுவதைக் கவனத்துடன் செவிமடுத்துக் கேட்பதாகும். அது அவருக்குப் பிடிக்காத கருத்தாக இருந்தாலும்கூட அந்த மாற்றுக் கருத்தையும் புரிந்து கொள்ள முயல வேண்டும். நான் மக்கள் பேசுவதைக் கூர்ந்து கேட்பேன். அதுவே என் பொழுதுபோக்கு. எப்போதும் பரபரப்பு அடையக் கூடாது. பரபரப்புள்ள மனிதர்கள் புத்திபூர்வமாகச் செயலாற்றும் திறனுள்ளவர்களாக இருக்க முடியாது.



பிரிட்டிஷ் பிரதமருடைய டௌனிங் தெரு, 10ம் இலக்க இல்லத்தின் வாசல் தோட்டத்தில் புதிதாக ஓர் அறிவிப்புப் பலகை நடப்பட்டது. அதை மாற்றி எழுத வேண்டுமென்று டோரி கட்சி பார்லிமெண்டு உறுப்பினர் மராமத்து அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

அந்தப் பலகையில் எழுதியிருந்தது:

"புல்லின்மீது நடக்காதீர்கள்."

டோரி கட்சி (எம். பி.) கேட்டது:

"தயவுசெய்து, புல்லின்மீது நடக்காதீர்கள்." —பாபு

ஆதாரம்: 'டெய்லி மிர்ரர்'

பல்சுவைப் பக்கம் - 2


ஒற்றுமை

மேற்கு வங்காளத்தில் இந்தத் தேர்தல் வரை மொத்தம் மூன்று பேர் முதன்மந்திரிகளாக இருந்திருக்கிறார்கள்.

டாக்டர் பிரபுல்ல கோஷ், டாக்டர் பி. ஸி. ராய், திரு ஸென் ஆகிய இம்மூவரிடையே ஓர் ஒற்றுமையிருக்கிறது. இம்மூவரும் திருமணமாகாத 'ஒண்டிக் கட்டைகள்'.

இப்போது முதன் மந்திரியாக இருக்கும் திரு அஜய் முகர்ஜி என்ற போட்டி காங்கிரஸ் தலைவரும் அவர்களையே பின்பற்றுகிறார். ஆமாம், இவரும் ஒரு பிரம்மச்சாரி.

தகவல்: வி. மகாலிங்கம்





உலகக் கால் பந்தாட்ட வெற்றி வீரர்களான பிரேஸில் நாட்டவர் ஒரு டாக்டரையும் மனோதத்துவ நிபுணரையும் எப்போதும் தங்கள் ஆட்டக்காரர்களின் கூடவே இருக்கச் செய்துள்ளனர். அந்த இருவரும் உலகப் போட்டியின்போது ஆட்டக்காரர்கள் எந்த இடத்தில் தங்குவது, அங்கு ஆட்டக்காரர்களுக்கு எந்த விதமான ஆகாரம் உடலுக்கு ஒத்துக் கொள்ளும் என்பதை யெல்லாம் ஆராய்வார்கள். கடல் மட்டத்தி லிருந்து அந்த இடம் எத்தனை உயரத்தில் உள்ளது, அந்த இடத்தில் ஆட்டக்காரர்களின் ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் எப்படி மாறுதல் அடைந்துள்ளன என்பதை யெல்லாம் கூடக் கவனிப்பார்கள். சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஏற்ப, உணவு வகைகளில் செய்யப்படும் ஒரு சிறு மாறுதல் ஆட்டத்தில் வெற்றியைத் தேடித் தர வல்லதாக இருக்குமாம். உதாரணமாக ஆட்டத்துக்கு முன் தேநீரில் ஒரு தேக்கரண்டி சர்க்கரை அதிகமாகச் சேர்த்துக்கொள்வதன் மூலம் கிடைக்கும் அதிகச் சக்தி அந்தப் பந்தயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியதாக இருக்கலாம் என்கிறார்கள்! இவ்விதமாக ஒவ்வோர் ஆட்டக்காரரது உடலின் தேவையையும் அவ்வப்போது சரியானபடி கவனித்துச் சொல்ல ஒரு டாக்டரால் தானே முடியும்?


இத்தாலி நாட்டிலுள்ள ஆட்டக்காரர்களின் மானேஜர்களுக்கு வருஷத்துக்கு 25,000 பவுன்களுக்கு மேல் கொடுக்கிறார்களாம். பிரேஸிலிலும் இம்மாதிரி செய்யப் போகிறார்களாம். ஆமாம்! உலகக் கால் பந்தாட்டப் பதவியை நிரந்தரமாகக் காப்பாற்றுவது பெரிய காரியமாயிற்றே!

—ஆங்கில டைஜஸ்ட்

தேர்தல் ஜுரத்துக்குத் 'தெர்மாமீட்டர்!'

சென்ற பொதுத் தேர்தலின் முடிவுகளிலிருந்து, அரசாங்கத்தின் 'உணவுக் கொள்கை'யை மக்கள் எந்த அளவுக்கு எதிர்க்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளலாம். பல உணவு மந்திரிகளை மக்கள் தேர்தலில் தோல்வி யடையச் செய்துவிட்டனர். அவர்களின் பட்டியல்:

1. திரு ஸி. சுப்ரமணியம், மத்திய உணவு அமைச்சர். 2. ஏ. எம். தாமஸ், மத்திய உதவி உணவு மந்திரி. 3. திரு கௌதம சர்மா, மத்தியப் பிரதேச உணவு மந்திரி (டெபாஸிட் தொகையை இழந்தார்.) 4. திரு ஜகமோஹன் சிங் நேகி, உத்தரப் பிரதேச உணவு மந்திரி. 5. திரு வி. இராமையா, சென்னை உணவு மந்திரி. 6. உத்லவ பாய் பரிக், குஜராத் விவசாய மந்திரி. 7. ஹரிதாஸ், உணவு இலாகா மந்திரி, இமாசலப் பிரதேசம். இதைவிடச் சிறந்த 'தெர்மாமீட்டர்' தேவையா?



விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கூடத்தில் வலியைப் பற்றிய ஆராய்ச்சியை செய்துவரும் விஞ்ஞானிகள் வலியை வேகமாக வெளியேற்றுவதற்கான புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்—அதுதான் புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'.

மைக்ரோஃபைண்ட் என்றால் என்ன? புதியதொரு விசேஷமான செய்முறையின் மூலம், 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள வலிநிவாரணப் பொருளை மேலும் 30 மடங்கு நுணுக்கமாக்கியிருப்பதைத்தான் மைக்ரோஃபைண்ட் என்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு மாத்திரையிலும் ஒரு வலிநிவாரணப் பொருளின் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, முன்பைவிட இருமடங்கு அதிகமான வலிநிவாரண சக்தி, முன்னைவிட வேகமாக இயங்கி வலியைத் துரிதமாக வெளியேற்றிவிடுகிறது.

வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது: புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள சுறுசுறுப்பாக இயங்கும் வலிநிவாரணப் பொருள், மிகவும் சுலபமாகவும், துரிதமாகவும் இரண்டறக் கலந்து உங்கள் உடலில் 5 முதல் 7 மணி நேரம் வரை தங்கியிருக்கிறது. இதனால் தான் மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' வலியை அதி வேகமாக வெளியேற்றி, நீண்ட நேரம் பயனளிக்கிறது.

உட்கொள்ளச் சுலபமானது: புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வை வெறும் மாத்திரையாகவோ, தண்ணீரில் கலந்தோ, ஒரு டம்ளர் தண்ணீருடனோ அல்லது சூடான பானத்துடனோ—எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.


கீழ்க்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: [illegible] • தலைவலி • உடல்வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷமும் • ப்ளு • டெங்கு • தொண்டை அழற்சி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி.

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்




[illegible]



மைக்ரோஃபைண்ட் ஆக இருப்பதனால் புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன—எனவே, அது வேகம் துரிதமாக இரண்டறக் கலந்து, விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.





புதிய

மைக்ரோஃபைண்ட்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக
வலியை வெளியே
இழுத்துவிடுகிறது

நிக்கோலஸ் தயாரிப்பு



வி. எஸ். வெங்கடண்ணா



தீண்டாமை ஒழிப்புக்கும் ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்துக்கும் காந்தி மகான் பாரத நாட்டில் எத்தனை பாடுபட்டார் என்பது நம் அனைவருக்கும் தெரியும். அவ்விதமிருக்க கோவாவில் உள்ள ஒரு கோவிலில் கடந்த நானூறு வருஷங்களாகவே ஹரிஜனங்கள் ஆண்டுக்கு ஒரு முறை விசேஷ மரியாதைகளுடன் வரவேற்றுக் கௌரவிக்கப்படுகின்றனர் என்றால் ஆச்சரியமாக இருக்கும்.

பதினாறாம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் ஹிந்து மதத்தை அவமதித்து அதனை கோவாவில் நசுக்கிவிட முற்பட்டனர். போர்ச்சுகீசியரின் அட்டூழியங்களிலிருந்து தங்கள் தெய்வச் சிலைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஹிந்துக்களுக்கு ஏற்பட்டது. ஸால்ஸெடி பகுதியில் கேல்ஷி என்ற கிராமத்தில் சாந்த துர்க்கை கோயில் ஒன்று இருந்தது. போர்ச்சுகீசியர் இக் கோயிலில் விக்கிரகங்களை அழிப்பார்கள் என்று நம்பகமாகத் தெரிய வரவே இக்கோயில் மூலஸ்தானத்திலிருந்த சிலையை மட்டும் எடுத்துக் கொண்டு சில பக்தர்கள் தங்கள் வீடு வாசலைத் துறந்து ஓடிவிட்டனர்.

ஜுவாரி நதியைக் கடந்து அக்கரையை அடைந்தனர். போண்ட மஹால் என்ற அப் பகுதி ஸௌண்டெம் ராஜாவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இவர் ஹிந்து அரசரே. போண்ட மஹால் பகுதியில் காவ்லெம் என்ற கிராமத்தை அடைந்தனர் அப் பக்தர்கள். செழிப்பான கிராமம் இது. மக்களில் பலர் சௌகரியமாக வாழ்ந்து வந்தனர். எனினும் சாந்த துர்க்கை பக்தர்களுக்கு இங்கு ஏமாற்றம் காத்திருந்தது. துர்க்கை அம்மனுக்கென்று ஒரு துண்டு நிலம் ஒதுக்க வேண்டும் என்று கிராமப் பெரியோர்களைக் கேட்டுக் கொண்டதற்கு அவர்கள் மறுத்து விட்டனர். அக்கிரஹாரத்தைச் சேர்ந்த யாரும் உதவ முன்வராது போகவே சாந்த துர்க்கை பக்தர்கள் தங்கள் தெய்வச் சிலையோடும் மனத் துயரோடும் அக்கிராமத்தை விட்டு நகரத் தொடங்கினர். அத்தருணத்தில் கிராம எல்லையில் வாழ்ந்த ஹரிஜனங்களின் ஒரு கூட்டம் இவர்களைச் சூழ்ந்து கொண்டது. "கேல்ஷி கிராமத்திலிருந்து வந்த துர்க்கை அம்மனுக்கு இங்கு தங்க இடமில்லை என்று சொல்வதா? கூடவே கூடாது! எங்கள் குடிசைகள் அமைந்துள்ள இடத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று அன்புடன் வற்புறுத்தினார்கள். தங்களது குடிசைகளையெல்லாம் பிரித்து அப்புறப்படுத்தவும் தொடங்கி விட்டனர். "நாங்கள் மெல்ல வேறு இடம் தேடிக் கொள்ளுகிறோம்; அம்மனுக்கு ஓர் இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொடுங்கள் முதலில்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

கேல்ஷியிலிருந்து வந்தவர்கள், நெஞ்சம் நெகிழ அந்த ஹரிஜனங்கள் அன்புடன் அளித்த நிலப் பரப்பை ஏற்றுக் கொண்டனர் அம்மனுக்காக. தீண்டாதார் வாழ்ந்த இடம் இறைவிக்கு உரிய புனித வாசஸ்தலமாக மாறியது. சிறிய அளவில் மண் சுவர்களுடன் ஒரு கோயில் எழுந்தது. தெய்வச் சிலையுடன் கேல்ஷியிலிருந்து காவ்லெம் கிராமத்துக்கு வந்தவர்களிடம் அதற்கு மேல் செலவழிக்கப் பணமில்லை. அதனால் அம்மனின் மகிமை குன்றி விடுமா என்ன? நாளுக்கு நாள் அதன் பெருமை நாற்புறமும் பரவி வந்தது.

இரண்டு நூற்றாண்டுகள் ஓடிவிட்டன. சத்ரபதி சிவாஜியின் பேரன் ஸதாரா, நகரில் இருந்து கொண்டு ஆட்சி நடத்தி வந்தான். அவனுக்குக்கீழ் இருந்த மந்திரிகளுள் நாரோ ராம் மந்திரி என்பவர் ஒருவர். அவர் தங்கள் குலதெய்வமான இந்த சாந்த துர்க்கையைப் பார்க்க வந்தார். கோயில் இருக்கும் பாழடைந்த நிலை கண்டு வருந்தினார். அச்சமயத்தில் ஸௌண்டெம் ராஜாவிடமிருந்து இப்பகுதி ஸதாராவிலிருந்து ஆண்ட மகாராஷ்டிர மன்னர்களின் கரங்களுக்கு மாறியிருந்தது. ஆகவே தமது மன்னர் ஷாஹு சத்ரபதியிடம் சொல்லி காவ்லெம் கிராமம் முழுவதுமே அந்தக் கோயிலுக்கு என்று எழுதி வைத்துவிட ஏற்பாடு செய்தார் நாரோ ராம் மந்திரி.

ஆக எந்தக் கிராமத்தில் சாந்த துர்க்கை அம்மனுக்கு இடமில்லை என்று கூறப்பட்டதோ, அந்தக் கிராமம் முழுவதுமே அந்த அம்மனுக்குச் சொந்தமாகி விட்டது.

இதைத் தவிர நாரோ ராம் மந்திரியும் தாராளமாக நன்கொடை வழங்க, சாந்த துர்க்கைக்கு அந்த இடத்தில் புதிய கோயில் நிர்மாணிக்கப்பட்டது. இந்தக் கோயிலை இன்றும் அக்கிராமத்தில் காணலாம்.

பின்னால் காவ்லெம் கிராமம் இருந்த பகுதியெல்லாம் போர்ச்சுகீசிய ஆளுகைக்கு உட்பட்டு விட்டது. ஆனால் இப்போது இந்து மதத்தை ஒடுக்குவதில் போர்ச்சுகீசியர் தீவிரம் காட்டவில்லை.

காவ்லெம் கிராமத்தில் ஆண்டுதோறும் மாசி ஆறாம் நாள் மக்கள் ஹரிஜனங்களுக்கு நன்றி செலுத்துகின்றனர். சாந்த துர்க்கை கோயிலுக்கு அவர்களை வரவேற்று விசேஷப் பிரசாதங்களும் பரிவட்டங்களும் தந்து கௌரவிக்கின்றனர். நானூறு ஆண்டுகளாகவே தொடர்ந்து நடக்கும் நிகழ்ச்சி இது.



Spiritual Heritage of Tyagaraja

கர்நாடக சங்கீதத்தை வளப்படுத்திய பெரியோர்களுள் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. சங்கீத மும்மூர்த்திகள் என்று அழைக்கப்படும் சியாமா சாஸ்திரிகள், தியாகப்பிரம்மம், முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஆகிய மூவரும் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருவாரூரில் பிறந்தவர்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தைக் கர்நாடக சங்கீதத்தின் பொற்காலம் என்றே கூறலாம்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் தெலுங்கு மொழியிலும், வடமொழியிலும் இயற்றிய கீர்த்தனங்களில் சுமார் 700 இப்போது கிடைத்துள்ளன. தெலுங்கு லிபியிலும், தமிழ் எழுத்திலும் ஏற்கனவே தில்லை ஸ்தானம் நரசிம்ம பாகவதர், கே. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார், வி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் போன்றவர்கள் தியாகராஜ கீர்த்தனங்களை வெளியிட்டுள்ளார்கள். ஸ்ரீ ராமானுஜாசாரியார் அவர்களுடைய பெருமுயற்சியினால் முதல் தடவையாக ஐந்நூற்று அறுபத்தைந்து உருப்படிகள் ஆங்கில மொழிபெயர்ப்போடு வெளிவந்தன. இவைகளை முதன் முதலாகத் தேவநாகரி லிபியில் அச்சிடப் பல வகைகளில் துணை புரிந்தவர் டாக்டர் வே. ராகவன் ஆவார்.

ஸ்ரீ தியாகப் பிரம்மம் பிறந்து இரு நூறாண்டுகள் முடிவுறும் இந்த 1967 நமது இசைச் சரித்திரத்தில் மிகவும் முக்கியமான வருடமாகும். அதையொட்டி ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தினர் மேற்படி நூலின் இரண்டாவது பதிப்பை வெளியிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

தேவநாகரி லிபியில் இருப்பதால் பாரத நாடு முழுவதும் இக்கீர்த்தனங்களைப் படிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் பொருள் கொடுத்திருப்பது மிகவும் உசிதம். மேனாட்டினர் பலர் நம் சங்கீதத்தில் அக்கறை காட்டி வரும் இந்நாளில் இத்தகைய மொழி பெயர்ப்புக்கள் மிகவும் பயனுடையவை.

டாக்டர் ராகவன் அவர்கள் இக்கீர்த்தனங்களையெல்லாம் வகைப்படுத்தி அரியதோர் ஆராய்ச்சி முன்னுரை எழுதியுள்ளார். பக்தி சம்பிரதாயத்தின் பிரிவுகளை யொட்டி உருப்படிகளைப் பகுத்து, அந்தந்தத் துறைகளை விளக்கும்படி அவைகளைத் தொகுத்து, ராமாயணம், பாகவதம், பக்தி சாஸ்திர நூல்கள், பிற பக்தர்களின் பாடல்கள் இவைகளுடன் ஒப்பிட்டு, இவ்வாராய்ச்சி முன்னுரை எழுதியுள்ளார். இவ்வளவு விரிவாய் ஸ்ரீ தியாகராஜ ஸாஹித்தியங்களை ஆராய்ந்து எழுதப்பட்ட முதல் ஆராய்ச்சியுரை இதுவே எனலாம். ஒன்பது அத்தியாயங்கள் கொண்ட இம்முன்னுரை தனி நூலாகவே விளங்குகிறது.

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும், இந்தக் கீர்த்தனங்களின் உச்சரிப்பையும் பொருளையும் உணர்ந்து கொள்ள இந்நூல் மிகவும் பயன்படும்.

பிரசுரம்: ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை-4 விலை: ரூ 12-50.

- சங்கீத கலாநிதி முசிரி சுப்பிரமணிய அய்யர்

பழைய சென்னை (ஆங்கில நூல்)

தமிழகத்தின் தலைநகரமான சென்னையைப்பற்றிய சரித்திர வரலாற்றை அறிந்து கொள்ள ஆசைப்படுவோருக்கு முன்னாள் நீதிபதி டபிள்யு. எஸ். கிருஷ்ணஸ்வாமி நாயுடு சிறந்த முறையில் தொண்டாற்றியிருக்கிறார், இந்நூலை எழுதியதன் மூலம்.

சென்னை நகரமானது கும்பினியார் ஆட்சியில் தோன்றிய ஜியார்ஜ் டவுன், பார்க் டவுன் போன்ற பகுதிகளை மட்டுமின்றி, வள்ளுவரும், பேயாழ்வாரும் பூதத்தாழ்வாரும், ஞானசம்பந்தப் பெருமானும் காலடி வைத்த மயிலாப்பூர் திருவல்லிக்கேணி போன்ற புனித நகரங்களையும் உள்ளடக்கியதாகும். பிரிட்டிஷார் கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் சென்னையை எப்படி வளர்த்தார்கள், பாக்கங்கள் எப்படி வளர்ந்தன என்பன போன்ற தகவல்களை மிக ரஸமாக இந்நூலில் காண்கிறோம்.

பச்சையப்பன் கல்லூரி போன்ற பல அறக் கட்டளைகளை ஏற்படுத்திய பச்சையப்ப முதலியார் இவ்வாசிரியர் வதியும்இல்லத்தின்-இவ்வாசிரியரின் முன்னோர்களின்—அண்டை வீட்டுக்காரர். அப்படியானால் இச்சென்னையைப் பற்றி எவ்வளவு பெருமிதம் இருக்க வேண்டும் இவருக்கு? அவ்வியல்பான பெருமிதத்துடன் பல சரித்திரச் சான்றுகளையும் ஆராய்ந்து நகர வளர்ச்சியையும், சென்னை நகராட்சி மன்றத்தின் தோற்ற வரலாற்றையும், இன்ன பல ருசிகரமான செய்திகளையும் இவர் தருகிறார். படிக்கும்போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

அந்த நாளில் சென்னையில் பஞ்சம் ஏற்பட்டதாம். எங்கிருந்தோ உணவுதானியத்தை வரவழைத்து வியாபாரிகளிடம் கொடுத்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கச் செய்திருக்கிறார்கள். அவ்வியாபாரிகளில் ஒருவர் கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்ததாகப் புகார் வந்தது. விசாரணை நடத்தப்பட்டது. புகார் நிரூபணமாகித் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை என்ன? பலபேர் பார்க்க இருபது சவுக்கடி!

இப்படிப் பல தகவல்கள் கொண்ட இச்சிறு புத்தகம் சரித்திர மாணவர்களுக்கு ஓர் அரிய வரப்பிரசாதம்.

மிளகு சிறிதுதான், எனினும் காரம் மிகுதி என்பது போல் புத்தகம் சிறிதானாலும் தரத்தில் மிக உயர்ந்தது. இந்த ஆங்கில நூல் தமிழில் வருமானால் பயன் அதிகமாக இருக்கும். ஆசிரியர்: டபிள்யு. எஸ். கிருஷ்ணஸ்வாமி நாயுடு, 30, மாங்கொல்லை. கார்டன் ரோடு, சென்னை-8 விலை ரூ. 1-50.

யாரோ ஓர் ஆடவன் குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டு நிற்பதைப் பார்த்ததும், வள்ளியும் சட்டென்று ஸ்தம்பித்து நின்றாள். அதே கணத்தில் அந்த ஆடவன் யாரென்று புரிந்து கொண்டதும், வியப்பு மிகுதியில், ''நீங்களா!'' என்று தன்னையறியாமலேயே கூவி விட்டாள்.

''குழந்தையை இப்படித் தனியே விடுவார்களா? ஒரு கணம் தப்பியிருந்தால் கசத்திலே விழுந்திருக்குமே!''



என்று கூறிய குமரன் மெதுவாக அவளை நோக்கி முன்னே சென்று குழந்தையை அவளருகே தரையில் விட்டான். குழந்தை அவளைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தது.

''நல்ல சமயத்துக்குத் தெய்வம் போலே நீங்க வந்து காப்பாத்தினீங்க. கண்ணனுக்கு ஏதாச்சும் ஆகியிருந்தா நானும் கசத்திலே விழுந்து உயிரை விட்டிருக்க வேண்டியதுதான்!'' என்று தழுதழுப்புடன் கூறியவாறு குமரனுக்குக் கரம் கூப்பித் தன் நன்றியைத் தெரிவித்தாள் அவள். அதே சமயம் அவள் கண்களில் நீர் நிரம்பியது.

''எப்படியோ ஐயா ஒரு குறைவுமில்லாமே திரும்பி வந்திருக்கீங்களே— அதை நான் பார்க்க முடிஞ்சுதே. அதுக்காகவாவது இந்தக் கண்ணனைக் கொஞ்சணும் போல இருக்கு'' என்று கூறிக் கொண்டே கண்ணனுக்கு முத்தம் கொடுத்தாள்.

பிரயாணப் பையில் பகலுணவுக்காக மேரியம்மாள் கட்டிக் கொடுத்



திருந்த பொருட்களோடு பிஸ்கட் பொட்டலம் ஒன்றும் இருந்தது. குமரன் அதை எடுத்துக் குழந்தையிடம் நீட்டியதும் குழந்தை தாவி அதை வாங்கிக் கொண்டது.

''பட்டாளத்திலே சேர்ந்திட்டீங்கன்னு சொன்ஞங்க. எங்கே இருந்தாலும் நீங்க நல்லா யிருக்கணும்னு நான் பிரார்த்தனை செய்யாத நாளே கிடையாது. கௌரியம்மன் என் பிரார்த்தனையைக் கேக்காம இல்லே'' என்று பரபரப்புடன் கண்ணீரைத் துடைத்தவாறே கூறினுள் வள்ளி.



''இன்னும் என்னைப் பற்றிய நினைவுக்கு உன் மனத்தில் இடம் கொடுக்கலாமா வள்ளி?... இது நியாயமான காரியமா? நீ என்னை அடியோடு மறந்திருப்பாயென்று நினைத்தேனே!'' என்ருன் குமரன்.

வள்ளி திகைத்தாற்போல் அவனைப் பார்த்தாள். ''ஆமாம் சார், நீங்க சொல்றதும் உண்மைதான். உங்களைப் பத்தி நினைக்கக் கூட எனக்கு என்ன உரிமை இருக்கு?'' என்ருள் நிதானமாக.

குமரன் ஒரு பெருமூச்சுடன் மௌனமாயிருந்தான். சட்டென்று தலையைக் குனிந்து கொண்ட வள்ளி ஏதோ தனக்குத் தானே கூறிக் கொள்பவள்போல்கூறினுள்: ''ஆளு... ஆளு... ஐயாவுக்காக என் கௌரித் தாயை வேண்டிக்கிடறது கூடத் தப்பா? எந்த இடத்திலேயும் ஐயா நல்லா இருக்கணும்கற கவலே எனக்கு இருக்கக் கூடாதா?''

குமரன் ஒன்றும் பேசவில்லை. அதற்கு மேலும் அங்கே நின்று வள்ளியைச் சங்கடத்துக்குள்ளாக்க அவன் விரும்பவில்லை.

''நான் வருகிறேன் வள்ளி. எப்போதும் நீ க்ஷேமமாக, சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனையும்'' என்று கூறிவிட்டு அருவிக் கரைக்கு இறங்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையைநோக்கி நடந்தான்.

அப்பாதையில் இறங்குவதற்கு முன்னல் அவன் சற்று நின்று திரும்பிப் பார்த்தான்.

வேறு திசையில் குழந்தையும் கையுமாக வள்ளி வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தாள்.

அருவிக்கரைச் சரிவுப் பாதை வழியே குமரன் பத்தடி கூடச் சென்றிருக்க மாட்டான். சட்டென்று எதிர்த் திசையிலிருந்து, ''வள்ளியக்கா, வள்ளியக்கா!'' என்று அழைத்துக் கொண்டு வ்ரும் குரல் கேட்டதும் அவன் திடுக்கிட்டு நின்ருன். வள்ளியை அப்படி அழைப்பது மங்காவைத் தவிர வேறு யாராய் இருக்க முடியும்? மறுகணம் மங்காவே புதர்களை விலக்கிக் கொண்டு வெளிப்பட்டு அவன் எதிரே வந்தாள். திடீரென்று குமரனை நேருக்கு நேர்

கண்டதும் அவனுக்கு ஓரே திகைப்பாய்ப் போயிற்று.

"சார்.... நீங்களா? இங்கே எப்ப வந்தீங்க....?" என்று கூவினாள் மிகுந்த வியப்புடன்.

குமரன் மங்காவின் தோற்றத்திலிருந்த மாறுதலைத்தான் வியப்புடன் பார்த்தான். முன்பு காட்டுரோஜாவாக இருந்த மங்கா இப்போது தோட்டத்து மல்லிகையாகக் காட்சியளித்தாள். மலைப் பகுதியின் பாறைகளிலும் மேடு பள்ளங்களிலும் கட்டுக்கடங்காமல் துள்ளியோடிக் கொண்டிருந்த காட்டாறு சமவெளிப் பிரதேசத்துக்கு வந்ததும் அடக்கமும், அமைதியும் நிறைந்து செல்லுமே அதைப் போலவே மங்காவின் தோற்றத்திலும் இப்போது ஒருவித அடக்கமும் அமைதியும் வந்து கலந்திருந்தது போல் குமரனுக்குத் தோன்றியது.

"உங்களை இங்கே பார்க்கப் போகிறேன்னு நான் நினைக்கவேயில்லை, சார்!" என்றாள் மங்கா.

"நீயும் உன் தாயாரும் சௌக்கியம்தானா, மங்கா? நீங்கள் இரண்டு பேரும் இந்த இடத்தைவிட்டே போய் விட்டீர்களோ என்று நினைத்தேன்!" என்றான் குமரன்.

"சரிதான்..... இங்கே இருந்த எத்தனையோ பேர் எங்கெங்கேயோ போயிட்ட மாதிரி நாங்களும் போயிருப்போம்னு நினைச்சிட்டீங்களா?" என்று சிரித்தாள் மங்கா.

"ஆனால் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் உங்கள் வீட்டுக்குப் போய்ப் பார்த்தபோது வீடு காலியாயிருந்ததே! யாருமே அங்கே இல்லையே!" என்றான் குமரன்.

"ஓ! பழைய வீட்டிலே போய்ப் பார்த்தீங்களா? நாங்க அங்கே எப்படி இருக்க முடியும்? எனக்குக் கலியாணம் ஆயிடுச்சு தெரியுமில்லே?"

"அப்படியா? தெரியாதே!"

"உங்க உடும்புக் கொட்டகை ஆளு இருக்கே, வள்ளியண்ணன், அதுதான் எங்காத்தாகிட்டே மல்லுக்கு நின்னு என்னைக் கலியாணம் கட்டிக்கிடுச்சு. ஆத்தாளை நான் எப்படித் தனியே விட முடியும்? அதுவும் இப்ப எங்க கூடத்தான் இருக்கு" என்று விவரித்தாள் மங்கா.

"இதையெல்லாம் கேட்க எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறது, மங்கா!" என்றான் குமரன்.

"என்ன சந்தோஷமோ போங்க, சார்" என்று பெருமூச்செறிந்தாள் மங்கா.

"ஏன் மங்கா, வள்ளியண்ணன் உன்னிடம் ஏதாவது....."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, சார்! அதோட முரட்டுத்தனம் எங்கிட்டேயா செல்லுபடியாகும்? அது என்னை அடிச்சாலும், திட்டினாலும், அட்டகாசம் செய்தாலும் அதுக்கு என்கிட்டே இருக்கிற ஆசைக்கு ஒரு நாளும் அழிவு கிடையாதுன்னு எனக்கு நல்லாத் தெரியும். உங்ககிட்டே சொல்றதுக்கு வெக்கமென்னங்க? எனக்கும் அதும் மேலே கொள்ளை ஆசைதான். சோத்துக்குக் கவலையில்லாம, இடுப்பொடிய வேலை செய்ய வேண்டிய கட்டாயமில்லாமே, என்னை எவ்வளவோ சந்தோஷமா வச்சிருக்கத்தான் அது பாடுபடுது."

"பின்னே என்ன மங்கா, நீ சந்தோஷமா இருக்கவேண்டியதுதானே?" என்று கேட்டான் குமரன்.

"நியாயமான கேள்விதாங்க...ஆனா எங்க வள்ளியக்காவுக்கு அது செய்த அக்கிரமத்தை நெனைச்சுக்கிட்டாத்தான் எனக்கு ஆங்காரம் பத்திக்கும். 'தங்கச் சிலை மாதிரி இப்படி ஒரு தங்கச்சி சாதாரணமா கிடைச்சிடுமா? இந்தத் தங்கச்சியை இந்தக் கதிக்குக் கொண்டு வந்து வச்சிட்டியே பாவி' அப்படின்னு ஆத்திரம் தாங்காமே படபடன்னு பேசிடுவேன். அந்தப் பேச்சை எடுத்தா அதுக்கும் பொறுக்காது. கோவத்திலே கண் மண் தெரியாமே என்னைத் துரத்தித் துரத்தி அடிக்க வரும். ஆனால் அதைப் பத்தி நான் பயப்படறதில்லே. மனசிலே தோணினதைப் பட்டுப் பட்டுன்னு பேசிடுவேன். எங்க வள்ளியக்கா முகத்திலே சிரிப்பைப் பார்த்து எத்தனை வருஷம் ஆயிடுச்சு தெரியுமா? அது சந்தோஷமாயிருந்தாத்தானே சார் நான் சந்தோஷமாயிருக்க முடியும்!"

"ஏன் மங்கா, வள்ளி சந்தோஷமாயில்லையா?...."

"நீங்களே இப்படிக் கேட்டா எப்படி சார்? என்னிக்கு நீங்க இங்கேயிருந்து பட்டாளத்திலே சேரப் போனீங்களோ அன்னிக்கே எங்க வள்ளியக்கா முகத்திலேருந்து சிரிப்பும் மறைஞ்சு போச்சு. ஐயா நல்லா இருக்கணுமே, ஐயாவுக்கு ஓர் ஆபத்தும் இல்லாமே இருக்கணுமேங்கற கவலைதான் அதுக்கு எப்போதும். ஐயா நெனைப்பைத் தவிர வேறெந்த நெனைவும் அதும் மனசிலே எட்டிக்கூடப் பார்த்தது கிடையாது.."

"நீ என்ன சொல்கிறாய் மங்கா...? கலியாணமான பிறகும்கூட வள்ளி..."

கையை வெட்டிக் கொண்டால் நாடு கிடைக்கும்



ஆதாரம் : ''விசித்திர மனிதர்கள்'' என்ற நூல்; தகவல்: அ. கி. மூர்த்தி

அல்ஸ்டர் என்றழைக்கப்படும் வட அயர்லாந்தின் முதல் மன்னன் ஹெர்மன் ஒநில். அவன் இந்தப் பதவியை அடைந்த விதம் ரசமானது. கி. மு. 1015ல் ஒநில் வட அயர்லாந்தைக் கைப்பற்றிக் கொள்ளக் கடல் வழியே புறப்பட்டான். அவனுக்குப் போட்டியாக மற்றொருவனும் இன்னொரு கப்பலில் கிளம்பினான். இருவரும் கூடிப் பேசி ஒரு சமரச முடிவுக்கு வந்தனர்.

அயர்லாந்து மண்ணில் யாருடைய கை முதலில் படிகிறதோ அவனே அந்த நாட்டுக்கு அரசனாக வேண்டும் என்பதே சமரச முடிவு. இருவருடைய கப்பல்களும் போட்டி போட்டுக் கொண்டு கிளம்பின. கரையை நெருங்கிவிட்டார்கள். மற்றவன் முதலில் கரையேறிவிடுவான் போலத் தோன்றவே ஒநில் தனது வலது கையை வெட்டி எடுத்துக் கரையில் வீசினான். நிபந்தனைப் படி அவனுடைய கரமே முதலில் அயர்லாந்து மண்ணைத் தொட்டதால் அவனே அரசன் ஆனான். அவனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியார் பல நூற்றாண்டுகள் ஆட்சி நடத்தினர். வலது கரம் அரசாங்கச் சின்னமாயிற்று. இன்றும்கூட அது நிலைத்திருக்கிறது.

மங்கா இடைமறித்தாள். ''கலியாணமா? வள்ளியக்காவுக்குக் கலியாணம் ஆகவே இல்லையே. அவங்கண்ணன் நிச்சயம் செஞ்ச அந்தக் குரங்கு மூஞ்சி மாப்பிள்ளை எல்லாரையும் மோசம் செய்திட்டு, மாயாண்டியண்ணன் வயித்தெரிச்சலையும் கொட்டிக்கிட்டு ஊரை விட்டே ஓடிப் போயிடுச்சே! ஆனா அந்தக் கதையெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிஞ்சிருக்க முடியும்?''

''இன்னும் எனக்குப் புரியவில்லையே மங்கா! இப்போதுதான் நீ வருவதற்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நான் வள்ளியை மேம்பாறைக் கசத்தினருகே சந்தித்தேன்.''

''அப்படியா சார்! வள்ளியக்கா ஒண்ணும் சொல்லலையா? ஆனா பாவம், உங்ககிட்டே பேசவே பயப்பட்டிருக்குமே அது!''

''ஆனால் மங்கா, வள்ளியுடன் ஒரு குழந்தையும் இருந்ததே, அது....''

''கண்ணனைக் கேக்கறீங்களா? அது என்னுடைய மகன் சார்!'' என்று மங்கா கூறியதும் குமரன் அதிர்ந்து போய் நின்றான்.

''அந்தப் புள்ளே அவங்கப்பாவைப் போலவேதான் சுத்த மொரடு. கட்டுக் கடங்காமே ஓடிப் போயிடும். சித்தே முன்னேகூட அப்படித்தான் ஓடிப் போயிடுச்சு. அதைத் தேடிக்கிட்டுத் தான் நான் ஒரு பக்கமும் வள்ளியக்கா ஒரு பக்கமும் சுத்தி அலைஞ்சுக்கிட்டிருந்தோம்'' என்றாள் மங்கா.

''கொஞ்சம் தப்பியிருந்தால் குழந்தை கசத்தில் விழுந்திருக்கும். நல்ல சமயத்தில் வள்ளி வந்து குழந்தையை எடுத்துக் கொண்டாள்.''

''அந்தப் புள்ளேக்கு எங்கிட்டே லட்சியமே இடையாது சார். எப்பப் பாத்தாலும் வள்ளியக்காவையேதான் சுத்திக்கிட்டிருக்கும். 'அம்மா அம்மா'ன்னு கூப்பிட்டுக்கிட்டு அக்காகிட்டேயேதான் ஒட்டிக்கிட்டிருக்குமே தவிர என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காது. அக்காவுக்கும் அந்தப் புள்ளேகிட்டே ஒரே உசிரு.''

'நான் எப்படித் தப்பாக நினைத்து விட்டேன்' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான் குமரன் தழுதழுப்புடன்.

''மெய்யாவே சொல்றேன், அந்தப் புள்ளேக்காகத்தான் அக்கா உசிரையே வச்சிக்கிட்டிருக்கு. அது மட்டுமில்லே சார், நீங்க குடுத்திட்டுப் போனீங்களே அந்த மாலே.... அதுதான் கொஞ்சத் துக்குக் கொஞ்சம் அக்கா மனசுக்குத் தெம்பா யிருக்கு. ஜயாவை நெனைச்சு மனசு கஷ்டப்படும் போதெல்லாம் அந்த மாலையை எடுத்துப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் வடிச்சிக்கிட்டிருக்கும்.''

கேட்கக் கேட்க வள்ளியை நினைத்துக் குமரனின் நெஞ்சம் பொங்கியது.

''மங்கா! உன் புருஷனைப் பற்றிக் கேட்பதற்குத் தப்பாக நினைத்துக் கொள்ளாதே. காளியின் குணத்தில் இப்போது ஏதாவது மாறுதல் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''அதோட மொரட்டுப் பிடிவாதம் அதை விட்டு எப்படிப் போகும், சார்? வள்ளியக்காவுக்கு வேறே எங்கே யாவது கலியாணம் கட்டி வச்சிடணுமின்னு தலைகீழா நின்னு பாக்குது. ஆனா அக்கா எதுக்கும் செவிசாய்க்கிற தில்லே. 'ஒரு தரம் உன் வார்த்தைக் குக் கட்டுப்பட்டு நான் இந்தக் கதிக்கு வந்தது போதும். இனிமேல் என்னைப் பத்தி நீ கவலைப்பட வேண்டியதில்லே. ஆயுசு முழுதும் கலியாணமில்லாமே கன்னியாகவே இருப்பேனே தவிர வேறே யாரையும் திரும்பிக்கூடப்

பார்க்க மாட்டேன்' — அப்படின்னு கண்டிப்பாச் சொல்லிடுச்சு.''

குமரன் விம்மும் நெஞ்சுடன் மௌனமாயிருந்தான். அந்த மூன்று வருஷ காலத்தில் வள்ளியின் மனம் எப்படியெல்லாம் ஏங்கித் தவித்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்ட அவன் உள்ளம் பாகாய் உருகியது.

மங்கா அவன் முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றாள், சற்று நேரம். சட்டென்று அவள் கேட்டாள்.....

''சார் ஒண்ணு கேப்பேன், கோவிச்சுக்க மாட்டீங்களே?''

''என்ன மங்கா ?''

''நீங்க தனியாத்தான் வந்திருக்கீங்களா சார்.... கூட உங்க சம்சாரம்...''

உடனே குமரன் பக்கென்று சிரித்து விட்டான்.

''எனக்குச் சம்சாரம் இன்னும் ஏற்படலே மங்கா. இனிமேத்தான் ஏற்படணும்'' என்றான் சிரித்துக்கொண்டே.

''அப்படின்னா...!'' என்றாள் மங்கா வியப்புடன் விழிகளை உருட்டியவாறு.

''இங்கிருந்து போகும் போது எப்படி இருந்தேனோ அப்படியேதான் இன்னும் இருக்கிறேன்'' என்றான் குமரன்.

''ஏன் சார் அப்படி ?'' என்று கேட்டாள் மங்கா, வெகுளித்தனமாக.

''வள்ளி எப்படி இருக்கிறாளோ அப்படித்தானே நானும் இருக்க முடியும்'' என்றான் குமரன் சிரித்தவாறு.

மங்கா அவனைப் பெருமைப் பூரிப்புடன் நோக்கினாள்.

''சார்! எங்க வள்ளியக்காவோட கன்னி விரதத்தைப் பத்தி இத்தனை நாளும் பெருமைப் பட்டுக்கிட்டிருந்தேன். ஆனா நீங்க.... நீங்க.... சார், மெய்யாவே சொல்றேன், உங்களைத் தெய்வத்துக்குச் சமமாத்தான் நெனைக்கத் தோணுது !'' என்றாள் அவள் என்றுமே உணர்ந்தறியாத தழுதழுப்புடன்.

''ஏன் மங்கா, காளியண்ணனுக்கு இன்று டியூட்டி இருக்கிறதா?'' என்று கேட்டான் குமரன்.

''ஆமாம் சார், காலையிலேயே உடும்புக் கொட்டகைக்குப் புறப்பட்டுப் போயிடுச்சு'' என்றாள் மங்கா.

''சரி, நான் காளியண்ணனிடம் பேச நினைப்பதை அங்கேயே போய்ப் பேசிக் கொள்கிறேன்'' என்றான் குமரன்.

''அப்படியா, சார் ! வள்ளியக்காவுக்கு இது தெரிஞ்சா எவ்வளவு சந்தோஷப்படும்! இப்பவே வள்ளியக்காவுக்குச் சொல்லப் போறேன் சார். நான் வரேன் சார். நான் வரேன்'' என்று அவனுக்கு வணக்கம் தெரிவித்தவாறு அங்கிருந்து ஓடினாள் மங்கா.

குமரன் உடும்புக் கொட்டகையை அடைந்த போது காளியண்ணன் கொட்டகைக்குப் பின்னாலிருந்த தோட்டத்தில் நின்று ஒற்றைக் கையால் பாத்திகளைக் கொத்திக் கொடுத்துச் சரிப்படுத்திக் கொண்டிருந்தான்.

''காளி'' என்ற அழைப்பைக் கேட்டதும் அவன் தலை நிமிர்ந்து பார்த்தான். எதிரே குமரன் நிற்பதைக் கண்டதும் அவன் முகத்தில் வியப்புக் குறி ஏதும் காட்டாமல் மண் வெட்டியைக் கீழே போட்டுவிட்டுச் சாவதானமாக அவனருகே வந்து நின்றான்.

''வணக்கம் சார்! நீங்க வந்தாலும் வருவீங்கன்னு நெனைச்சேன். அப்படியே வந்திட்டீங்க'' என்றான், உணர்ச்சியோ சந்தோஷமோ இல்லாத வறண்ட குரலில்.

''ஏன் காளி, நான் இங்கே திரும்பி வந்திருப்பதைப் பற்றி ஏற்கனவே உனக்குத் தெரியுமா ?''

''அந்த அணைக்கரை வீட்டுக் காவல்கார ஆளு சித்தே முன்னே இங்கே வந்திருந்திச்சு. கூர்க்காக் கிழவனைப் பத்தி விசாரிச்சுக்கிட்டு யாரோ ஒரு ஐயா வந்தாருன்னு சொல்லிச்சு. அந்த ஆளு சொன்ன அடையாளத்திலேயிருந்து நான் புரிஞ்சுக்கிட்டேன். உங்களைத் தவிர வேறே யாருக்கு அந்தக் கூனல் தாத்தாவைப் பத்தி விசாரிக்கத் தோணும் ?''

''பாவம், போலா!'' என்று பெருமூச்செறிந்தான் குமரன்.

''அது சரி சார். நீங்க இங்கே எப்படி வந்தீங்க? பழைய வேலையிலேயே மறுபடியும் சேர்ந்திட்டீங்களா?'' என்று கேட்டான் காளியண்ணன்.

''வேலையில் சேர்ந்தால்தான் வர வேண்டுமா காளி? பழைய நினைவுக்காகவும் வரலாமில்லையா?'' என்றான் குமரன் சிரித்துக் கொண்டே.

''பழைய நினைவுகளா? அந்தச் சிந்தனை இருந்தால் நீங்க இந்தப் பக்கம் வந்தே இருக்கக் கூடாதே !'' என்றான் காளி சற்றுக் கடுமையான குரலில்.

அந்தக் கடுமையைக் கவனிக்காதவன் போல் குமரன் கூறினான். ''நீ சொல்வது ஒரு விதத்தில் உண்மைதான், காளி. கசப்பான அநுபவங்களுடன்தான் மூன்று வருஷங்களுக்கு முன்னால் நான் இங்கிருந்து செல்ல

வேண்டியிருந்தது. ஆனால் அநுபவங்கள் எவ்வளவு கசப்பாக இருந்தாலும் அவற்றைப் பற்றிய நினைவுகள் எனக்குக் கசப்பாயில்லை. அந்த நினைவுகளில் ஒரு வேதனை நிரம்பியிருந்தது உண்மை தான். ஆனால் அந்த வேதனையிலும் ஓர் இனிமை கலந்திருந்ததாகவே நான் உணர்ந்து வந்தேன். அந்த உணர்வு தான் என்னை மறுபடியும் இங்கே இழுத்து வந்தது.

''ஹூம்'' என்று இருமுவது போல் தொண்டையைக் கனைத்தான் காளியண்ணன். ''இனிமையாம் இனிமை! பூப்போல இருந்த என் தங்கச்சி மனசைக் கலச்சு அவ வாழ்வையே வேதனை மயமாக்கிட்டுப் போயிட்டீங்களே. அதை நெனைச்சு நெனைச்சு ஆனந்தப்பட்டுக்கிட்டிருந்தீங்களா இத்தனை நாட்களும்?'' என்று சீறினான்.

''இல்லை காளி! வள்ளியின் வாழ்வு வேதனை மயமாயிருக்கக் கூடாது. ஆனந்தமயமாயிருக்க வேண்டும் என்று தான் இத்தனை நாட்களும் நான் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். அதற்கேற்றாற்போல் இங்கு வந்த பிறகு நல்ல செய்திகள் என் காதில் விழுந்திருக்கின்றன. வள்ளியைப் பற்றி நான் கண்டு வந்த கனவு சீக்கிரமே நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கை புதிதாக என் மனத்தில் துளிர்விட்டிருக்கிறது. நீ சம்மதம் தெரிவித்தால் நான் இங்கிருந்து திரும்பும் போது வள்ளியை என் வாழ்க்கைத் துணைவியாகவே அழைத்துக் கொண்டு திரும்ப முடியும்'' என்றான் குமரன்.

''ஏது.... ஏது.... வள்ளிகிட்டேயே நேரிலே சம்மதம் கேட்டு வாங்கிக்கிட்டு வந்த மாதிரிப் பேசறீங்களே. வழியிலே அவளையும் பார்த்துப் பேசிட்டுத்தான் இங்கே வந்தீங்களா?''

''வள்ளியை வழியில் சந்தித்தது உண்மைதான் காளி. ஆனால் இது விஷயமாக அவளிடம் எதுவுமே பேசவில்லை. அவளுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை என்ற செய்தியே எனக்கு அப்புறம் மங்காவுடன் பேசிய பிறகு தான் தெரிய வந்தது.''

''ஓகோ.... அவங்க ரெண்டு பேரையும் அடக்க ஆளில்லேன்னு நினைச்சாங்களோ? வீட்டிலே தங்காம காட்டிலே சுத்திக்கிட்டு வழியிலே யார்கூடவும் பேசலாம்னு அலைஞ்சுக்கிட்டா இருக்காங்க! இருக்கட்டும்.

தற்காலக் கவிதை-
மாதிரிக்கு ஒன்று:



ரோஜாப்பூ

எட்டாத் தொலைவிலே குலுங்கி நடுங்கும்
தொடுவானம் ஒன்று இருக்கிறது
ரோஜாப் பூவிலே!
பட்டாசுக் கட்டின் ஒரு சரம்
காணக் கிடக்கிறது
ரோஜாப் பூவிலே!
ஜூ'மென்று கிளம்பும் ஜெட்
விமான உறுமல் கேட்கிறது
ரோஜாப் பூவிலே!
பயங்கர மானதோர் கனவின் வார்ப்பு
பதிந்து கிடக்கிறது
ரோஜாப் பூவிலே!
ரவிக்கை அழகுற அணியும் ஒருகையின்
உருட்சியும் தெரிகிறது
ரோஜாப் பூவிலே!
இல்லாதது என்று சொல்லக் கூடியது
ரோஜாப்பூ ஒன்றுதான்
ரோஜாப் பூவிலே!

''ஃப்யூஸியே அன்னாஸா'' (1958) என்னும் ஜப்பானியக் கவியின் ஃப்ரெஞ்சு மொழி பெயர்ப்பிலிருந்து. தமிழில்: ''மனன்''

சாயங்காலம் வீட்டுக்குப் போனதும் விசாரிக்கிற விதமா விசாரிக்கிறேன்.''

''அவர்கள் மேல் தப்பு ஏதும் கிடையாது காளி. குழந்தையைத் தேடி வந்தவர்கள் எதிர்பாராதவித மாக என்னைப் பார்த்துப் பேசும்படி ஆயிற்று'' என்று விவரித்தான் குமரன்.

''சரிதான். அவங்களைப் பார்த்துப் பேசி எல்லாம் முடிவு செய்துட்டுத் தானே வந்திருக்கீங்க? இனிமேல் என் சம்மதத்தைக் கேக்கறதுக்கு என்ன சார் இருக்கு? அவங்கவங்களுக்கு விதிச்ச விதிப்படியே நடக்கட்டும். எனக்கென்ன......''

''அப்படி விட்டாற்போல் பேச லாமா காளி? எது நடந்தாலும் அண்ணன் சம்மதத்துடன் நடப்பதைத் தானே வள்ளி விரும்புவாள்!''

''அண்ணன் சம்மதம் வேணும்னு வள்ளியில்லே எங்கிட்டே பேசணும். நீங்க எதுக்கு நடுவிலே?''

''என்ன காரணமோ, என்னை நீ இன்னும் தப்பாகவே நினைத்துக் கொண்டிருக்கிறாய். இல்லாவிட் டால்...'' என்றான் குமரன்.

''உங்களைப் பத்தித் தப்பாகவோ சரியாகவோ நெனைக்க நான் யாரு? ஆனால் எனக்கும் என் தங்கச்சிக்கும் குறுக்கே நீங்க மறுபடியும் மறுபடியும் எதுக்கு வரணும்னுதான் கேக்கறேன்'' என்றான் காளியண்ணன்.

''உன் தங்கையின் வாழ்வை வேதனை மயமாக்கி விட்டேன் என்று சற்று முன்பு நீதானே குற்றம் சாட்டினாய். அதை மாற்றி வள்ளிக்கு நல்வாழ்வு அளிக்கும் பொறுப்பு என்னுடையதாகி விடவில்லையா ?''

குமரனின் இந்தப் பேச்சையே விரும் பாதவன் போல் காளியண்ணன் சட் டென்று முகத்தைச் சுளித்தவாறு வேறு பக்கம் திரும்பிக் கொண்டு கூறினான். ''சார், நீங்கள்ளாம் பெரிய மனுசங்க. எங்களைப் போல ஏழைங்களுக்கு உங்களாலே வேதனை குடுக்கத்தான் முடியும். நல்வாழ்வு குடுக்க முடியாது.''

காளியண்ணனுடைய இந்தப் பேச் சும் அவன் பேசிய தோரணையும் சட் டென்று குமரனுக்கு ஆத்திரமூட்டிவை.

''காளி! உன் தங்கையின் நல்வாழ் வைப் பற்றிப் பேசுவதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? இத்தனை நாட்களும் அவள் அனுபவித்த மனத் துன்பத்துக்கெல்லாம் நீதான் கார ணம் என்பதை மறந்து விட்டாயா? உன் பிடிவாதத்துக்காக வள்ளியை ஒரு பாழும் கிணற்றில் தள்ள நினைத்தாயே, உன் எண்ணம் நிறைவேறியிருந்தால் வள்ளியின் கதி என்ன ஆகியிருக்கும்? அதைக் கொஞ்சமாவது யோசித்துப் பார்த்திருந்தால் இப்போது இவ்வளவு அகந்தையுடன் பேசுவாயா ?'' என்று கத்தினான் குமரன்.

''சார்! அந்தப் பேச்செல்லாம் அனாவசியம். என் தங்கச்சியைப் பாழும் கிணத்திலே தள்ளினாலும் தள்ளு வேனே தவிர உங்க கையிலே பிடிச்சுக் குடுப்பேன்னு நீங்க கனவிலேயும் நினைக்க வேண்டாம்'' என்று காளி யண்ணனும் பதிலுக்கு உக்கிரமாகக் கத்தினான்.

''சரி! இதுதான் உன் முடிவானால் அதற்கு மேல் உன்னிடம் பேச நான் விரும்பவில்லை'' என்று கூறிவிட்டுக் குமரன் வேகமாக அங்கிருந்து சென்று விட்டான்.

அலட்சியமாக அவன் செல்லும் திசையில் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த காளியண்ணன் ஓர் ஏளனச் சிரிப்புடன் மீண்டும் தோட்ட வேலையைக் கவனிக்கலானான். (தொடரும்)

ஏன் முடியாது?



ஒரு நாளா, இரண்டு நாளா?

கடந்த ஒரு மாத காலத்தில் கிட்டத்தட்ட இருபது நாட்களுக்கு மேலிருக்கும்!

பொறுமையே உருவான குருமூர்த்திக்கே ஆத்திரமும் கோபமும் பீறிட்டுக் கொண்டு வந்தன என்றால், விஷயம் எவ்வளவு தூரம் அவர் மனத்தைப் பாதித்திருக்க வேண்டும்!

''மிஸ்டர் சந்தானம்!'' என்று கூப்பிட்டார். அவர் குரலில் என்றுமில்லாத கடுமை தொனித்ததை எல்லாச் சிப்பந்திகளும் உணர்ந்தனர்.

என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ என்று அவர்கள் பயந்தனர்.

இரண்டு நிமிஷங்களுக்கு முன்புதான் வந்து தன் வேலையைத் தொடங்கிக் கொண்டிருந்த சந்தானம், தலைமைக் குமாஸ்தா குருமூர்த்தி கூப்பிட்டதைக் கேட்டுச் சற்று ஆச்சரியத்துடனும் பயத்துடனும் அவர் மேஜைக்குமுன் சென்று நின்றவண்ணம், ''என்ன ஸார், வேண்டும்?'' என்றான்.

''கடிகாரத்தில் மணி என்ன ஆகிறது என்று பார்த்தீர்களா?'' என்று தலைமைக் குமாஸ்தா குருமூர்த்தி அமைதியான அழுத்தமான குரலில் கேட்டார்.

''பத்தடித்து இருபது நிமிஷங்களாகின்றன, ஸார்!''

''ஆபீஸ் தினமும் எப்பொழுது ஆரம்பமாகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் குருமூர்த்தி.

''பத்து மணிக்கு, ஸார்!'' என்று நிதானமாகப் பதிலளித்தான் சந்தானம்.

''மற்ற சிப்பந்திகள் அனைவரும் பத்து மணிக்குச் சில நிமிஷங்களுக்கு முன்பே காரியாலயத்துக்கு வந்து தங்கள் தங்கள் வேலையை ஒழுங்காகச் செய்யும் பொழுது, உங்களால் மாத்திரம் பத்து மணிக்கு வர முடியவில்லையாக்கும்!.... நானும் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். கடந்த ஒரு மாதத்துக்குள், நீங்கள் நேரம் கழித்து வருவது இன்று இருபதாவது தடவை என்று நினைக்கிறேன்.........''

''மன்னிக்க வேண்டும், ஸார்! வந்து....'' என்று இழுத்தான் சந்தானம்.

''என்ன, மிஸ்டர் சந்தானம், வந்தாவது போயாவது! எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. ஊஹும்.... காலையில் எழுந்தவுடன் உங்கள் மனைவிக்கு ஒத்தாசையாகக் காய்கறி நறுக்கித் தருகிறீர்களா?''

''இல்லை, ஸார்! எனக்கு நறுக்கவே தெரியாது!''

''குழந்தைகளுக்கு வீட்டுக் கணக்கைப் போட்டுக் கொடுத்து, பாடம் சொல்லித் தருகிறீர்களா?''

''கிடையாது, ஸார்!''

''க்யூவில் நீங்கள் காப்பிக் கொட்டை, அரிசிக்குக் கால் கடுக்க நின்று வாங்குகிறீர்களா?''

''அந்தச் சிரமத்தை என் மனைவி எனக்குத் தருவதில்லை, ஸார்! வேலைக்காரியையே அனுப்பி வாங்கிவைத்துவிடச் சொல்லுகிறாள்!''

''குழந்தைகளைக் குளிப்பாட்டிவிட்டு, அவைகளுக்குத் தேவையான துணிமணிகளை எடுத்துக் கொடுத்து, தலையை வாரிவிட்டு, மனைவிக்கு ஒத்தாசை செய்கிறீர்களா?''

''இல்லை, ஸார்!''

''ஆபீஸுக்கு வருமுன்னால் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் விட்டு வருவதுண்டா?''

''கிடையாது, ஸார்!''

''உங்கள் வீட்டிலிருந்து பஸ்ஸைப் பிடிக்க மூன்று பர்லாங் தூரம் மூச்சு வாங்க ஓடி வருவதுண்டா?''

''இல்லை, ஸார்! என் வீட்டிலிருந்து 'பஸ் ஸ்டாப்' நூறு கஜ தூரத்திலேயே இருக்கிறது, ஸார்!''

குருமூர்த்தி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். ''பேஷ்! காலையில் எழுந்து காய்கறி நறுக்கிக் கொடுத்து விட்டு, க்யூவில் நின்று ரேஷன் சாமான்களை வாங்கி வந்து கொடுத்து விட்டு, குழந்தைகளுக்கு வீட்டுக் கணக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்து, பிறகு அவர்களைக் குளிப்பாட்டி, அலங்கரித்து, ஆபீஸுக்கு வருமுன் அவர்களைப் பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு, பஸ்ஸைப் பிடிக்க வேண்டி மூன்று பர்லாங்கு தூரம் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்து, ஒருவிதமாக எப்படியோ பத்தடிக்க ஐந்து நிமிஷங்களுக்கு முன்பாகவே தினமும் ஆபீஸுக்கு என்னால் வர முடிகிறது!.... இந்தக் காரியங்களில் **ஒன்றையும் செய்யாத உங்களால்** பத்துமணிக்கு முன்பாக ஆபீசுக்கு வர முடிவதில்லையோ?.... ஊஹும்....! இன்று கடைசி முறையாக மன்னித்து விட்டேன். நாளையிலிருந்து நீங்கள் கால தாமதமாக வந்தால், நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்......''

விலங்கிற்கோர் விலங்கு

"சாயிப்ரியா"



"என்ன, உங்களைத்தானே? உங்க அழகான 'கதாநாயகி'யின் கதை தெரியுமோ?"

பொழுது விடிந்ததும் விடியாததுமாகச் சாவித்திரி இப்படி ஒரு குண்டைப் போட்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஈஸி சேரில் சாய்ந்து உலக அக்கப்போர்களைப் பேப்பரில் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இந்தச் சமாசாரம் புதியதாகவும் மற்ற உலக விஷயங்கள் எல்லாம் அற்பமாகவும் ஆகி விட்டன.

"சாவித்திரி, நீ யாரைச் சொல்றாய்?"

"உங்களுக்குப் பூலோகமா, கைலாசமா என்பதே தெரியாதே; எதிர் வீட்டுப் பத்மாவைத்தான் சொல்றேன். அவளைப் பார்த்து விட்டு அடிக்கடி பீற்றிக் கொள்வீர்களே! 'என்ன உயரம், என்ன நடை, என்ன அழகான கூந்தல், சிரிக்கும் கண்கள், துடிக்கும் அதரம்' என்றெல்லாம் பிதற்றுவீர்களே, 'அவளைத்தான்' சொல்றேன். அழகு, அழகு என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு குதித்தீர்களே, அது செய்த அழகான காரியத்தைத்தான் சொல்றேன். அதன் வீட்டுக்கு ராமசாமி என்று ஒரு தடியன் கருகருன்னு மீசை வைத்துக் கொண்டு பால் கொண்டு வருவானே, அவனோடு உங்க பத்மா — அழகான 'கதாநாயகி' பத்மா ஓடிப் போயிட்டா. ஊர் சிரிக்கிறது. நீங்க என்னடான்னா, யாரு, எப்போ, எங்கே என்று குழந்தை மாதிரி கேட்டுண்டு இருங்கோ!"

எனக்குத் 'திக்'கென்றது. எதிர் வீட்டுக்கே — ஏன் இந்தத் தெருவுக்கே அழகு அளித்து வந்த பத்மாவா இப்படிப் பண்ணி விட்டாள்! என்னால் நம்பவே முடியவில்லை! இவள் சொல்வதை வைத்துக் கொண்டு எந்த முடிவும் பண்ணக் கூடாது. பெண்களே பொதுவாகப் பொறாமைப் பிண்டங்கள். அதிலும் வேறொரு பெண் தன்னைவிட அழகாக இருந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். கைச் சரக்கும் தாராளமாகச் சேர்ந்துவிடும். தன்னைவிட மற்றவள் அழகு என்று எந்தப் பெண் ஒப்புக் கொள்கிறாள்?

அதிலும் சாவித்திரியா? என் மனைவியாக இருப்பதனால் உண்மை மறைந்து விடுமா? அல்லது மாற்ற முடியுமா? உண்மை என்றும், என்றும் உண்மைதானே! பத்மாவை விட இவள் நிச்சயம் அழகில்லைதான்.

பத்மாவின் கொடி போன்ற 'தளதள' என்ற இளமையின் கொழிப்பு எங்கே; இரண்டு பிரசவங்களுக்குப் பிறகு சற்றுச்சாம்பல் பூத்தாற் போன்ற சாவித்திரியின் தளர்ந்த மேனி எங்கே? வட்டமான முகத்திலே நட்சத்திரம் போல் ஜொலிக்கும் கண்களுக்கும், தாய்மையினால் தளர்ந்து நீண்ட முகத்திலே கனிவுடன் மிளிரும் விழிகளுக்கும் வித்தியாசம் இல்லையா? தனியாகப் பார்த்தால் சாவித்திரி அழகானவள்தான். ஆனால் பத்மாவோடு ஒப்பிடும் போது?...

ஆம், சாவித்திரி சொன்னது போல, என் கதாநாயகிதான்



அவள்! மனிதன் தன்னால் அநுபவிக்க முடிகிறதோ, இல்லையோ, அழகை ஆராதிக்கவாவது முடிகிறதே! பத்மாவை நான் பாராட்டினேன்; புகழ்ந்தேன்; சாவித்திரி சொன்னது போல் 'தலையில் வைத்துக்கொண்டு' குதித்தேன். இவ்வளவுக்கும் அவள் எனக்கு எந்தவித உறவும் கிடையாது. அவள் அழகி. நான் அழகு ரசிகன். இது போதாதா? இந்த உறவு ஒன்றே போதுமே!

அன்றொரு நாள் நான் மாடியில் வழக்கமான இடத்தில் அமர்ந்து கதை எழுதிக் கொண்டிருந்தேன். யாரோ படி ஏறி வரும் ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

கையில் காப்பி டம்ளருடன் சாவித்திரியும், அவளைத் தொடர்ந்து ஒரு பெண்ணும் வருவது தெரிந்தது. பேனாவை மூடி வைத்தேன். சாவித்திரி வந்தப்புறம் நான் எழுதினாற் போலத்தான்!

''நமஸ்காரம் 'ரைட்டர்' சார்!'' இனிமையான குரல் கேட்டு அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தேன். என்னை எவ்வாறு எண்ணினாலும் சரி, நான் எண்ணியதைச் சொல்கிறேன். அவள் முகத்தைப் பார்த்தவுடனேயே அவள் மீது எனக்கு விவரித்துக் கூற இயலாத பிரேமை உண்டாயிற்று.

நான் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

பனித் துளிகளால் குளித்த ரோஜா மலர் காலைச் சூரிய ஒளியில் பச்சை மரகத இலைகளிடையே ஒளிருமே — அப்படி அவள் ஜொலித்தாள்.

என் பார்வையைக் கண்ட சாவித்திரி கவனத்தைத் தன் பக்கம் இழுக்க முயன்றாள்.

''இவள் எதிர்வீட்டுப் பெண். பெயர் பத்மா. எஸ். எஸ். எல். ஸி. வரை படித்திருக்கிறாள். நீங்கள் ஆபீசுக்குப் போய்விட்டபின் ராகவனைக் கவனித்துக் கொள்வது இவள்தான். அவன் செய்கிற விஷமத்துக்கு இவளும் இல்லையென்றால் நான் அடுப்புக் காரியம் செய்தாற் போல்தான். ரொம்ப நாளா இவ கேட்டிண்டிருக்கா. நீங்க எப்படிக் கதை எழுதறேள்னு தெரியணுமாம். 'எனக்கென்னடி தெரியும்? அவரையே கேட்டுக்கோ'ன்னு அழைச்சிண்டு வந்திருக்கேன். இவளுக்குத் தமிழ் டைப் அடிக்கக் கூடத் தெரியுமாம். உங்க கதை இதை ஏதாவது டைப் அடிக்கச் சொன்னாலும், இவள் செய்வாள்.''

முழு விவரத்தையும் ஒப்புவித்தாள் சாவித்திரி. மீண்டும் அந்தப் பெண்ணின் முகத்தை நோக்கினேன். வயது சுமார் பதினேழு இருக்கும். குறுகுறு என்று அலையும் கண்கள். மிகவும் புத்திசாலி. அத்துடன் உணர்ச்சியும் மிக உள்ளவள் என்று முக விலாசம் தெரிவித்தது. எனக்கு வந்த காப்பியை எடுத்து அவள்முன் வைத்தேன்.

''அவளுக்கு நான் வேறு கொண்டு வருகிறேன். நீங்கள் சாப்பிடுங்கள்.''

எனக்காகப் போட்ட பீபரிக் கொட்டை முதல் டிகாக்ஷன் அவளுக்குப் போய்விடப் போகிறதே என்ற ஆதங்கம் சாவித்திரிக்கு.

''நான் சாப்பிட்டாச்சு சார், நீங்க சாப்பிடுங்கோ'' என்று காப்பியை எடுத்து என்முன் வைத்தாள் பத்மா.

காப்பியிலிருந்து எழுந்த மணம் மனத்தைக் குதூகலிக்கச்செய்தது.

எடுத்து ஆற்றப் போன கையை, அதன் சூடு விரலைச் சுட அப்படியே வைத்துவிட்டுக் கையை உதறிக் கொண்டேன்.

''சுடறதா, ஆற்றித் தரட்டுமா?'' — பத்மா கேட்டுக்



கொண்டே காப்பியை எடுத்து ஆற்றத் தொடங்கினுள். சாவித்திரிக்கு மெல்லவும் முடியவில்லை; விழுங்கவும் முடியவில்லை.

''சூடு குறைச்சலாகத்தானே கொண்டு வந்தேன்!''

காப்பியை லாகவமாக, அழகாக, துளிக்கூடக் கீழே சிந்தாமல் ஆற்றித் தம்ளரில் பாதியை ஊற்றி என்னிடம் கொடுத்தாள் பத்மா. இந்த உபசரணை உள்ளூற சாவித்திரிக்குக் கோபத்தைத் தூண்டினுலும் எனக்குப் புரிப்பே.

''சாப்பிடுங்கோ, சார்!'' கையில் நுரை பொங்கும் காப்பி. எதிரில் இளமை பொங்கும் பத்மா. என் மனம் உற்சாகத்தால் பொங்கியது. ஒரே உற்சாகம்தான்!

இதற்கிடையில் கீழே கைக்குழந்தை வீறிடும் சப்தம் கேட்டுச் சாவித்திரி மனமில்லாமல் மாடி இறங்கினுள்.

''பத்மா! உனக்குக் கதை என்றால் ரொம்பப் பிடிக்குமோ?'' நான் காப்பியைக் குடித்துக் கொண்டே கேட்டேன்.

''என்னுடைய பெரும் பகுதி நேரம் அதில் தானே கழிகிறது. நாங்கள் நான்கு பெண்கள் வீட்டில் இருப்பதால் அடுப்படிக் காரியங்களெல்லாம் மற்றவர்கள் கவனித்துக் கொள்ளுவார்கள். குழாயடியில் நின்று தண்ணீர் பிடிப்பதோடு என் வேலை சரி. மற்ற நேரமெல்லாம் சும்மாத்தானே இருக்கிறேன். ரொம்ப 'போர்' அடிச்சுதுன்னு கடைசித் தம்பி ரமணிக்கு வேடிக்கை காட்டுவேன்.''

''ரமணி உன் கடைசித் தம்பியா?''

''ஆமாம். எங்கள் வீட்டில் அவன்தான் கடைசி. அவன் ஒருவனே புருஷப் பிள்ளை, நான்கு பெண்களுக்குப் பிறகு!''

''உன் அப்பா என்ன செய்கிறார்?''

''போஸ்ட் மாஸ்டராக இருந்து 'ரிடையர்ட்' ஆகி விட்டார். பென்ஷன் வருகிறது. கொஞ்சம் நிலம் இருக்கு.''

''பெரிய குடும்பம்தான். 'கல்யாணம் கார்த்தி'ன்னு உங்க நான்கு பேருக்கு அவர் என்ன செய்வார்?''

''அதுதான் சிக்கல். பெரிய அக்கா சித்ராவுக்கு வரன் பார்த்தது—ஆயாயிரத்துக்கு மேல் வரதட்சிணை கேட்கிருர்கள். இந்தக் காலத்தில் ஒரு பள்ளிக்கூட வாத்தியாரைப் பார்த்தாலும் இரண்டாயிரத்துக்குக் குறையமாட்டேனென்கிறதே!''

திருமணத்தைப் பற்றின கசப்பான உண்மையை அவள் நன்கு உணர்ந்திருந்தாள்.

''சரி. அது போகட்டும். உனக்குத் தமிழ் எழுத்தாளர்களில் யாரை மிகவும் பிடிக்கிறது?''

''ஏன், உங்களைத்தான்.'' — கன்னம் பவளமாயிற்று.

எனக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. திடீரென்று சாவித்திரியின் கனிவான இரங்கும் முகம் மனத்தில் இடறியது. ''பத்மா, நீ நன்கு பேசக் கற்றுக் கொண்டிருக்கிருய்.''

என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள் அவள். அதிலே பொன்னியின் பூரிப்பும், கோதாவரியின் விசாலமும், தாமிரவருணியின் தெளிவும், பிரம்மபுத்ராவின் சுழிப்பும், கங்கையின் புனிதமும் கண்டேன். நான் அதில் அமிழ்ந்தேன்.

கைக் குழந்தையுடன் படியேறி வந்த சாவித்திரி மௌனத்தைக் கலைத்தாள். ''பத்மா! உன் அம்மா கூப்பிடுறுள்.''

''அப்புறம் வரேன் சார்!'' பத்மா என்னை நோக்கி ஒரு பார்வை பார்த்துவிட்டுத் துள்ளி ஓடி விட்டாள்.

அந்தப் பத்மாவா வீட்டை விட்டு ஓடி விட்டாள்? என்னுல் நம்பவே முடியவில்லையே! சாவித்திரி சொல்லுவதையும் நம்பாமல் இருக்க முடியவில்லையே!

அன்று தமிழ் வருஷப் பிறப்பு. தண்ணீர் கொட்டி வீட்டைக் கழுவிக் கொண்டிருந்தேன். கொல்லைப்புறத்திலிருந்து நானே நீர் கொண்டு வந்து கொட்டி, கழுவி விடவும் வேண்டியிருந்ததால் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு கொல்லைக்கும் உள்ளுக்கும் அலைந்து கொண்டிருந்தேன்... கொல்லையிலிருந்து தண்ணீர்க் குடத்துடன் உள்ளே நுழைந்தேன். யாரோ பெருக்கும் சத்தம் கேட்டது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சாவித்திரிதான் மூன்று நாள் லீவு போட்டு விட்டுக் கொல்லையில் நிம்மதியாக உட்கார்ந்துவிட்டாளே! சமையல்கூட அடியேன் வசம்தானே!

ஹாலில் முழங்கால் வரை புடவையை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டு சந்தனக் கட்டை போன்ற மென்மையான பாதம் தரையில் பதியப் பரபரக்க வாருகோலால் தண்ணீரைத் தள்ளிக் கொண்டிருந்தாள் பத்மா!

அந்தக் காட்சியே ஓர் இனிய வஸந்தமாகத் தோன்றியது எனக்கு. என் எண்ணத்தில் எந்த விதமான மாசும் இல்லை. அந்தக் காட்சியில் உள்ள இயற்கை ஓர் அழகைத் தந்தது. அந்த அழகு எனக்கு மயக்கமூட்டியது.

''என்ன, பத்மா, நீயா? நீ ஏன்...?'' நான் முடிக்கவில்லை.

அதற்குள் பத்மா என் கையிலிருந்த குடத்தைப் பிடுங்காத குறையாக வாங்கித் தண்ணீரை ஊற்றிவிட்டு மீண்டும் தண்ணீர்கொண்டு வரக் கொல்லைப்புறம் போய்விட்டாள். அவள் போனதும் நான் வாருகோல் எடுத்துத் தண்ணீரைப் பெருக்க ஆரம்பித்தேன். தண்ணீருடன் திரும்பிய பத்மா ஹாலில் நுழைந்ததும் நான் நிமிர்ந்தேன்.

அவள் பார்வையை என்னுல் எதிர்நோக்க முடியவில்லை. குடத்தைக் கீழே வைத்துவிட்டு ஓடி வந்து என் கைகளிலிருந்த வாருகோலைப் பிடுங்கிக்கொண்டு சொன்னுள்:

''புருஷர்களின் உத்தியோகம் இது இல்லை. வேறு வேலை இருந்தால் போய்ப் பாருங்கள். வீடு கழுவ வேண்டும் என்று எனக்கு ஒரு வார்த்தை சொல்லியனுப்பக் கூடாதா? நானும் கிழமையுமாக ஏன் அலைகிறீர்கள்?''

அவளுக்கு மூச்சு வாங்கியது. அதுவும் ஓர் அழகாகவே இருந்தது. பவளமல்லிகையில் பனி மணிகள் கோத்து நிற்பது போல் அவளது முக மலரில் வேர்வை அரும்பி நின்று அந்த நேர அழகுக்கு மீண்டும் அழகு செய்தது. நிதுமாகவே பத்மா மிகவும் அழகானவள்தான்.


முகப்பருக்கள் உங்களுடைய திருமணத்திற்குத் தடையாக நிற்கவேண்டாம்.
மருந்து கலந்த நிடால் கிரீமை உபயோகித்து முகப்பருக்களை அகற்றுங்கள்.
பரு, கரும்புள்ளிகள் எல்லாம் அகன்று பொலிவு நிறைந்த சருமத்துடன் நீங்களும் அழகிய மணமகளாகத் திகழலாம்.
மருந்து கலந்த நிடால் முகப்பரு கிரீமை 7 நாட்கள் உபயோகித்துப் பாருங்கள். பரு, கரும்புள்ளிகள், சினப்பு, இவைகள் சொட்டையோ, தடமோ ஒன்றுமில்லாமல் உதிர்ந்துவிடும். சருமமும் புத்துயிரளிக்கப்பட்டு பிரகாசமடைவதைக் காண்பீர்கள்.
கிருமி நாசினி கலந்துள்ளதால் நிடால் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது. நறுமணமுள்ளது. புவர்களுக்கும் பெண்களுக்கும் ஏற்றது.
உபயோக முறை டப்பாவில் அடங்கியுள்ளது.
Nital
MEDICATED PIMPLE CREAM
நிடால் முகப்பரு கிரீம்
7 நாள் முகப்பரு சிகிச்சை
தயாரிப்பாளர்: கொச்சின் பாம் பிரைவேட் லிமிடெட், நவரத்ன ஹவுஸ், மந்த்ரா ரோடு, கொச்சின்-2
சென்னை, கேரளா, ஆந்திர பிரதேசம், மைசூர் ராஜ்யத்திற்கு விநியோகஸ்தர்கள்:
கணபதி & கம்பெனி, 103-104, லிங்கி செட்டித் தெரு, த. பெ. 1986, சென்னை - 1
எல்லா பிரபல மருந்து கடைகளிலும் கிடைக்கும்

''இன்று எனக்கு விடுமுறை, பத்மா.''

''இந்த வேலையைச் செய்வதற்குத்தான் விடுமுறை அளித்தார்களோ?''

அவள் என்ன சொல்லுகிறாள்? எனக்குப் புரியவில்லை. ஆனால் எப்படியோ நான் வேலை செய்யும்போதெல்லாம் அவள் குறுக்கிட்டு என்னை வேலை செய்ய அனுமதிப்பதேயில்லை.

''பத்மா! உன்னிடம் இங்கு அநியாயமாக வேலை வாங்குவதாக உன் அம்மா குற்றம் சாட்டப் போகிறாள்.''

பத்மா சட்டென்று நிமிர்ந்தாள். கருமையான கூந்தல் கண்களை மறைத்தது. ஈரக் கைகளால் கேசத்தைச் சரிசெய்து கொண்டே சொன்னாள்: ''அம்மாவுக்கு வேலை செய்ய இன்னும் மூன்று பெண்கள் இருக்கிறார்கள்.''

கொஞ்ச நேரம் மௌனம். இவளோடு பேசி ஜெயிக்க முடியாது என்று எண்ணி நாற்காலியில் உட்கார்ந்தேன்.

பம்பரம் சுழல்வது போல் சுழன்று வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அழகாகக் கோலமும் போட்டு விட்டாள். அந்த மென்மையான பொன்வண்ண விரல்களில் என்னதான் மந்திரம் இருக்கிறதோ, தெரியவில்லை. எப்படித்தான் வெறும் கோல மாவால் இப்படி அற்புதப் படைப்புக்களை உருவாக்க முடிகிறதோ? தரையெல்லாம் விதம் விதமான கோலங்கள். தரையில் கால் வைத்தால் எங்கே கோலம் கலைந்து விடுமோ என்று அஞ்சியது மனம்.

''பத்மா! எப்படித்தான் இவ்வளவு அழகாகக் கோலம் போடுகிறாய்?''

''ம்..... என்னை ஒன்றும் பரிகாசம் செய்யாதீர்கள். உங்கள் 'ஹிருதய கமலம்' என்ற கதையில் ராதை என்ற பெண் இது மாதிரியா கோலம் போட்டாள்? ரொம்பவும் பாராட்டி எழுதி யிருந்தீர்களே!''

''ரொம்ப நாள் முன்னாடி வந்த கதையல்லவா அது? இன்னுமா அதை ஞாபகம் வைத்திருக்கிறாய்?''

''உங்க எழுத்தை நீங்கள் மறக்கலாம். ஆனால் என்னால் மறக்க முடியாது.''

நான் அவளை நோக்கினேன். அவள் தலை குனிந்தாள். மாலைச் சூரியனை நாடிச் சாய்ந்து, பின் அந்தியில் தலை கவிழும் சூரிய காந்திபோல இருந்தது அவள் நிலை.

''அது என்னமோ, அன்று அந்த ராதை அழகாகக் கோலம் போட்டிருக்கலாம். இன்று நீ அவளைவிட அழகாகக் கோலம் போட்டுக் காண்பித்து விட்டாயே. இன்று கதை எழுதினேன் என்றால் அதில் நீதான் கதாநாயகி.''

''நானா? கதாநாயகியா?'' — பத்மா தலை நிமிர்ந்து ஆவலுடன் கேட்டாள்.

எங்கள் பேச்சுக் குரல் கொல்லையில் சாவித்திரிக்குக் கேட்டிருக்க வேண்டும். அவள் முன்னிலையிலேயே இப்போதெல்லாம் எங்களை அதிகம் பேச விடுவதில்லை. இன்று தனிமையில் எங்களைப் பேச விட்டுவிடுவாளா, என்ன?

''பத்மா, பத்மா, இங்கே வாயேன்.''

இடுப்பில் செருகியிருந்த புடவையை இழுத்து விட்டுக் கொண்டு பத்மா கொல்லைப்புறம் ஓடி விட்டாள்.

அந்த ஏன் கதாநாயகி பத்மாவா வீட்டை விட்டுப் பால்காரனோடு ஓடிப் போனாள்? என்னால் நம்பவே முடியவில்லை. ஊரார் கதை கட்டிவிட்டிருக்கிறார்கள். பாவம் அப்பாவி சாவித்திரி, அதை அப்படியே நம்பி விட்டாள்.

பாடியில் இரண்டு போர்வை போர்த்திக் கொண்ட பின்பும் குளிர் தாங்காமல் நடுங்கிக் கொண்டிருந்தேன். உதவிக்கு ஆள் இல்லாத போதுதான் உடம்புக்கு ஏதாவது வந்து சேரும். இவ்வளவுக்கும் சாவித்திரி சென்னைக்குப் போய் நான்கு நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள் இரண்டு கடிதங்கள் போட்டு விட்டாள். அந்த இரண்டிலும், 'உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் இருக்கும் போதே ராத்திரி பகல் தெரியாமல் எழுதுவீர்கள். இப்போது உங்களைத் தடுக்க ஆள் கிடையாது. உடம்புக்கு வந்து விட்டால் யார் கவனிப்பார்கள்? இவளுக்கென்ன என்று நீங்கள் சிணுங்குவீர்கள். இருந்தாலும், மனசு கேட்க



''கந்த சுயநலவாதியாக, நன்னலமே முக்கியம் என்று இருக்கிறீர்களே! இது நியாயமா?''
''என்ன சார்? இப்படித் திமிறு என்னைத் தாக்குகிறீர்கள்?''
''நம்ம ஆபிசிலே எல்லாரிடமும் கடன் வாங்குகிறீர்களாமே? எனக்காகவும் சேர்ந்து நீங்க வாங்கக்கூடாதா?''

மாட்டே னென்கிறதே!' என்று எழுதியிருந்தாள்.

நான் அதைப் பொருட்படுத்தவே இல்லை. இப்போது அதேபோல் உடம்புக்கு வந்து விட்டது. அவஸ்தைப்படுகிறேன். சே! என்னதான் தனி மனிதனாக வாழ்ந்து விடலாம் என்றாலும், நோயின் பிடியில் அகப்பட்டவுடன் மனம் துணைக்காக ஏங்குகிறது. இதயம் கவர்ந்த ஒரு பெண்ணின் சேவை உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் நலப்படுத்தத்தான் செய்கிறது.

யாராவது என்னை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டால் ஒருவேளை தூக்கித் தூக்கிப் போடும் உடல் நடுக்கம் குறையலாம்.

சாவித்திரியின் முகம் நிழலாடியது. சற்றைக்கெல்லாம் அந்த முகம் மறைந்து பத்மாவின் முகம் தோன்றியது. அதுவும் மறைந்து விடுமோ என்று நான் எண்ணிக் கொண்டிருக்கையில் அது பேசத் தொடங்கியது!

"ஒரு வார்த்தை எனக்குச் சொல்லி யனுப்பக் கூடாதா?"

பத்மா வந்திருக்கிறாளா? எப்போது வந்தாள்? எனக்கு ஜுரம் என்று அவளுக்கு எப்படித் தெரியும்? எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இமை கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

என் நிலையைக் கண்டதும் பத்மாவின் கண்கள் கலங்கிவிட்டன. அதைச் சமாளித்துக் கொண்டு, அவள் கம்பளிப் போர்வையை எடுத்து மிக உரிமையுடன் என் மேல் போர்த்தினாள். நடுக்கம் கொஞ்சம் குறைந்தது. நான் மீண்டும் அவளை நோக்கினேன். அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு தரையைப் பார்த்து நின்று கொண்டிருந்தாள். அவள் அழுகிறாற்போல் இருக்கிறதே. அசடு எதற்காக அழுகிறாள்?

"பத்மா...." என் குரல் நடுங்கியது.

சட்டென்று தலை நிமிர்ந்தாள். புடவைத் தலைப்பைக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள். "என்ன வேண்டும், சொல்லுங்கள்? அக்காவும் ஊரில் இல்லே. இப்படி யாராவது தனியாக அவஸ்தைப்படுவார்களா? ஊருக்கெல்லாம் உபதேசம் செய்யும் பெரிய எழுத்தாளர். வீட்டில் பார்த்தால் தனக்கு வேண்டியதைக்கூடச் சொல்லத் தெரியாமல்........."

உரிமையுடன் கடிந்து கொண்டாள் பத்மா. சாவித்திரிகூட இவ்வளவு சுதந்திரத்துடன் இருக்கமாட்டாள். கணவன் என்கிற அடக்கம் உண்டு. இவளோ தோழியைப் போலக் கடிந்து கொண்டாள்!

அதுவும் எனக்கு இதமாகத்தான் இருந்தது!

அருகில் வந்து என் கையைத் தொட்டுப் பார்த்துவிட்டு அதிர்ச்சியுடன் கூவினாள்: "என்ன இது? நெருப்பாய்க் கொதிக்கிறதே?"

அவள் முகம் பேயறைந்தாற்போல் வெளிறி விட்டது.

"ஒன்றுமில்லே — பத்மா — ஒன்றுமில்லே!" நான் என்னவோ சொல்ல எண்ணினேன். நாக்குழறியது.

"ஒன்றுமில்லேயா?" கோபத்தோடு என்னைப் பார்த்தவள் கலங்கிவிட்டாள்.

"டாக்டரை அழைக்கப் போகலாம் என்றாலும் உங்களை எப்படி இந்த நிலையில் தனியாக விட்டு விட்டு....."

அப்படிப்பட்ட என் பத்மாவா இன்று கல்வியறிவற்ற ஒரு பால்காரனோடு ஓடிவிட்டாள்? இருக்காது. ஒருகாலும் இருக்காது.

"**சா**ர், நீங்க உண்மையைச் சொல்லணும்." கையில் எதையோ மறைத்து வைத்துக்கொண்டு குழந்தையைப் போல் கேட்டாள் பத்மா.

நான் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். பத்மாவை நோக்கினேன். அவளது களங்கமற்ற முகத்தில் கேள்வியும் ஆவலும் போட்டியிட்டன. "நீங்கள்தானே, 'தேன் மலரான்'?"

"நீ என்ன சொல்லுகிறாய், பத்மா?"

"'மல்லிகை' என்ற பத்திரிகையில் 'இரண்டாம் தாரம்' என்ற கதைஎழுதி அதில் இரண்டாந்தாரமாக வரும் பெண்ணுக்குப் பத்மா என்று பெயரும் வைத்து விட்டு ஒன்றும் தெரியாதது போல் நடிக்கிறீர்களே! நடிப்பு பிரமாதம் சார். நீங்கள் எழுத்தாளர் வேலையைவிட்டு விட்டு நடிப்பு வேலையில் ஈடுபட்டால் இன்னும் நிறையப் புகழ் கிடைக்கும்." பத்மா பெருமிதத்துடனும் கிண்டலுடனும் பேசினாள்.

எனக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. "எங்கே கொடு, பார்க்கலாம்" என்றேன்.

படித்துப் பார்த்தேன். நடை கிட்டத்தட்ட என்னுடையது போலவே இருந்தது. தன் மனைவி இருக்கும் போதே இன்னொரு பெண்ணைக் காதலித்து, அவள் அனுமதியுடன் காதலியை மணந்துகொள்ளுகிறான் கதாநாயகன். — இது தான் கதை.

"பத்மா, இதைநான்எழுதவில்லே" என்றேன்.

நாங்கள் தனிமையில் பேசுவது சாவித்திரிக்கு எப்படியோ தெரிந்து விடும். அவள் வந்து விட்டாள். என் கையில் பத்திரிகையைப் பார்த்ததும், "என்ன, உங்கள் கதையா? எந்தக் கதை? இங்கே கொடுங்கள்" என்று வெடுக்கென்று பத்திரிகையைப் பிடுங்கிக் கொண்டு சமையலறைக்குப் போய் விட்டாள்.

பத்மாவிடம் ஒரு வார்த்தை பேசவில்லே. பத்மாவின் முகம் வாடிவிட்டது. அவளால் இந்த உதாசீனத்தைத் தாங்க முடியவில்லே. கண்களில் நீர் முட்டிக்கொண்டு வந்துவிட்டது. எங்கே நான் பார்த்துவிடப் போகிறேனோ என்று முகத்தைக் குனிந்து கொண்டே வேகமாகத் தன் வீட்டுக்கு ஓடி விட்டாள்.

இரவு மணி பத்து. தூக்கம் கண்ணைச் சுற்றியது. பேனாவை மூடிவைத்து விட்டுத் தூங்கலாம் என்று கட்டிலுக்குப் போனேன். எப்போதும் படுக்கையை உதறி, தட்டி ஒழுங்காக எடுத்து வைத்துக் கொசு வலையையும் கட்டி, மணம் கமழும் ஊதுவத்தியை ஏற்றி வைத்து விட்டு என் வரவுக்காகக் காத்திருக்கும் சாவித்திரி இன்று கட்டிலில் இல்லே. படுக்கை ஏதோ அரைகுறையாக விரிக்கப்பட்டிருந்தது. சாவித்திரி பாயைப் போட்டுக் கொண்டு கீழே படுத்திருந்தாள். இவ்வளவு நேரம் கட்டிலின் பக்கமாகப் படுத்திருந்தவள் நான் வந்ததைக் கண்டதும் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

"சாவித்திரி, ஏன் கீழே படுத்துவிட்டாய்? என்ன, கோபமா?" என்று கேட்டவாறே குனிந்து அவள் அருகில் உட்கார்ந்தேன்.

"என்னைத் தொட வேண்டாம். என்னோடு நீங்கள் ஒன்றும் பேச வேண்டியதில்லே." பதில் கோபமாக இருந்தது!

"என் மேல் கோபம் இருந்தால் அதற்காகத் தரையில் ஏன் படுக்கவேண்டும்? உடம்பு கெட்டு விடும், சாவித்திரி."

''இந்தக் கரிசனமெல்லாம் என்னிடம் வேண்டாம். உங்கள் பத்மாவிடமே வைத்துக் கொள்ளுங்கள்!''

''சரிதான். நீயும் ஏமாந்து விட்டாயா?'' 'மல்லிகை' பத்திரிகை உன்னை நன்கு ஏமாற்றி விட்டது. நிஜமாக அந்தக் கதையை நான் எழுதவில்லை, சாவித்திரி.''

''நான் நம்ப முடியாது.''

''அசடு, கண்டபடி பிதற்றுதே. எழுந்திரு.''

''முடியாது.''

''நான் எப்படிப் போனால் உங்களுக்கென்ன? என்னை விட்டு விடுங்கள்.''

''சாவித்திரி! பத்மாவைப்பற்றி இல்லாததும் பொல்லாததுமாக நீயே ஏன் கற்பனை செய்து கொள்கிறாய்?''

''நான் ஒன்றும் நினைத்துக் கொள்ளவில்லை. நீங்கள்தான் 'இரண்டாம் தாரத்தை' எழுதிப் பத்மாவையும் கல்யாணம் பண்ணிக் கொண்டு உங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தி யிருக்கிறீர்கள்.''

''சாவித்திரி, நீ என்னை நம்பவில்லையா? நிஜமாக நான் அதை எழுதவில்லை. என் பேறுவின் மீது ஆணை.''

''நிஜமாகவா?''

''நீதான் நம்பமாட்டேனென்கிறாயே?''

''உண்மையில் நீங்கள் பத்மாவை விரும்பவில்லையா?''

''அவளை நேசிக்கிறேன். உன்னைக் காதலிக்கிறேன்.''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. உங்கள் இதயத்தில் எனக்குத்தான் இடம். என்னைத்தான் நீங்கள் நேசிக்க வேண்டும்; விரும்ப வேண்டும்; காதலிக்க வேண்டும்.''

''அப்படித்தான் நீ என்னை நேசிக்கிறாயா?''

''பின்னே?''

''ராகவனிடம் நீ அன்பு செலுத்தவில்லையா?''

''அவன் நம் குழந்தையல்லவா?''

''அது போல்தான் பத்மாவும். கவலையை விடு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித நிறைவை ஒவ்வொருவர் கொடுக்க முடியும். என்னுடைய தாபத்துக்கு அவள் தோழமை இருக்கிறாள். அதை உன்னால் செய்ய முடியாது. அவளை எல்லாவற்றுக்கும் மேலாக விரும்புகிறேன். அங்கே தொடுவது என்பதற்கு அவசியமே இல்லை. எல்லாம் மனத்தால்தான். இணைய வேண்டும் என்ற தேவையும் இல்லை.''

''அப்படியா? சாயங்காலம் பத்மாவைக் கூப்பிட்டுச் சண்டையிட்டு, இனிமேல் என் வீட்டுக்கு வராதே என்று அனுப்பி விட்டேன்.''

''அடடா, அவள் என்ன சொன்னாள்?''

''ஒன்றும் சொல்லவில்லை. அழுது கொண்டே போய் விட்டாள்.''

''பொம்மனாட்டி புத்தியைக் காட்டி விட்டாய், சாவித்திரி!''



''திமர்னு நாலு திருடர்கள் வீட்டுக்குள் வந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?''

''அசடே! இப்படிக் கேட்கலாமா நீ? உன்னை கல்யாணம் செய்து கொண்ட நாளா உன்னை கேட்காமல் நான் ஏதேனும் செய்திருக்கேனா?''

''ம்க்கும்....உங்க ஆம்பிளைப் புத்தி எனக்குத் தெரியாதா? உங்களுக்கெல்லாம் இந்த விஷயத்தில் கொஞ்சம் இடம் கொடுத்தால் நாங்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான்!''

சாவித்திரி விளக்கை அணைத்துவிட்டு வந்தாள். அறையில் ஊதுவத்தியின் இனிய மணம் கமழ்ந்தது.

''ஏன்ன அப்படியே இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்து விட்டீர்கள்? எழுந்திருந்து குளிக்க வாருங்கள். நேரமாகிறது.'' என்னைக் கற்பனை உலகிலிருந்து இந்த உலகுக்கு இழுத்தாள் சாவித்திரி.

''சாவித்திரி, உண்மையாகவா பத்மா ஓடி விட்டாள்? அவள் ஓடி விட்டதாக யார் சொன்னார்கள்?''

''அவள் அக்காதான் சொன்னாள். அவள் அப்பாவின் பெயருக்குக் கடிதமே எழுதி வைத்து விட்டுப் போய் விட்டாளாம். அதைப் பார்த்த பிறகுதான் விஷயம் தெரிந்ததாம். அவள் அப்பாவே நேரில் போய் அவளைக் கூப்பிட்டாராம். 'நான் வரவில்லை. ராமசாமியையே கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்' என்று சொல்லி விட்டாளாம். அவர் என்ன செய்வார்? அவள் வயது வந்த பெண். பேசாமல் வந்து விட்டார்.''

நான் எழுந்து சட்டையைப் போட்டுக் கொண்டு சைக்கிளை எடுத்தேன்.

சாவித்திரி சைக்கிளைப் பிடித்துக்கொண்டாள்.

''யார் எப்படிப் போனால் நமக்கென்ன? அவளைப் பார்க்க நீங்க போகணுமா?'' குரலில் கவலை இழைந்தது.

''உங்களையெல்லாம் போல் பத்மாவை ஓடிப் போனவளாகக் கருத என்னால் முடியாது. கேவலத்தில் வைத்து அவளை நினைக்க என்னால் இயலாது. ஏதோ காரணம் இதில் இருக்கிறது. வழியை விடு.''

இவ்வளவு வேகமாக நான் சைக்கிள் ஓட்டியதே இல்லை. மூச்சு வாங்கியது. சைக்கிளை அப்ப

டியே சுவரில் சாத்தி விட்டுப் படபடவென்று ராமசாமி வீட்டுக் கதவைத் தட்டினேன்.

சற்றுநேரம் கழித்துக் கதவு மெல்லத்திறந்தது.

என்னைப் பத்மா எதிர்பார்க்கவில்லை என்பதை அவளது பார்வையே காட்டியது. என்னைக் கண்டு திடுக்கிட்ட பத்மா தலையைக் கவிழ்ந்து கொண்டாள். கண்ணீர் தரையை ஈரமாக்கியது. பத்மாவின் கண்ணீரல்லவா? தரையில் விழுந்து கோலமாக விரிந்தது!

நான் உள்ளே நுழைந்தேன். சின்ன அறை. ஒரு கோடியில் சைக்கிளும் பால் குவளையும் இருந்தன. மறுகோடியில் ஒரு பழைய பெட்டி. இரண்டொரு தட்டுமுட்டுச் சாமான்கள். தரையெல்லாம் பெயர்ந்து கல்லும் மண்ணுமாக இருந்தது. பழைய பத்திரிகைகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. இவைகளுக்கு நடுவே நெருப்பாய் நின்றாள் பத்மா. அதே வாயில் புடவை. முகத்தில் கவலை திரையிட்டிருந்தது. ராமசாமியைக் காணோம். வெளியில் போயிருப்பான் போலிருக்கிறது. பத்மா கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு மூலையில் கிடந்த பழைய நாற்காலியை எடுத்து என் அருகில் வைத்தாள். நான் உட்கார்ந்து கொண்டே கேட்டேன்:

"பத்மா, நீ என்ன காரியம் செய்திருக்கிறாய், தெரியுமா?"

"........ ...." விசும்பல் ஒலிதான் கேட்டது.

"பத்மா, நான் கேட்டதற்குப் பதில் இல்லையே?"

"பதில் சொல்லுவதால் பயன் இல்லை."

"பயன் உண்டோ, இல்லையோ, காரணம் தெரிய வேண்டும்."

"காரியமாக நான் இருக்கிறேன். அதுவே காரணம்."

"புரியும்படியாகப் பேச வேண்டும். உன்னால் உன் குடும்பத்துக்கு எவ்வளவு தலைக் குனிவு, தெரியுமா? பத்மா ஓடிப் போய் விட்டாள் என்று மற்றவர்கள் கூறுவதைக் கேட்கும்போது எனக்கு எவ்வளவு வேதனையாக இருக்கிறது தெரியுமா?"

"உங்களிடம் வெளிப்படையாகப் பேசப் போகிறேன். அது பெண்மைக்கு இயல்பாக இல்லாவிட்டாலும் எனக்குப் பிரியமானவர் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் எனக்கு முக்கியம். எனக்கு முன் மூன்று சகோதரிகள். அவர்களுக்குத் திருமணம் ஆன பிறகுதான் எனக்கு ஆகும். அதற்குப் பல வருடங்கள் பிடிக்கும். எனக்கு வயது ஏறிக் கொண்டே வந்துவிட்டது. உலகம் எப்படி என்பதை அறிவும், இன்பம் என்ன என்பதை உணர்ச்சியும் உணரத் துடிக்கின்றன. வயது வந்த, பருவமடைந்த பெண் ஆணைப் பார்க்கிறாள். மனத்தால் சுகம் காண்கிறாள். ஆணும் அப்படியே. ஆனால் ஓர் ஆணுடன் அதே பெண் துணிந்து அதை அத்தாட்சியுடன் கண்டால் அவள் இழுத்துக் கொண்டு போகப் பட்டவள்—ஓடிப் போனவள். பொதுவாக மன விபசாரம் உங்களுக்கு—உலகத்துக்கு—ஒப்புதல். வெளிப்படையான—உறவினர் அங்கீகாரமில்லாத மணம் கேவலம். போகட்டும். நான் ஓடி வரவில்லை; நடந்துதான் வந்தேன்!"

"உன் அப்பா அம்மா சகோதரிகள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள், தெரியுமா? உன் செய்கையால் ஏற்பட்ட கேவலம் அவர்களைத் தலை தூக்காமல் அடித்து விட்டதே!"

"அவர்களின் கேவலத்தில் நான் தோன்றினேன். அவர்களின் அவலம் என்னைக் கேவலத்துக்கு இட்டுச் சென்றது. நீங்களே சொல்லுங்கள்; வயது வந்த பெண்கள், விவரம் அறிந்த பெண்கள் எத்தனை நாட்கள்தான் கல்யாணம் ஆகாமல் இருப்பது?" என்று கேட்டாள்.

"இதில் முழுக் குற்றம் அவர்களுடையதாக இல்லாவிட்டாலும், அவர்களுக்கும் — இதில் ஓரளவு பங்குண்டுதான். இதுதான் உண்மையான காரணமா?" என்று கேட்டேன்.

"இல்லை....." விம்மல்களுக்கிடையே பதில் வந்தது.

"வேறு யார்?"

"நீங்கள்தான்."

என் தலையில் இடி விழுவதுபோல் இருந்தது: நான் திகைத்திட்டேன்.

"பத்மா, நீ.....நீ.....நீ என்ன.... சொல்லுகிறாய்......?"

விம்மல்களுக்கிடையே அவள் சிரித்தாள். இந்த நிலையிலும் அவள் அழகாகத்தான் இருந்தாள்.

"நீங்களும்—நானும்தான் காரணம்."

"இங்கே பார், பத்மா! வெளிப்படையாகச் சொல்லப் போவதாகச் சொன்னாய். ஆனால் என்னமோ புதிர் போடுகிறாயே!"

"இதோ, வெளிப்படையாகச் சொல்லத்தான் போகிறேன். உங்களுக்காவது நான் அதைச் சொல்லாவிட்டால் என் உடல் நிச்சயம் வேகாது. நீங்கள் எதிர் வீட்டில் குடியிருந்தீர்களே யொழிய வீட்டு வாடகை கொடுக்க வேண்டியது என்னிடம்தான். ஏன் தெரியுமா? என் இதயத்தில் நீங்கள் குடியிருந்தீர்கள். உங்கள் கதைகளைப் படித்து, உங்களுடன் பழகி, உங்களை நேருக்கு நேர் பார்த்து உங்கள் மேல் எனக்கு மாற்ற முடியாத அன்பு பிறந்தது. நீங்கள் அழகு வர்ணனை செய்யுமிடமெல்லாம் என்னை மனத்தில் கொண்டுதான் செய்வதாக எண்ணி மகிழ்வடைந்தேன். பொதுவாக எழுத்து நன்றாக இருக்கும்; எழுத்தாளன் அதற்கு மாறாக இருப்பான். ஆனால் உங்கள் விஷயத்தில் நேர் எதிரிடை. உங்கள் எழுத்தைவிட நீங்கள் அழகு. உங்கள் பொருத்தமான உடல் அமைப்பும், குறுகுறுப்பான கண்களும், வேடிக்கைப் பேச்சும், சுருள் கேசமும் எந்தப் பெண்ணையும் கவர்ந்து இழுக்கும். சாவித்திரி அக்காதான் உங்களை எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். அவர்களேதான் என்னை அப்புறப்படுத்தியும் விட்டார்கள். மனத்தால் நான் உங்களை நேசித்தேன். பழங்காலத்தில் சின்ன வயதிலேயே திருமணம் செய்து விடுவார்கள்; மனம் விழிக்கும் சமயம் உடலும் விழிக்கும். அதனால் பாதகமில்லை. ஆனால் இப்பொழுது மனம் விழித்துக் கொண்டு, துடிக்கும் போது சமுதாய, பொருளாதார காரணங்களால் உடல் விழிப்புக்குத் தடை போடப்படுகிறது. இது மிகக் கொடுமையில்லையா? உங்கள் குடும்ப நிலையில் நான் உங்க

பாங்க் என்றால் என்ன?

உங்கள் பணத்தை வைத்திருக்கவும் வேண்டும்போது எடுக்கவும் வசதியுள்ள இடம்.

பணத்தை வீட்டில் ஏன் வைத்துக் கொள்ளக்கூடாது?

வீட்டில் வைத்துக கொள்வது பாதுகாப்பானது அல்ல. பணம் திருட்டுப போகலாம். எலிகள் கறையான் அழித்துவிடக்கூடும் நமக்கு அவசியமில்லாத இனங்களுக்காக நாமே செலவழித்து விடவும் கூடும். பாங்கிலோ என் பணம் இரவு பகலாக பாதுகாப்புடன் வைத்திருக்கும் பாங்கு வட்டி கொடுபபதால் என் பணமும் வளருகிறது.

ஆச்சரியமாக இருக்கிறதே! உங்கள் பாங்கு எது அப்பா!

பஞ்சாப் நேஷனல் பாங்குதான், மகனே! மிகப் பழமையான, மிகப பெரிய பாங்குகளுள் ஒன்று. இதற்கு 480-க்கு மேற்பட்ட கிளைகளுண்டு.

பஞ்சாப் நேஷனல் பாங்க்



வியப்பூட்டும் 'ராப் அரவுண்ட்' டிரெட்டினால் பயர்ஸ்டோன் டயர்கள் உங்களுக்கு அளிப்பது



சுகமான சவாரி!

பயர்ஸ்டோன் கார் டயர்களிலுள்ள வியப்பூட்டும் 'ராப்-அரவுண்ட்' டிரெட் டிசைன், சாலைமீது அதிக பரப்பளவு ரப்பரை பதியச் செய்கிறது. இது காரணமாகவே குண்டும், குழியுமுள்ளவையும் சீரில்லாதவையுமான சாலைகள் மீதும் சுகமான சவாரி சுலபமாகக் கிட்டுகின்றது. மேலும், இதுவே எந்த விதமான மேற்பரப்புள்ள சாலைமீதும் எத்துணை வேகத்திலும் நிலைப்புறுதியையும், இணங்கி வேலைசெய்யும் தன்மையையும் கொடுக்கிறது. இத்துடன் கூட அதிக மைல்கள் ஓடச் செய்வதும், ஒவ்வொரு பயர்ஸ்டோன் டயருக்குள்ளும் அடங்குவதுமான 'சூப்-ர்-டஃப்' என்ற விந்தை ரப்பரின் நற்பலனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

Firestone

பயர்ஸ்டோன் 'ராப்-அரவுண்ட்' டிரெட் கூடிய டிலக்ஸ் சாம்பியன் டயர்

பயர்ஸ்டோன் உங்களுக்கு தரம், உழைப்பு இவைகளின் சின்னம்.

விடம் பங்கு பெற முடியாது. அக்காவுக்கு உங்களால் துரோகம் செய்ய முடியாது. இது துரோகமா? நிச்சயம் இல்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். ஆனால் உங்களை நான் பங்கு போட்டுக் கொள்ள அக்கா அனுமதிக்க மாட்டார்கள். என் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றினால், அது அவர்கள் கண்ணுக்கில் துரோகமாகப்படும்.... அன்று குளிரால் நடுங்கினீர்கள். நானே உங்களுக்குப் போர்வையானேன். அப்போதுதான் என் உள்ளத்தின் உண்மைப் போர்வை விலகியது. உங்களை நான் மனதாரக் காதலித்தேன்.....''

அவளுக்கு மூச்சு வாங்கியது. நான் மூச்சு விட முடியாமல் உட்கார்ந்திருந்தேன். சுய நினைவே இல்லாதது போன்ற உணர்வு எனக்கு. ஏதோ சொல்ல வாயெடுத்தேன். பேச்சு வெளி வரவில்லை. அதற்குள் பத்மா தொடர்ந்தாள்.

''ஆம். 'மனமாரக் காதலித்தேன். சிலர் சொல்லுவதுபோல் மனத்தால்மட்டும் வாழ்வது என்பதெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய். வெறும் பித்தலாட்டம்; தற்கொலை என்றுதான் நான் சொல்வேன். நான் மனத்தாலும் அதே சமயம் உடலாலும் வாழ விரும்பினேன். என்னால் என்னையே ஏமாற்றிக் கொள்ள முடியவில்லை. நீங்கள் அன்று வீட்டில் தண்ணீர் கொட்டிப் பெருக்கினீர்களே, அது என் கடமையை நீங்கள் செய்வதாகத் தோன்றியது. உங்கள் முகம் கோண என்னால் சகிக்க முடியவில்லை. அதனால்தான் நீங்கள் கொடுத்த கதையை இராப் பகல் என்று பாராமல் நான் 'டைப்' அடித்துக் கொடுத்தேன். எப்பாடுபட்டாவது உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து உங்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது. உங்களுக்கு உதவியதாக நான் சொல்ல வரவில்லை. எனக்கு நானே உதவிக் கொண்டேன். அதுதான் உண்மை. அன்று நீங்கள் ஜுரமாக இருந்தபோது உங்கள் கையை என் மார்போடு அணைத்துக் கொண்டேன். மயக்க நிலையில் இருந்ததால் உங்களுக்குத் தெரியாது. என் இதயத்தில் பட்டாவது உங்கள் கைகளுக்கு என்னை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றாதா என்ற தாபம் தான். 'மல்லிகை' பத்திரிகையில் 'இரண்டாம் தாரத்'தைப் படித்ததும் என் லட்சியம் நிறைவேறி விட்டதென்றே எண்ணினேன். அதைப் பகிர்ந்து கொள்ள உங்களிடம் ஓடி வந்தேன். நல்ல ஏமாற்றம் கிடைத்தது. உங்களை நான் குறை சொல்லவில்லை. அக்காவை நடத்துவது போல என்னை உங்களால் நடத்த முடியாது. நீங்கள் என்னிடம் வேண்டியது தோழமை. எனக்கு அதற்கு மேலும் தேவைப்பட்டது. அந்தத் தேவையின் வேகத்தில் நான் எங்கே உங்களைக் கட்டாயப்படுத்திவிடப் போகிறேனோ என்று பயந்தேன். உங்கள் இன்பம்தான் என் இன்பம். உலக வழக்கில் என் இதயம் உங்களோடு உறவாடுவதற்குத் தடையில்லை. ஆனால் உடல்? அதற்கு ஒரு தனியிட்டால்? அது எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அது தவிர்க்க முடியாததாகி விட்டது. அதற்கு வழி? வேறு யாரோடாவது அதைப் பிணைத்து விடுவதுதான்.

அதனால் எனக்கு மகிழ்ச்சியா — இல்லவே இல்லை. அதன்பின் என்னால் கட்டாயப்படுத்தப்பட்டாலும் நீங்கள் என்னைக் கண்டு அருவருப்பு அடைவீர்கள். அதனால் உங்களுக்கு நல்லதுதான். நான் எப்படியானாலும் சரி. உங்களுக்கு நன்மை விளைய வேண்டும். அதுதான் என் ஆசை.''

என்னால் ஒன்றும் பேச முடியவில்லை. ஆனால் பேசாமலும்இருக்க முடியவில்லை.

''ராமசாமி உன்னை...?'' நான் தயங்கினேன்.

''அவர் பால் கறக்கும்போதெல்லாம் ஆவல் பொங்கும் கண்களுடன் விழுங்கி விடுவதுபோல் பார்ப்பார். சில சமயம் கையில் இடிப்பதும் உண்டு. அதெல்லாம் எப்படியோ..... உங்களுக்குப் பயன்படாதது. உங்கள் இதயத்தை அவரிடம் காண முடியவில்லை. உருவத்தை ஓரளவு கண்டேன். அவருக்கும் எனது அழகும் உடலும் தான் இலட்சியமாக இருந்தன. என் உள்ளத்தைவிட உடலையே அதிகம் விரும்பினார். மனம் கலந்தால் உடலுக்குப் பிரிவினை. எனக்குத் தவிர்க்க முடியாத தண்டனை. என் உடலுக்கு அவர் விலங்கு ஆனார். என் வேகம், உங்கள் மன நிலை, அக்காவின் அபிலாஷை. எல்லாம் தெரியும். அதனால்தான் ஏதோ எனக்குச் சரி என்று பட்டதைச் செய்தேன்.''

கலங்கிய கண்களுடன், தளர்ந்த உடலுடன் பத்மா என் கால்களில் விழுந்து நமஸ்கரித்தாள். அவள் கண்ணீர் என் பாதத்தைச் சுட்டன.

என்னால் அங்கு நிற்க முடியவில்லை. என்னை நொந்து கொண்டு, என் எழுத்தைச் சபித்துக் கொண்டு என் உருவத்தைப் பறித்துக் கொண்டு என் கதாநாயகிக்காகக் கண்ணீர் சிந்தியவாறு தள்ளாடிக் கொண்டு வெளியே வந்தேன்!



வட்ட மேஜை

- ☐ இலங்கைத் தமிழரின் இன்னல்
- ☐ 'சிவ சேனை'
- ☐ தி.மு.க.வுக்கு ஒரு யோசனை

சிரிமாவோ — சாஸ்திரி உடன்படிக்கைப் படி இலங்கையிலுள்ள நாடற்ற தமிழர்களில் மூன்று லட்சத்தினரை இலங்கையர்களாகப் பதிவு செய்வதற்கும் ஐந்து லட்சத்தினரை இந்தியராக்கி அங்கு அனுப்புவதற்கும் வழி வகுக்கும் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஸெலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள நாடற்றவர்களின் பிரச்னை இலங்கை அரசாங்கத்தின் தனிப் பிரச்னையாகும் என்னும் நேரு கொள்கையே இந்நாடற்றவர்களுக்கு நலம் பயப்பதாகும். வரலாற்றுப் பின்னணியில் இதுதான் நீதியான நேர்மையான கொள்கையாகும். இதனை விடுத்து சாஸ்திரி அரசாங்கம் சிரிமாவோவின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக நாடற்றவரின் விருப்பத்துக்கும் நலத்துக்கும் மரபுக்கும் முன்னைய சட்ட உரிமைக்கும் மாறாக நாடற்ற தமிழரைச் சிங்கள அரசுக்குப் பலியாக்கியது. இப்பொழுது கொண்டுவரப்பட்ட சட்டம் பல வழிகளில் இம்மக்களுக்குத் துன்பம் விளைவிக்கிறது. இச்சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குமுன் இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் கருத்தையும் உடன்பாட்டையும் பெற்றிருக்க வேண்டும். இந்திய அரசாங்கம் இதனைப் பற்றிப் போதிய கருத்துச் செலுத்தவில்லை. எனவே இச்சட்டம் அமுலாக்கப்படுமுன் இந்திய அரசாங்கத்தை இச்சட்டத்தில் நாட்டம் கொள்ளச் செய்வதும், இச்சட்டத்தில் உள்ள பின்வரும் குறைகளை நீக்கினால் மட்டுமே இதனை ஏற்றுக் கொள்ளலாம் என இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்கச் செய்வதும் அவசியமாகும்.

1. இச்சட்டத்தில் இலங்கைக் குடியுரிமை பெறுபவர்களின் தகுதிகள் கூறப்படவில்லை.
2. இந்தியாவுக்குச் செல்ல விரும்புபவர்களே அனுப்பப்படுவர் என்பது சட்டத்தில் இடம்பெறவில்லை. இது இடம் பெறல் வேண்டும்.
3. கட்டாய நாடு கடத்தலுக்கு இச்சட்டம் வழிவகுக்கிறது.
4. இச்சட்டப்படி குடியுரிமை பெற்றவர்கள் வாழ்நாள் முழுவதும் பயத்துடனும் ஏக்கத்துடனும் வாழ வேண்டும். குடியுரிமை பெற்றபின் எக்காலத்திலும் அவர்களுக்கு மாறாகப் பொய்ச் செய்திகளை அனுப்பித் துன்புறுத்தலாம். மொட்டைக் கடிதத்துக்குக்கூட அதிகாரிகள் விசாரணை நடத்தி விரும்பினால் குடியுரிமையைப் பறிக்கலாம்.
5. இலங்கைக் குடியுரிமை நல்குவது பற்றிய இறுதி முடிவு அமைச்சருக்கே உரியது என்றும் இவரின் முடிவை எதிர்த்து எந்நீதி மன்றத்திலும் முறையிட முடியாது என்றும் உள்ள நிலை நியாயமானதல்ல.

கட்டாய நாடு கடத்தலைத் தான் எதிர்க்குமா என்பதை இந்திய அரசாங்கம் தெளிவுபடுத்துமாறு செய்ய வேண்டும். இந்தியாவுக்குத் திரும்ப விரும்புகிறவர்களை இந்தியா ஏற்கவும் ஏனையோருக்கு இலங்கை குடியுரிமை நல்கவும் தக்க முறையில் சிரிமா சாஸ்திரி உடன்படிக்கையை நடைமுறைப் படுத்தச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் உடன்படிக்கையைக் கைவிடச் செய்ய வேண்டும்.

இலங்கை
19—1—67 ஓர் இலங்கைத் தமிழர்

பணத்தைக் காட்டிச் சிலர் வோட்டுக் கேட்கிறார்கள்; பல்லைக் காட்டிச் சிலர் வோட்டுக் கேட்கிறார்கள்; குணத்தைக் காட்டிச் சிலர் வோட்டுக் கேட்கிறார்கள்; இனத்தைக் காட்டிச் சிலர் வோட்டுக் கேட்கிறார்கள்; ஆனால் பயத்தைக் காட்டி வோட்டுக் கேட்டதாக வரலாறு கூறவில்லை. அறுபத்தேழில் அதையும் சந்தித்தோம்.

''பார்வேக்கு வோட்டளியுங்கள். இன்றேல் உங்கள் வீட்டை எரித்திடுவோம்'' என்று பயம் காட்டி 'சிவசேனை' உறுப்பினர்கள் பம்பாய்வாழ் தென்னிந்தியர்களிடம் வோட்டுக் கேட்டனர்.

பூனா — 11
24—2—67 வே. சந்திரன்

மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெற்றுப் பதவியேற்றிருக்கும் தி. மு. க.வுக்கு நமது வாழ்த்து பூரணமாக உண்டு.

தி. மு. க. ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறி விட்டதால் அக்கட்சியின் தற்போதைய கொடி மாற்றப்பட வேண்டும். இப்பரந்த உலகில் எந்த நாட்டிலும் கறுப்பு வர்ணத்தை நாகரிகச் சின்னமாக எந்தக் கட்சியும் ஏற்றுக் கொள்ளவில்லை. கறுப்பு நிறம் எதிர்ப்பையும், குரோதத்தையும், அவநம்பிக்கையையும் வெளிப்படுத்துவது என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். எனவே, இக்கொடியை மாற்றி வேறு கொடியைத் தி. மு. க. ஏற்றுக் கொண்டால் அதன் மதிப்பு பன்மடங்கு பெருகும் என்பது திண்ணம். தூய வெண்ணிறத்தில் உதய சூரியன் சின்னமிட்ட கொடி சிறந்தது என்பது என் சொந்த அபிப்பிராயம்.

தி. மு. க.வின் மீதுள்ள அபிமானத்தினை காரணமாகவே இதைக் கூறினேன். இதை அக்கட்சித் தலைவர்கள் ஆமோதிப்பார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை—5
28—2—67 இர. செல்லப்பா

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



Kleertone
நேர்த்திக்கும்
சிக்கனத்திற்கும்
கிளியர்டோன்
இஸ்திரிப் பெட்டிகள்:
''எலகெண்ட்'' இஸ்திரிப் பெட்டி.
''இம்பீரியல்'' ஆட்டோமேடிக் இஸ்திரிப் பெட்டிகள்.
கெட்டில்கள்:
சூடெதிர்க்கும் கைப் பிடியும், குமிழ் மூடியும், பாதமும் பொருந்தியது ''இம்பீரியல்'' கெட்டில். ஸாஸ்--பேன் கெட்டிலும் கிடைக்கிறது
டோஸ்ட்டர்:
முறுகலான பொன்னிற டோஸ்ட்டுகள் தயாரிக்க.
ரேடியண்ட் ஹாட் பிளேட்:
ஒரு தொல்லையில்லை, பரபரப்பு இல்லை— உங்கள் சமையல் வேலையே இலகுவாகிவிடும்.
மடக்கக்கூடிய எஃகு பர்னிச்சர்:
கலையும் சிக்கனமும் பொருந்தியவை. சோபிக்கும் வர்ணங்களிலே நாகரீக வடிவழகு வாய்ந்தவை.
கிளியர்டோன் தயாரிப்புகள் என்றாலே உறுதியான பாதுகாப்பும் நிலையான மதிப்பும் உங்களுக்குக் கிடைப்பது நிச்சயம். செப்பம் செய்வதிலே யாதொரு தொல்லையும் இராது. ஏனெனில், நம் நாடெங்கும் இவ் வசதிகள் கிடைக்கின்றன. தவிர இத் தயாரிப்புகள் எல்லாவற்றுக்கும் 1 வருட கால உத்தரவாதம் தரப்படுகின்றன,
நல்வாழ்வுக்கே கிளியர்டோன் தயாரிப்புகள்
முக்கியமான எல்லா எலக்ட்ரிகல் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
GRA
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்.,
பம்பாய், கல்கத்தா, சென்னை, டெல்லி, பெங்களூர், செகந்திராபாத், பாட்னா.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி